# ஒரு சிலுவை பல சுமைகள்



தவக்கால சிலுவைப்பாதைகள் - 6

2024

Guanellian Publications

# பொருளடக்கம்


## பகுதி – 1

**கல்வாரிப் பயணத்தில் இயேசு, திருத்தந்தை, நாம்**

(திருத்தந்தை வழியில் சிலுவைப்பாதை சிந்தனைகள்)

அருட்பணி. பீட்டர், சென்னை

## பகுதி – 2

**உடைந்த தேகம்**

(உடல் உறுப்புக்கள் தொடர்பான சிலுவைப்பாதை சிந்தனைகள்)

திரு. ரோனா ஆல்பர்ட், சென்னை

## பகுதி – 3

**சிலுவைப் பயணம்**

(நடைமுறை வாழ்வில் நமக்குள்ள சிலுவைகளின் சிந்தனைகள்)

அருட்பணி. ஜெயசீலன் சவரியார்பிச்சை ச.ச, உரோமை

## பகுதி – 4

**இயேசப்பாவின் சிலுவைப்பாதை**

(தந்தை மகனுக்கு காட்டும் சிலுவையின்பாதை)

அருட்பணி. ஜோ எடல் வினோத் அ.ப.ச, உரோமை

## பகுதி – 5

**மனிதனும் இறைமையும்**

(வாழ்வியலை உணர்த்தும் சிலுவை வழி சிந்தனைகள் )

ரீட்டா, பாண்டிச்சேரி

## பகுதி – 6

**அவரோடு அவராக**

(மனிதம் தழைக்க மறுபரிசீலனை செய்யும் சிந்தனைகள்)

அருட்பணி. ஆச்சரியம் அ.ப.ச, சென்னை

# அணிந்துரை



"ஆண்டவரைச் சந்தித்து அவர் தரும் மகிழ்ச்சியை அனுபவித்தவர்கள் அதை மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்ளாமல் இருக்க முடியாது" எனக் கூறுகிறார் நம் திருத்தந்தை பிரான்சிஸ் ஆண்டவர் இயேசுவின் வாழ்வில் அவரால் நலம் பெற்ற மனிதர்கள், தங்கள் மகிழ்ச்சியை, தாங்கள் பெற்ற நலமான அனுபவத்தை மற்றவர்களுக்கும் பகிர்ந்ததை நற்செய்தியில் நாம் அறிவோம். அது மகிழ்ச்சியின் அனுபவம்!

ஆண்டவர் இயேசுவின் துயர் வேளையில், சிலுவையின் பாதையில் அவரோடு பயணித்து அவருடைய துன்பங்களில் பங்கு கொண்ட மனிதர்கள், தங்கள் துயர அனுபவத்தை யாருடன் பகிர்ந்திருப்பார்கள்? உயிரோட்டமான அம்மனிதர்களின் பங்கேற்பு நிகழ்வுகள் வாயிலாய் இயேசுவின் துயரங்களைப் பகிர்ந்து கொள்பவர்கள் இன்றளவும் நாமாகத்தான் இருக்கிறோம். இயேசுவின் பாடுகள் நமக்கு சிலுவைப்பாதை தியானமாகப் பகிரப்படுகிறது. எழுத்து வடிவில் இயேசுவின் சிலுவைப் பயணப் பாதையின் பாடுகளை பகிரும்பொருட்டு எம் அன்பின் பணியாளர் சபை "**ஒரு சிலுவை…பல சுமைகள்**" என்னும் இச்சிலுவைப்பாதை நூலை வழங்கியிருக்கிறது. 6 சிலுவைப்பாதைகளின் தொகுப்பான இந்நூலை அன்பர்கள் வாசித்து, இயேசுவின் பாடுகளில் ஒன்றித்துப் பயன் பெற வேண்டுகிறோம்.

"நம்பிக்கையைத் தொடங்கி வழி நடத்துபவரும், அதை நிறைவு செய்பவருமான இயேசுவின் மீது கண்களைப் பதிய வைப்போம். அவர் தாம் அடையவிருந்த மகிழ்ச்சியின் பொருட்டு, இழிவையும் பொருட்படுத்தாமல் சிலுவையை ஏற்றுக்கொண்டார்" (எபிரேயர் 12:2). இயேசுவின் அனுபவங்களை நாம் வாழ்வாக்கிக் கொள்ளும்போது அவரின் மகிழ்ச்சி நமக்குள்ளும் தங்கும் என்பது மறுக்க முடியாத உண்மை. இப்புத்தகத்தின் உருவாக்கத்திற்கு உதவிய அனைத்து நல்ல உள்ளங்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இப்புத்தகம் உங்கள் சிந்தனைகளுக்கு உயிர் தந்து வாழ்க்கையை சீராக்கும் கருவியாக அமையும் என நம்புகிறேன், படித்துப் பயன்பெற உங்களை அன்புடன் அழைக்கிறேன்.
இறைவன் உங்களை ஆசீர்வதிப்பாராக…

– அருட்பணி. பிரான்சிஸ் சேவியர்

# சிலுவைப்பாதை – 1

*கல்வாரிப் பயணத்தில் இயேசு, திருத்தந்தை, நாம்*



அருட்பணி. பீட்டர்

# கல்வாரிப் பயணத்தில் இயேசு, திருத்தந்தை, நாம் பயணத்தில் பணிவு, கனிவு, துணிவு

**முன்னுரை**

வாழ்வின் பயணங்கள் முன்குறித்து வைக்கப்படாதவை. எப்போது, யார், எங்கே பயணிப்பார் என்று யாருக்கும் தெரியாது. சிலர் பயணத்தைத் திட்டமிடுவோம். செயல்படுத்த முடியாது. சிலர் திட்டமிடாத பயனத்திற்குள் சிக்கிக் கொள்வோம். வெகுசிலரே தங்கள் பயணத்தைத் திட்டமிட்டு அதனைச் செயல்படுத்தும் ஆற்றலைப் பெற்றிருக்கின்றனர். இறைவனின் துணையின்றி மனிதர்கள் தங்களது திட்டத்தைச் செயல்படுத்த முடியாது.

இறைமகனாகிய இயேசு தனது வாழ்வின் பயணத்தை, தனது இறப்பின் பயணத்தை முன்கூட்டியே திட்டமிடுகிறார். திட்டமிட்ட பயணத்தில் பங்கேற்கிறார். பரமனின் பணிவுப் பயணம் கல்வாரியில் தொடங்கியது அல்ல. அந்தப் பயணத்தின் இலக்கு கல்வாரி மலையில் நிறைவேறுகிறது. அவரது அன்பின் பயணத் தொடக்கம் மனுஉருவாவதில் தொடங்குகின்றது. அதாவது: கடவுள் தனது நிலையை விட்டுக் கீழிறங்கி பணிவுப் பயணத்தைத் தொடங்குகின்றார்.

இத்தகைய பணிவு நிறைந்த பாதையில் நடப்பது இறைமகனுக்கு இலகுவாகும், மனிதர்களுக்கு இது சாத்தியமில்லை என்று தோன்றலாம். இயேசு மட்டுமல்ல நம்மோடு வாழ்கிறவர்களும் இத்தகைய வாழ்க்கை வாழ்ந்து கொண்டு இருக்கிறார்கள் என்பது நமக்கு மிகப்பெரும் உந்து சக்தியாக இருக்கிறது.

மனிதர்களிலும் மிகப் பெரும் அதிகாரத்தில், ஆட்சிப்பீடத்தில் இருந்தாலும் பணிவோடு வாழும் நபர்கள் இருக்கத்தான் செய்கிறார்கள். அவர்களின் வாழ்வை இயேசுவின் பயணத்தோடு ஒப்பிட்டுப் பார்க்கிறபோது, அவர்களைப்போல வாழ நாமும் ஆற்றல் பெறுகிறோம். அந்த விதத்தில் இன்றைக்கு பணிவின் பயணத்தின் மிகப்பெரிய முன்னுதாரணம் நமது திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள்தான். இயேசுவின் கல்வாரிப்பயணத்தில் பங்கேற்கும் நாம் திருத்தந்தையின் வாழ்வில் நடந்த நிலைகளையும் ஒப்பிட்டு நமது வாழ்க்கைக்கான பாடங்களைக் கற்றுக் கொள்வோம்.

## முதல் நிலை
## பிலாத்துவை யூதர்கள் பயன்படுத்திக் கொள்கிறார்கள்

**முதல்வர்** : திவ்விய இயேசுவே! உம்மை ஆராதித்து வணங்கி, உமக்கு நன்றியறிந்த தோத்திரம் செய்கிறோம்.

**அனைவரும்** : அதெனென்றால் உமது பாரமான திருச்சிலுவையாலே உலகை மீட்டு இரட்சித்தீர்.

தனக்கு என்ன ஆதாயம் என்கிற நிலையில் ஒவ்வொருவரும் பொருளையும், நபர்களையும் பயன்படுத்திக் கொள்கிறோம். யூதர்கள் அதுவரை பிலாத்துவை சீண்டிக் கூடப் பார்க்காதவர்கள். இப்போது பிலாத்துவை தங்களது ஆதாயத்திற்காகப் பயன்படுத்திக் கொள்கிறார்கள். இயேசுவின்மீது குற்றம் சுமத்த வேண்டும். அதற்காக என்ன வேண்டுமானாலும் செய்யலாம், எதையும் மற்றும் யாரையும் பயன்படுத்திக் கொள்ளலாம் என்ற முடிவுக்கு வருகிறார்கள். அதனால்தான் யூதர்கள் பிலாத்துவைப் பயன்படுத்திக் கொள்கிறார்கள். அதேபோன்று, தனது பதவியையும், அதிகாரத்தையும் தக்க வைத்துக் கொள்வதற்கு பிலாத்து யூதர்களின் வேண்டுகோளுக்கு இணங்கி, தானே அதிகாரம் படைத்தவனாக தன்னைக் கட்டமைத்துக் கொள்கின்றான்.

மைக்கேல்பட்டி ஹாஸ்டல் வார்டன் சகோதரி சகாயமேரி மீது அபாண்டமாகப் பழி சுமத்தப்பட்டது. ஒரு கட்சி தனது செல்வாக்கை இந்திய அளவில் வளர்க்க, குற்றமற்ற ஒரு சகோதரியின் செயலை, குற்றமாகக் கட்டமைத்து, அவரைப் பழிவாங்கினார்கள். அதிகாரத்தைப் பயன்படுத்திக் கொண்டார்கள். இது எப்போதும் நடப்பதுதான். ஒரு சூழலைப் பயன்படுத்தி உண்மை என்னவென்று தெரிவதற்கு முன்பே குற்றம் சுமத்தித் தீர்ப்பிடுவது என்பது மிகத் தவறல்லவா? பொருட்களைப் பயன்படுத்துங்கள், மனிதர்களைப் பயன்படுத்தாதீர்கள்.

**திருத்தந்தை பிரான்சிஸ்**

அவர்களைத் தீர்ப்பிட நான் யார்? என்கிற கேள்வியைத் திருத்தந்தை 28 ஜூலை 2013 அன்று கேட்டார். குற்றவாளிகளைக் கடவுள் தீர்ப்பிடுவார். நாம் நமது சொந்த ஆதாயத்திற்காக, அரசியல் இலாபத்திற்காக, ஒரு சூழலைப் பயன்படுத்துவது, தனது மேன்மைக்காக

பிறரைப் பயன்படுத்திக் கொள்வது, பிறரைத் தீர்ப்பிடுவது – இவைகள் எல்லாம் முற்றிலும் தவறாகும்.

‘திருத்தந்தையாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட பிறகு தனக்கு செய்தித்தாள் தினமும் போட்டவரைத் தொலைபேசியில் அழைத்து மறுநாளில் இருந்து தனக்குச் செய்தித்தாள் தேவையில்லை என்றும், இதுவரை தனக்கு செய்தித்தாள் வழங்கியதற்காக நன்றியும் தெரிவித்தார்.’ இது அவரது பணிவிற்கும், அதிகாரத்தில் இருந்தாலும் சரியானதைச் செய்ய வேண்டும் என்பதற்கான முன்னுதாரணம்.

**நம் வாழ்வில்**

எத்தனை பேரை நாம் நமது வாழ்வில் பயன்படுத்தி இருக்கிறோம்? எத்தனை பேரை நாம் மனிதர்களாக மதித்து இருக்கிறோம். பலரை நாம் வெறும் பொருளாகவே பயன்படுத்துகின்றோம். அப்பாவை பணம் கொடுக்கும் பர்சாக, அம்மாவை சமையல்காரராக, அண்ணனை காவல்காரனாக, தம்பியை நம் இரகசியக் காப்பாளராக/ பணியாளராக என்று ஒவ்வொருவரையும் பயன்படுத்துகின்றோம்.

**செபிப்போம்**

அநியாயமாக தீர்ப்பிடப்பட்டவர்களுக்காக மன்றாடுவோம். அவர்களின் தேவைக்காக நம்மைப் பயன்படுத்தியவர்கள் மனம் திருந்தவும், நமது சுயநலனுக்காக வேறு யாரையும் நாம் பயன்படுத்தாமல் இருக்கவும், மனித நேயத்தோடு நடக்கவும் அருள் வேண்டி மன்றாடுவோம்.

**அனைவரும்** : எங்கள் பேரில் தயவாயிரும் சுவாமி எங்கள் பேரில் தயவாயிரும்.

**முதல்வர்** : மரித்த விசுவாசிகளின் ஆத்துமாக்கள் சர்வேசுரனுடைய இரக்கத்தினால் நித்திய சமாதானத்தில் இளைப்பாறக்கடவது.

## இரண்டாம் நிலை
## நிலை மரம் மனுமகனை இன்னும் பணிவாக்குகிறது

**முதல்வர்** : திவ்விய இயேசுவே!......

**அனைவரும்** : அதெனென்றால்......

மரம் நிலத்தோடு சேர்ந்தே இருப்பது. நிலத்தினின்று மரத்தைப் பிரிக்க முடியாது. பிரித்தால் அது பெரும் சுமையாகவே இருக்கும். நிலத்தினின்று பிரிக்கப்படுகிற அது ஏதாவது ஒரு குறிப்பிட்ட செயலுக்காகப் பயன்படுத்தப்படுமே தவிர, அதனால் வாழ்வைக் கொணர முடியாது. பழங்களை உற்பத்தி செய்ய முடியாது. காற்றை சுத்தப்படுத்த முடியாது. அது வாழ்விழந்தது. ஆனால், வாழ்வை இழந்த மரத்தை வைத்து, நிலத்தினின்று பிரிக்கப்பட்ட மரத்தை வைத்து, மனுமகன் இயேசு மனுக்குலத்திற்கே வாழ்வைத் தருகின்றார். பிரிந்திருக்கிற, கடவுள்-மனித உறவைப் புதுப்பிக்க, நிலத்தினின்று பிரிக்கப்பட்ட மரத்தில், மண்ணுக்கும் விண்ணுக்கும் நடுவில் தொங்கி, இணைப்புப் பாலம் அமைக்கிறார். மனுமகனால் மரத்திற்கும் பெருமை – மனுக்குலத்திற்கும் வாழ்வு. எதைக் கொண்டாவது நாம் வாழ்வை வழங்க வேண்டும். அது வெட்டப்பட்ட மரமாக இருந்தாலும் சரி, அதனைக் கொண்டும் வாழ்வை வழங்க முடியும். வெட்டப்பட்ட மரம் யார் கையில் இருக்கிறது என்பதைப் பொறுத்தே அதன் பயன்பாடு அதிகமாக இருக்கிறது. அதுவே அவரைப் பணிவுள்ளவராக ஆக்கியது. சாவை ஏற்கும் அளவிற்கு – அதுவும் சிலுவைச் சாவையே ஏற்கும் அளவிற்கு ... பணிவுள்ளவரானார்.

**திருத்தந்தை பிரான்சிஸ்**

திருத்தந்தையாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட பிறகு பிரேசிலுக்குத் தனது முதல் பயணத்தை மேற்கொண்டபோது (ஜூலை 2013) எல்லாரும் அல்இத்தாலியா விமானத்தில் புறப்படத் தயாராக இருக்கிறார்கள். திருத்தந்தை படியில் ஏறுவதற்கு முன்பு 'எனது பை எங்கே?' என்று கேட்கிறார். 'ஏற்கனவே விமானத்தில் வைத்தாயிற்று' என்கிறார்கள். 'இல்லை அதை எடுத்து வாருங்கள்' என்று கேட்கிறார். நீண்ட விவாதத்திற்குப் பிறகு அதை எடுத்து வருகிறார்கள். விமானத்தில் பொறுமையிழந்த நிருபர்கள் என்ன ஆயிற்று என்று எட்டிப்பார்க்கிறபோது – திருத்தந்தை தனது பையோடு விமானப் படிக்கட்டில் ஏறிக்கொண்டிருக்கிறார். அதைப் பார்த்த ஒரு நிருபர் அவருடைய பையை அவரே தூக்கிக்கொண்டு நடக்கிறார், (He carries his own bag) என்று சொல்கிறார்.

இயேசு தனது சிலுவை மரத்தைத் தானே சுமந்தது போல – திருத்தந்தை தனது பையை அவரே தூக்கிக் கொள்கிறார். எத்தனை எத்தனையோ நபர்கள்

கடுமையான சுமைகளை எல்லாம் தூக்கிச் சுமக்கிறார்கள். வெறும் பைதான். இரண்டு கிலோ கூட இருக்காது. ஆனால் சிலுவை மரம் என்பதைப் போல, அது திருத்தந்தையின் ‘பணிவின்’ அடையாளமாக இருக்கிறது. மரமா, பையா என்பதில் இல்லை – எதுவுமே நமது பணிவின் அடையாளமாக இருக்கலாம்.

**நம் வாழ்வில்**

நாம் நமது சுமையை யாரிடமாவது ஏற்றி வைக்கிறோமா? அல்லது நமது சுமையை நாமே சுமக்கிறோமா? எனது சுமையை எனது அண்ணனின் மேல், அம்மாவின் மேல், அப்பாவின் மேல் ஏற்றி வைக்கிறேனா?

**செபிப்போம்!**

சுமை தூக்கிகளுக்காக மன்றாடுவோம். வாழ்வு முழுவதும் சுமை தூக்கித் தூக்கியே கூன் விழுந்த அவர்களுக்காக மன்றாடுவோம். நமது சுமைகளை தூக்கிச் சுமந்தவர்களுக்காக மன்றாடுவோம். நமது சுமைகளை நாமே சுமக்க வரம் வேண்டுவோம்.

**முதல்வர்** : எங்கள் பேரில்.....

**அனைவரும்** : எங்கள் பேரில்.....

**முதல்வர்** : மரித்த விசுவாசிகளின்......

## மூன்றாம் நிலை
## பணிவிருந்தாலும் பலம் இல்லை

**முதல்வர்** : திவ்விய இயேசுவே!......

**அனைவரும்** : அதெனென்றால்......

இயேசு முதல் முறை கீழே விழுகிறார். கீழே விழுதல் என்பது பல பாடங்களைத் தருகிறது. தடுக்கி விழுந்தவரே கவனமுடன் நடப்பார். விழுதல் என்பது நாம் மீண்டும் கவனத்தோடு நடப்பதற்காக மட்டுமல்ல. நாம் பலவீனமானவர்கள் என்பதை உணர்த்துவதுதான் அதன் நோக்கம். ஒவ்வொரு மனிதரும் ஓரளவிற்கு மேல் சுமையைச் சுமக்க முடியாது. உள்ளத்தில் ஆசை இருக்கலாம் ஆனால் உடலில் வலுவிருக்காது. ஆன்மா வலுவானது உடலோ வலுவற்றது (மத். 26:41). கல்வாரிப் பயணத்தில், இயேசு ‘தான் மனிதனே’ என்பதை நமக்கு எண்பிக்கிற நிகழ்வு முதல் முறை கீழே விழுதல். அவர் கடவுளாக இருக்கலாம். ஆனால் முழு மனிதன்தானே. பணிவுள்ளவராக இருக்கலாம் ஆனால் முழு மனிதராக நம்மைப் போல பலம் இல்லாதவர்தானே!

உடல் பலவீனமானதுதான். இதை மறுப்பதிற்கில்லை. தனது உடலின் தன்மையையும் பலத்தையும் அறிந்து கொள்கிறவர் பலமுறை கீழே விழுந்தவராகத் தான் இருப்பார். விழாமல் நமது பலம் நமக்குத் தெரியாது. விழாமல் உடல் பலம் பெறவும் முடியாது. இயேசு கீழே விழுந்து தனது பலத்தை அதிகப்படுத்திக் கொள்கிறார்.

**திருத்தந்தை பிரான்சிஸ்**

2016– ஆம் ஆண்டு, திருத்தந்தை போலந்து நாட்டில் வழிபாடு செய்கிற போது தடுமாறிக் கீழே விழுந்தார். உடல் பலவீனமானது. அவரும் கீழே விழுந்தார் என்பது செய்தியில்லை. அதற்குப் பிறகு அவரிடம், இவ்வளவு வேகமாகக் கீழே விழுந்தும் உங்களுக்கு அடி படவில்லையே எப்படி? அவர் சொன்னார்: "நான் கீழே விழும்போது அதைத் தடுக்க நான் முயலவில்லை. அதன் போக்கிலேயே விழுந்தேன்." விழுதலைத் தடுக்க நினைத்து அவர் தனது கையை ஊன்றியிருந்தால் ஒருவேளை அவரது கை உடைந்திருக்கலாம். விழுதல் என்பது இயல்பு. மனித வாழ்வின் இயல்பு. அதை அவமானமாகக் கருத வேண்டிய அவசியம் இல்லை.

**நம் வாழ்வில்**

நாம் பலமுறை விழுந்திருப்போம். அதனால் களைப்படையத் தேவையில்லை. இது நமது வாழ்வின் ஓர் அங்கம். அச்சமோ கலக்கமோ வேண்டாம் என்கிற திடத்தோடு வாழ்வோம். விழுதல் என்பது அடுத்த முறை கவனமாக நடக்க விடுக்கப்படும் அழைப்பு என்பதை உணர்ந்து வாழ்வோம்.

**செபிப்போம்**

நோயாளிகளுக்காக - பலமற்றவர்களுக்காக, படுத்த படுக்கையாய் இருப்பவர்களுக்காக – நமது இல்லங்களில், தாத்தா, பாட்டி, அம்மா, அப்பா, பேரப்பிள்ளைகள். வலுவிழந்த அனைவருக்காகவும் மன்றாடுவோம். பலம் தாரும் இயேசுவே! என் நோய் நீங்கி, உடல் பலம் பெற்று, எழுந்து நடக்க வரம் தாரும் என்று வேண்டுவோம்.

**முதல்வர்** : எங்கள் பேரில்.....

**அனைவரும்** : எங்கள் பேரில்.....

**முதல்வர்** : மரித்த விசுவாசிகளின்......

## நான்காம் நிலை
## அன்னை மரியாவைச் சந்தித்தல்

**முதல்வர்** : திவ்விய இயேசுவே!......

**அனைவரும்** : அதெனென்றால்......

ஆற்றல் தருகிற அன்பானவர் நம் தாய் அன்னை மரியா. துன்பங்கள் தனது தாங்கும் பலத்தைத் தாண்டி கீழே விழத்தாட்டும்போது, தாயின் கண்ணைக் கனிவோடு தேடுகிறார் இயேசு. தான் கீழே விழுந்த போது தன்னை ஓடித் தூக்கிய தன் தாய் தனது அருகில் இருப்பதைப் பார்த்து தொடர்ந்து நடப்பதற்கான ஆற்றலைப் பெற்றுக் கொள்கிறார்.

**திருத்தந்தை பிரான்சிஸ்**

ஏப்ரல் 3 2020 அன்று தான் வழங்கிய மறையுரையில், அன்னை ஒரு போதும் பட்டங்களை விரும்பியதில்லை. அவருக்கு மிகப் பொருத்தமான பட்டம் என்று சொன்னால், இயேசு வழங்கிய 'தாய்' என்கிற பட்டம் மட்டுமே. அதுவே அவருக்கு மிகப் பொருத்தமாக இருக்கிறது என்கிறார். உரோமை, பீட்டர் சதுக்கத்தில் (2013 ஆம் ஆண்டு) தன்னைப் பார்க்க வந்த திருப்பயணிகளுக்கு செபமாலை வழங்கி "இது ஆன்மிக மருந்து: இது இதயத்திற்கும், ஆன்மாவிற்கும், முழு வாழ்விற்குமே நல்லது" என்று சொன்னார்.

மேலும், "நம் அன்னையாம் மரியாவின் இதயத்தோடு இணைந்து கிறிஸ்துவின் திருமுகத்தை தியானிக்கும்போது, அது, ஒரே ஆன்மிகக் குடும்பமாக, இன்னும் அதிகமாக நம்மை ஒன்றிணைக்கும், மற்றும் இப்போது நாம் எதிர்கொள்ளும் சோதனையை வெல்வதற்கு உதவும் என்றும்" திருத்தந்தை தன் மடல் ஒன்றில் குறிப்பிட்டுள்ளார். அது மட்டுமல்லாமல் தனக்கு ஆற்றல் தேவைப்படும்போதெல்லாம் அன்னையின் கனிவான பார்வையை நோக்கித் திருப்புகிறார்.

**நம் வாழ்வில்**

பிரச்சனை எனில் நாம் அன்னையைத் தேடுகிறோமா? நம்மைத் தேடி வரும் அன்னையை நாம் அன்போடு உபசரிக்கிறோமா? அன்னையிடம் மிகுந்த பக்தி கொண்டிருக்கிறோமா? தினமும் அன்னையின் திருமுகத்தைப் பார்ப்போம். தினமும் செபமாலை செபிப்போம்.

**செபிப்போம்!**

துன்ப முடிச்சுகளால் கட்டப்பட்டு, ஒன்றன் பின் ஒன்றாக சிக்கலில் மாட்டிக் கொண்டிருக்கிற நமது குடும்பத்தில் இருக்கிற உறுப்பினர்களுக்காக மன்றாடுவோம்.அன்னையின் பரிந்துரை நாடும் உள்ளம் வேண்டுமென்று செபிப்போம்.

**முதல்வர்** : எங்கள் பேரில்.....

**அனைவரும்** : எங்கள் பேரில்.....

**முதல்வர்** : மரித்த விசுவாசிகளின்......

## ஐந்தாம் நிலை
## சீமோன் உதவி செய்தல்

**முதல்வர்** : திவ்விய இயேசுவே!......

**அனைவரும்** : அதெனென்றால்......

சீமோன் இயேசுவிற்கு உதவி செய்கிறார் மத். (27:32), லூக் (23:26). இயேசு நல்ல சமாரியன் என்கிற ஓர் உவமையைச் சொல்லியிருக்கிறார். அது நமக்கு நன்றாகத் தெரியும். குற்றுயிராகக் கிடந்த ஒருவரை அப்படியே விட்டுவிடாமல் உதவிய அந்த நல்ல சமாரியன் சீமோன் வடிவில் நமக்கு நினைவுக்கு வருகிறார். சீமோனுக்கு இயேசுவைத் தெரியாவிட்டாலும் மிகவும் மோசமான நிலையில் இருந்த இயேசுவுக்கு அவர் உதவ முன்வருகிறார். தெரிந்தவருக்கு உதவுவதைக் காட்டிலும் நாம் அறியாதவர்களுக்கு உதவுதலே அன்பின் உச்ச வடிவம். இயேசு அதைத்தான் நமக்குச் செய்கின்றார். சீமோன் சிறிய விதத்தில் அவருக்குச் செய்கின்றார்.

**திருத்தந்தை பிரான்சிஸ்**

நமது திருத்தந்தை உதவி செய்வதில் உத்தமர். சீமோன் உதவி செய்வதைப்போல. தனக்குத் தெரியாதவர்களுக்கு, துன்புறுவோர்களுக்கு உதவி செய்வதில் நல்ல சமாரியனாகவே வாழ்பவர். நவம்பர் 17, 2019

அன்று 1500 ஏழை மக்களை வரவழைத்து, அவர்களோடு உணவு அருந்தினார். ஏப்ரல் 2016 அன்று கிரேக்கத் தீவான லெஸ்போஸ் சென்று திரும்பும் போது 12 இஸ்லாமிய அகதிகளை (அதில் ஆறு குழந்தைகள்) தனது விமானத்தில் அழைத்து வந்தார்.

**நம் வாழ்வில்**

நாம் ஏழைகளாக இருந்தாலும், நமக்குத் தெரிந்தவர்களுக்கு உதவுவதில் அதிகக் கவனம் செலுத்துகிறோம். நமக்கு முகம் தெரியாதவர்களுக்கு உதவுவதில் கவனம் செலுத்துவது மிகக் குறைவு. அதனால்தான் இயேசு எதையும் செய்கிறபோது யாருக்கும் தெரியாமல் மறைவாய் செய்யுங்கள் என்கிறார். அப்போது கைம்மாறு மிகுதியாகும்.

**செபிப்போம்!**

ஏழைகளுக்காக செபிப்போம். அரசுகள் அவர்களின் வாழ்வு நிலையை உயர்த்துவதற்கு முயற்சி எடுக்க வேண்டுவோம். நாம் நமது வாழ்வில், தேவையில் இருக்கும், நாம் அறியாத ஏழை மக்களுக்கு உதவும் பரிவு வேண்டும் என்று மன்றாடுவோம்.

**முதல்வர்** : எங்கள் பேரில்.....

**அனைவரும்** : எங்கள் பேரில்.....

**முதல்வர்** : மரித்த விசுவாசிகளின்......

## ஆறாம் நிலை
## வெரோணிக்கா முகம் துடைக்கிறார்

**முதல்வர்** : திவ்விய இயேசுவே!......

**அனைவரும்** : அதெனென்றால்......

நம் பரமன் இயேசுவிடம் அவரது பணிவைப் போலவே, நிறையத் துணிவும் இருந்தது. அதைத்தான் தனது சீடர்களிடமும் எதிர்பார்த்தார் இயேசு. ஆனால் அவரது சீடர்கள் அவரை விட்டு ஓடினார்கள். ஒரு பெண் சீடர் மட்டும் துணிச்சலோடு வருகிறார். இது சாதாரணமான நிகழ்வு அல்ல. இதற்கு அவருக்கு இரண்டு விதமான துணிச்சல் வேண்டும். ஒன்று அதிகாரிகளைக் கடந்து வருகிற துணிச்சல். மற்றொன்று அந்த இயேசுவின் கோர முகத்தைப் பார்த்து, அதன் அருகில் இருக்கும் துணிச்சல். இது இரண்டுமே அவருக்கு வந்தது. மைக்கேல் பட்டியில் படித்த குழந்தை ஒன்றிற்கு வெண்குஷ்டம். எனவே அக்குழந்தையின்

தாயே அவளை வீட்டில் அனுமதிக்கவில்லை என்கிற செய்தியை அறிந்திருப்போம். ஆனால் அருட்சகோதரிக்கு அந்தப் பெண்ணின் அருகில் இருக்கும் துணிச்சல் இருந்தது.

**திருத்தந்தை பிரான்சிஸ்**

சக்கர நாற்காலியில் இருக்கிற வெரோணிக்கா என்கிற 14 வயது பெண் குழந்தை (ஜுன் 2, 2016). நரம்புக் கோளாறினால் அல்லது குறைபாடுகள் காரணமாக அவளால் நடக்க முடியாது. அவள் அதற்குள் ஐந்து புத்தகங்களுக்கு மேல் எழுதியிருக்கிறாள். அந்தப் பெண் தனது ஒரு புத்தகமான "த தீப் ஆஃப் ஷாடோவ்ஸ்" என்கிற புத்தகத்திற்கு இத்தாலிய நாட்டின் இலக்கிய விருது ஒன்றைப் பெற்றாள். அந்தக் குழந்தை தனது மிகப் பெரிய கனவாக திருத்தந்தையைப் பார்க்க வேண்டும் என்றாள். அது அவளுக்குக் கை கூடியது. வெரோணிக்கா என்கிற ஒரு வீரப் பெண், எத்தகைய குறைபாடுகள் இருந்தாலும் அதைக் கண்டு அஞ்சாமல் துணிவோடு தாம் நினைத்ததைச் சாதிக்கத் துடிக்கிறாள். அதேபோல அந்தப் பெண்ணும் திருத்தந்தையைச் சந்திக்கிறார். அதற்கு திருத்தந்தையும் உதவியாக இருக்கிறார்.

கூட்டத்தில் செல்ல துணிவு வேண்டுமென்றால் தனியாகச் செல்லவும் துணிவு வேண்டும். கொரோனா கொடுந்தொற்றுக் காலத்தில் திருத்தந்தை தனி ஆளாக உரோமை வீதிகளில் நடந்து சென்று யோவான் லாத்தரன் ஆலயம் சென்றதை உலகம் அவ்வளவு எளிதில் மறந்திருக்காது. அதேபோல அருகில் செல்வதற்குமான துணிச்சல் வேண்டும் என்று சொன்னோம். திருத்தந்தை, முகம் கோரமான ஒரு மனிதனைக் கட்டியணைத்து அவரது தலையில் கை வைத்து, முத்தமிட்டு, அவரோடு செபித்த காட்சி நம்மை உலுக்கியது.

**நம் வாழ்வில்**

இறைவன் கொடுத்திருக்கிற உடலை நாம் அப்படியே ஏற்றுக் கொள்கிறோமா? இன்றைக்கு பிளாஸ்டிக் சர்ஜரி - முகத்தை அழகுபடுத்தும் சிகிச்சைகள், இவைகளில் அதிகக் கவனம் செலுத்தி, கோர முகத்தோடு, நோயினால், குறைபாட்டினால், அல்லது நமக்கு பிடிக்காத அருவருப்பான முகத்தோடு இருக்கிற மனிதர்களைக் கருணையோடு அணுகுகிறோமா? நோய் பரவாத நோய் என்றாலும் கூட நாம் அவர்கள் அருகில் செல்லத் தயங்குகிறோமா?

**செபிப்போம்!**

மனவருத்தத்தோடு, மருத்துவ வசதிகள், மருந்துகள் இல்லாமல் இப்படி இருக்கின்ற மனிதர்களுக்காக செபிப்போம்.

**முதல்வர்** : எங்கள் பேரில்.....

**அனைவரும்** : எங்கள் பேரில்.....

**முதல்வர்** : மரித்த விசுவாசிகளின்......

## ஏழாம் நிலை
## இயேசு இரண்டாம் முறை கீழே விழுகிறார்

**முதல்வர்** : திவ்விய இயேசுவே!......

**அனைவரும்** : அதெனென்றால்......

இயேசு முதல் முறை கீழே விழுந்தார். தனது சிலுவை பாரத்தை சுமக்க முடியாமல் விழுந்தார். இம்முறை நமது பாவங்கள் அவரது சிலுவையின்மீது அதிக பாரத்தைச் சுமத்துகிறது. அதைக் கழுவ வேண்டுமெனில் அந்தப் பாவத்தின் சுமையை உலகுக்குக் காட்ட வேண்டியிருக்கிறது. எவ்வளவு தூரத்திற்கு பாவ வாழ்க்கை ஒருவனைக் கீழே வீழ்த்தும் என்பதை அது உணர்த்துகின்றது. அது நம்மிடம் இருந்து கழுவப்பட வேண்டும் என்றால் நாமும் நமது முழங்கால்கள் கீழே பட நாம் விழ வேண்டியிருக்கிறது. பணிந்து, குனிந்து, ஆண்டவரிடம் மன்னிப்பு வேண்டல் செய்ய வேண்டியிருக்கிறது.

**திருத்தந்தை பிரான்சிஸ்**

திருத்தந்தையாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட பிறகு தலை குனிந்தாரே – அதுதான் பணிவின் அடையாளம். அதைவிட மிக முக்கியமானது, அவர் ஒரு குருவின் முன் உலகம் பார்க்க முழந்தாள்படியிட்டு பாவசங்கீர்த்தனம் செய்ததுதான். ஒப்புரவு அருட்சாதனம் வழங்க இருந்தவர் இன்னொரு குருவின் முன் (28 மார்ச் 2014) தனது பாவங்களுக்காக முழந்தாள்படியிட்டுக் கீழே விழுந்தது.

**நம் வாழ்வில்**

என் பாவங்களுக்காக விழுந்த இயேசுவே என் பாவங்களை மன்னியும் என்று ஒப்புரவு அருளடையாளத்தில் நாம் நமது பாவங்களை அறிக்கையிட்டு மன்னிப்பைப் பெறும்போது, இயேசுவின் பாரச் சிலுவையிலிருந்து பாரம் குறைகிறது.

**செபிப்போம்!**

குற்ற உணர்வோடு வாழ்கின்ற மனிதர்கள் தங்களது குற்றங்களை ஏற்றுக்கொள்ளும் துணிவை இறைவன் அவர்களுக்குத் தர வேண்டுமென்றும், ஒப்புரவு அருட்சாதனத்தை வழங்குகின்ற குருக்கள் இறைவனின் இரக்க முகத்தை வெளிப்படுத்துகின்ற கருவிகளாகவும் இருக்க வேண்டுமென்று மன்றாடுவோம்.

**முதல்வர்** : எங்கள் பேரில்.....

**அனைவரும்** : எங்கள் பேரில்.....

**முதல்வர்** : மரித்த விசுவாசிகளின்......

## எட்டாம் நிலை
## எருசலேம் பெண்களுக்கு ஆறுதல் சொல்லுதல்

**முதல்வர்** : திவ்விய இயேசுவே!......

**அனைவரும்** : அதெனென்றால்......

தனது துன்பத்தையும் நினைக்காமல் சமூகத்தால் ஒடுக்கப்பட்டிருக்கின்ற பெண்களுக்கு இயேசு ஆறுதல் சொல்லும் நிலை மிகப் பெரும் பாடத்தை நமக்குத் தருகிறது. துன்புறும் வேளையில் ஆறுதல் தேடுகிறவர்கள் ஆறுதல் சொல்லுவது எவ்வளவு பெரிய பாடம். இயேசு அதைத்தான் செய்கிறார்.

**திருத்தந்தை பிரான்சிஸ்**

திருஅவையில் பாலினப் பாகுபாட்டு இடைவெளியைக் குறைக்க, திருத்தந்தை தன்னால் இயன்றதைத் தொடர்ந்து செய்து வருகிறார். அதற்கான எதிர்ப்புகள் இருந்தாலும் அதைப் பற்றி சிறிதும் கவலை கொள்ளாமல் பணியாற்றுகிறார். சகோதரி நத்தலி பெக்கார்ட் – திருஅவை வரலாற்றில் முதல் முறையாக ஆயர் மாமன்றத்தின் முதல் “நேருதவிச் செயலாளராக” நியமிக்கப் பட்டிருக்கிறார் – வாக்கு உரிமையோடு (2021 பிப்ரவரி). அது மட்டுமல்ல, முதல் முறையாக வத்திக்கான் ஸ்டேட்டின் மிக உயரிய பதவி ஒன்றிற்கு, சகோதரி ரபாயேலா பெத்ரினி அவர்களை ஆட்சி நிர்வாகத் துறைக்கு அமர்த்தியிருக்கிறார் (2021 நவம்பர்).

**நம் வாழ்வில்**

நாம் என்ன செய்கிறோம்? பெண்களைப் படிக்க வைக்கிறோமா? ஆண்களுக்கு நிகராக பெண்கள் இச்சமூகத்தில் வாழ வேண்டும் என்று நினைக்கிறோமா? அதற்கான செயல்பாடுகளை முன்னெடுக்கிறோமா?

**செபிப்போம்**

இன்னும் தனது வீட்டை விட்டு வெளியேறாமல், தங்களது சுதந்திரத்தை இழந்து வாடுகின்ற பெண்களுக்காக மன்றாடுவோம்.

**முதல்வர்** : எங்கள் பேரில்.....

**அனைவரும்** : எங்கள் பேரில்.....

**முதல்வர்** : மரித்த விசுவாசிகளின்......

## ஒன்பதாம் நிலை
## மூன்றாம் முறை இயேசு தரையில் விழுகிறார்

**முதல்வர்** : திவ்விய இயேசுவே!......

**அனைவரும்** : அதெனென்றால்......

இயேசு பலமின்றியும், நம்முடைய பாவங்களுக்காக விழுந்தார் என்பதும் உண்மைதான். ஆனால் அவரது இந்தப் பாரம் பயணம், கீழே மீண்டும் விழுதல் என்பது அவரது தேவைக்காக அல்ல. நமது தேவைக்காக, மானுடரின் மீட்பிற்காக அவர் விழுகிறார். இன்னொருவர் வாழ்வு பெற நாம் கீழே விழுவதில் ஒரு தவறும் இல்லை என்பதையே இயேசு இந்த நிலையில் நமக்குச் சுட்டிக் காட்டுகிறார்.

**திருத்தந்தை பிரான்சிஸ்**

திருத்தந்தை உடல் வலிமையின்மையினால் விழுந்தார் என்பது ஒருபுறம், தனது பாவத்திற்கு கழுவாய் தேட அவர் விழுந்தார் என்பதும் ஒரு புறமிருக்க – உலக அமைதிக்காக, ஏறக்குறைய 4,00,000 மக்கள் இறப்பதற்குக் காரணமான போர் முடிவுக்கு வர வேண்டுமென்று, திருத்தந்தை தெற்கு சூடான் தலைவர்களின் (சல்வா கீர் மற்றும் ரீக் மச்சார்) கால்களில் விழுந்தார். முகங்குப்புற விழுந்தார். எண்பத்தி இரண்டு வயதில், அவர் மீண்டும் விழுந்து எழுந்து, விழுந்து எழுந்து, என் சகோதரர்களே உங்களை, என் முழு உள்ளத்தோடு, வேண்டி விரும்பிக் கேட்டுக் கொள்கிறேன். தயவு செய்து போரை முடிவுக்குக் கொண்டு

வாருங்கள் என்று உயர்ந்த பதவியை வகிக்கக் கூடிய திருத்தந்தை, பிறரின் கால்களில் விழுகின்றார். தனக்காக விழுந்தார் என்பதல்ல. மானுடரின் நலத்திற்காக அமைதிக்காக விழுந்தார் (11 ஏப்ரல் 2019).

**நம் வாழ்வில்**

இன்றும் நாம் நமது சொத்தைக் காப்பாற்றிக் கொள்வதற்காக குடும்ப உறவுகளிடையே சண்டையிடுகிற நபர்களாக இருக்கிறோம். சண்டையிடுவது தனது சகோதரனோ சகோதரியோ என்றாலும் நம்மால் விட்டுக் கொடுக்க முடியாமல் இருக்கின்றோம். நாம் பணிவோடு விட்டுக் கொடுக்க முடியுமா? நமக்கு அறிமுகமே இல்லாத இருவர் சண்டையிட்டுக் கொண்டிருந்தால் நம்மால் அவர்களின் முன் பணிந்து சண்டையை விலக்கி அமைதியைக் கொண்டு வர முடியுமா?

**செபிப்போம்!**

குடும்பத்தில் சொத்துக்காகப் பிரிந்திருக்கிற உறவுகளுக்காகவும், நாடுகளுக்கிடையே சண்டையிடுவதையே வழக்கமாகக் கொண்டிருக்கின்ற தலைவர்கள் அமைதியை நிலை நாட்ட வேண்டுமென்றும், யார் சண்டையிட்டுக் கொண்டிருந்தாலும் அவர்கள் வாழ்வு நலம் பெற வேண்டும் என்று உழைக்கிற நல்லெண்ணம் கொண்ட நபர்களுக்காகவும் மன்றாடுவோம்.

**முதல்வர்** : எங்கள் பேரில்.....

**அனைவரும்** : எங்கள் பேரில்.....

**முதல்வர்** : மரித்த விசுவாசிகளின்......

## பத்தாம் நிலை
## இயேசுவின் ஆடைகளைக் களைகிறார்கள்

**முதல்வர்** : திவ்விய இயேசுவே!......

**அனைவரும்** : அதெனென்றால்......

ஒருவரை அதிகமாக அவமானப்படுத்த வேண்டுமென்றால் அவரை நிர்வாணப்படுத்துவது போதுமானது. இயேசு சாட்டையில், முள்முடியில், பாரமான சிலுவையில், கீழே விழுதலில் என்று எதிலும் அவமானப்பட்டதாக அவர் நினைக்க வில்லை. அதனால்தான் தனக்காக அழுகிற எருசலேம் நகரப் பெண்களுக்கு அவரால் ஆறுதல் சொல்ல

முடிந்தது. அதனால்தானோ என்னவோ அவர்கள் அதிகபட்ச அவமானமாக அவரது ஆடையையும் களைகிறார்கள். அவரோ அதையும் கண்டு கொள்வதாக இல்லை.

**திருத்தந்தை பிரான்சிஸ்**

திருத்தந்தையில் செயல்பாடுகள் பலருக்கு வெறுப்பையே கொண்டு வந்திருக்கும். அவரது உண்மையான சொற்களும், செயல்பாடுகளும், சமத்துவமிக்க சமூகத்தை உருவாக்க நல்லெண்ணம் கொண்டவர்களோடு சேர்ந்து உழைப்பதும் என்கிற அவரது முயற்சிகள் வெகுவாகப் பாராட்டப்பட்டாலும், இன்னும் அவரை அதிகமாக வெறுப்பவர்கள் உண்டு. உண்மைக்கு மாற்றாக செய்திகளைப் பரப்புவதும், பொய்களைக் கூறி ஒருவரின் நற்பெயருக்கு களங்கம் விளைவிப்பதும் அவரை நிர்வாணப்படுத்தி அவமதிப்பதற்கு சமமானதுதான். இன்று எவ்வளவுக்கு எவ்வளவு விரும்பப்படுகிற நபராக திருந்தந்தை பிரான்சிஸ் தோன்றினாலும் இன்றைக்கு அதிகமாக வெறுக்கப்படுகிற நபராகவும் அவர் இருக்கிறார்.

சர்வாதிகாரிகளை வெறுக்கிறவர்கள் இருப்பார்கள். அதனால் வெறுக்கப்படுகிறவர்கள் எல்லாம் இயேசு இல்லை, பிரான்சிஸ் இல்லை. அவருடைய பணிவினால் அவர் புகழ் பெற்றிருந்தாலும், அவருடைய சீர்த்திருத்தங்களால் திருஅவைக்குள்ளிருந்தே அவருக்கு நிறைய எதிர்ப்பும் வெறுப்பும் உள்ளது. '**Caligula**' என்று கூட சிலர் அவரை அழைக்கின்றனர். அவரை வெறுப்பவர்கள், கடவுளை நம்பாதவர்களோ, இஸ்லாமியர்களோ, பிரிந்துபோன சகோதரர்களோ இல்லை, மாறாக கத்தோலிக்கக் கிறிஸ்தவர்களே! என்று ஆண்ட்ரூ பிரவுன் (27 அக்டோபர் 2017) கூறுகிறார்.

**நம் வாழ்வில்**

பல சமயங்களில் நாம் நமக்குப் பிடிக்காதவர்களை கருத்துக்களால் எதிர்கொள்வதற்குப் பதில் உடல் ரீதியிலான அல்லது மன ரீதியாக அவர்களை அவமானப்படுத்தி அவர்களை வெற்றி கொள்ள நினைக்கின்றோம். அது ஒருவரை நிர்வாணப்படுத்துவதற்குச் சமமானது.

**செபிப்போம்!**

உடுத்த உடையின்றி இருக்கும் ஏழை மக்களுக்காகச் செபிப்போம். பிறரை உடல் மற்றும் மன ரீதியாக துன்புறுத்தும் நபர்கள் மனம் திருந்தவும் மன்றாடுவோம்.

**முதல்வர்** : எங்கள் பேரில்.....

**அனைவரும்** : எங்கள் பேரில்.....

**முதல்வர்** : மரித்த விசுவாசிகளின்......

## பதினொன்றாம் நிலை
## ஆணிகளால் அறைவது

**முதல்வர்** : திவ்விய இயேசுவே!......

**அனைவரும்** : அதெனென்றால்......

இயேசுவை சிலுவையில் அறைவது என்பது ஒருவரது சுதந்திரத்தைக் குறைத்து விடுவது. பாலஸ்தீனத்தின் வடக்கு முதல் தென்பகுதி முழுவதும் சுதந்திரமாய் நடந்து சென்று நற்செய்தி போதித்த இயேசு மூன்று ஆணிகளுக்குள்ளாக அடித்து, அடைத்து வைக்கப்படுகின்றார். இயேசுவும் அதை விரும்பி ஏற்றுக் கொள்கின்றார்.

**திருத்தந்தை பிரான்சிஸ்**

தன்னைச் சுருக்கிக் கொள்வது. தன்னையே ஒரு குறுகிய இடத்தில் அடைத்துக் கொள்வது என்பது ஒவ்வோருவரின் சுதந்திரத்தைப் பொறுத்து அமைய வேண்டுமே தவிர கட்டாயப்படுத்த முடியாது. அதை விரும்பி ஏற்பது மிகப்பெரும் மதிப்பீடாகும். நமக்கு வாய்ப்புக் கிடைக்குமெனில் நாம் ஓர் அரண்மனை கட்ட ஆசிப்போம். திருத்தந்தை தனக்குக் கொடுக்கப்படுகின்ற அரண்மனையை மறுதலித்தார் "என்னால் தனியாக அரண்மனையில் வாழ முடியாது. அந்த இல்லம் மிகப் பெரியது; விசாலமானது. ... எளிமை ... எல்லாவித எளிமையும் ... திருச்சபையில் தொண்டாற்றும் எங்கள் அனைவருக்கும் அவசியம் தேவை என்பதை நான் நம்புகின்றேன் (28 ஜுலை 2013) என்றார். திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் திருஅவையின் மீது கொண்ட கனிவினால் தன்னை அறைந்து கொண்டார். ஏழ்மையினால் தன்னை அறைந்து கொண்டார். பணிவினால் தன்னை அறைந்து கொண்டார்.

**நம் வாழ்வில்**

நாம் தேவையற்ற ஆடம்பரங்களால் நமது வாழ்வை அணி செய்து அழகு பார்க்கிறோமா? அல்லது அன்றாட, அத்தியாவசியப் பொருட்களோடு மட்டும் நமது வாழ்வை நடத்த முயல்கிறோமா?

**செபிப்போம்!**

நுகர்வுக் கலாச்சாரத்திற்கு அடிமையாய் இருக்கிறவர்களுக்காக மன்றாடுவோம். மக்களை நுகர்வுக்கான சந்தையாக மட்டும் நினைத்து இலாபம் பார்க்கும் பெரு நிறுவனங்கள் சந்தை இலாப நோக்கைக் கைவிட்டு, உண்மையான தேவைகளை நிறைவேற்றும் பொருட்களை உருவாக்க அறிவைத் தரவேண்டும் என்று செபிப்போம்.

**முதல்வர்** : எங்கள் பேரில்.....

**அனைவரும்** : எங்கள் பேரில்.....

**முதல்வர்** : மரித்த விசுவாசிகளின்......

## பன்னிரெண்டாம் நிலை
## இயேசு உயிர் விடுகிறார்

**முதல்வர்** : திவ்விய இயேசுவே!......

**அனைவரும்** : அதெனென்றால்......

இயேசு மனித வாழ்விற்காக சிலுவையில் தனது உயிரை விடுகின்றார். அவரது உயிர் எடுக்கப்படவில்லை; கொடுக்கப்படுகின்றது. இன்னமும் பெரும்பாலான பண்பாடுகளில், சிலுவை என்பது துன்பத்தைக் கொண்டுவரும் அடையாளமாகவும், இறப்பின் அடையாளமாகவும் மட்டுமே பார்க்கப்படுகின்றது. எனவேதான் சிலுவையை வைத்திருந்தால் துன்பங்கள் வரும் என்று வீட்டில் சிலுவையை வைப்பதில்லை. சிலுவை துன்பத்தின் அடையாளம் மட்டுமல்ல அது தியாகத்தின் அடையாளம், அன்பின் அடையாளம் மற்றும் கனிவின் அடையாளம். அதைத்தான் இயேசுவின் சிலுவைச் சாவு உணர்ந்த்துகிறது.

**திருத்தந்தை பிரான்சிஸ்**

2014 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 6 ஆம் நாள் அன்று திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் உரோமையில் உள்ள குருக்களைச் சந்தித்த போது

அவர் தனது அங்கியில் உள்புறம் உள்ள பாக்கெட்டில் ஒரு சிலுவையை வைத்திருப்பதாகவும், அது இல்லாமல் ஒருபோதும் வெளியில் சென்றது இல்லை என்றும் சொன்னார். அது இறைவனின் இரக்கத்தின் அடையாளமாக இருக்கிறது என்று சொன்னார். (இந்தச் சிலுவையை திருத்தந்தை இரண்டாம் ஜான் பால் அர்ஜென்டினாவுக்கு வந்தபோது அவருக்கு ஒப்புரவு அருட்சாதனம் வழங்கியவரும், திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின் ஆன்மிக குருவுமான, ஒப்புரவு அருட்சாதனம் வழங்கும் குருவானவர் இறந்து சவப்பெட்டியில் வைக்கப்பட்டிருந்தபோது, அவரது கைகளில் வைக்கப்பட்டிருந்ததை எடுத்ததாகச் சொன்னார். அப்படி எடுக்கும் போது “எனக்கு உமது இரக்கத்தில் பாதியைத் தாரும்” என்று வேண்டிக்கொண்டு எடுத்ததாகச் சொன்னார்.)

**நம் வாழ்வில்**

சிலுவை என்பது துன்பங்களைக் கொண்டு வருவதல்ல. மாறாக இரக்கத்தைக் கொண்டு வருவது என்பதை உணர்ந்திருக்கிறோமா? ஒவ்வொருமுறை சிலுவையைப் பார்க்கிறபோது அது காட்டும் கடவுளின் அன்பையும், இரக்கத்தையும் கண்டுணர்கிறோமா என்று சிந்திப்போம்.

**செபிப்போம்!**

உலகம் முழுவதும் அன்பை விதைக்க முயலும், துன்பத்தை ஏற்றுக் கொள்ளும் நல்ல மனிதர்களுக்காய் மன்றாடுவோம். பிறருக்காய் துன்புற்று அவர்களுக்கு நமது அன்பை வெளிப்படுத்தும் துணிவை வேண்டி செபிப்போம்.

**முதல்வர்** : எங்கள் பேரில்.....

**அனைவரும்** : எங்கள் பேரில்.....

**முதல்வர்** : மரித்த விசுவாசிகளின்......

## பதின்மூன்றாம் நிலை
## தாயின் மடியில்

**முதல்வர்** : திவ்விய இயேசுவே!......

**அனைவரும்** : அதெனென்றால்......

அன்னை மரியா தனது உள்ளத்தை ஒரு வாள் ஊடுருவும் என்கிற சிமியோனின் வார்த்தையை தனது வாழ்வில் அனுபவிக்கிற அன்னையாக இருக்கிறார். ஒவ்வொரு துன்பத்திற்கும் பொருள் உண்டு

என்கிற உண்மையை உணர்ந்தவராக, தனது மகனின் இழப்பு என்பது மானுட மீட்பிற்கான தேவை என்பதை உணர்ந்தே தன் மகனை தனது மடியில் கிடத்துகின்றார். பிறர் வாழ தனக்குச் சொந்தமானதை இழப்பதற்கு ஒரு துணிவும், பிறர் துன்பம் களைய அதற்கான வழியை கண்டுணர்வதையும் அன்னை அறிந்திருந்தார். எனவே இத்துன்பமும் பிறர் துன்பம் களைவதற்கான வழியாகவே ஏற்றுக் கொள்கிறார்.

**திருத்தந்தை பிரான்சிஸ்**

திருத்தந்தை பிரான்சிஸ் ஜெர்மனியில் படிக்கும் போது துன்ப முடிச்சுக்களை களையும் அன்னையின் திருஉருவப் படத்தை முதலில் வணங்குகிற வாய்ப்பு அவருக்குக் கிடைத்தது. அதன் பிறகு துன்ப முடிச்சுக்களை களையும் அன்னையிடம் அவரது பரிந்துரைக்காக அவரை நாடத் தயங்கியதே இல்லை. ஒவ்வொரு முறையும் துன்பங்கள் வருகின்ற போது அதை அவர் அன்னையிடம் ஒப்படைக்கிற அழகான பண்பைப் பெற்றிருந்தார். கொரோனாவின் கட்டுக்களில் உலகம் இருந்த போது, இந்தத் துன்பத்தை அவிழ்க்க வேண்டுமென்று அன்னை மரியாளிடம் 2021 மே மாதம் 31 ஆம் நாளில் அகில உலகத்தையும் ஒப்புக் கொடுத்து, அனைவரின் துன்பங்களும் களையப்பட வேண்டும் என்று வேண்டிக் கொண்டார்.

**நம் வாழ்வில்**

துன்ப முடிச்சுக்கள் நமது வாழ்வில் சூழும்போது, நாம் தடுமாறுகிறோமா? நமது துன்பங்களில் ஆறுதல் சொல்ல அன்னை மரியா தயாராக இருக்கிறார்.

**செபிப்போம்!**

தனது குழந்தைகளை இழந்த தாய் மற்றும் பெற்றோருக்காக மன்றாடுவோம்.

**முதல்வர்** : எங்கள் பேரில்.....

**அனைவரும்** : எங்கள் பேரில்.....

**முதல்வர்** : மரித்த விசுவாசிகளின்......

## பதினான்காம் நிலை
## இயேசு அடக்கம் செய்யப்படுகின்றார்

**முதல்வர்** : திவ்விய இயேசுவே!......

**அனைவரும்** : அதெனென்றால்......

அமைதி என்பது அனைவருடைய வாழ்விலும் மிக அவசியமான ஒன்றாக இருக்கின்றது. இயேசு அடக்கம் செய்யப்பட பிறகு அனைவரும் அமைதியாய் இருப்பதற்கான வாய்ப்பை இது உருவாக்கித் தருகிறது. கூட நடந்து வந்த அன்னை மரியா, ஓடிப்போன இயேசுவின் சீடர்கள், சீடர்களின் பிரதிநிதியாய் வந்த யோவான், பெண் சீடர்கள், அவரைச் சிலுவையில் அறைந்த அதிகாரிகள், படை வீரர்கள் என்று அனைவருமே இந்த நிகழ்விற்குப் பிறகு தங்கள் இடங்களில் இதைப்பற்றி பேசுவதற்கான, சிந்திப்பதற்கான வாய்ப்பை இயேசுவின் அடக்கம் வழங்குகின்றது.

இந்தக் கல்வாரிப் பயணத்தில் பங்கேற்ற நமக்கும் இந்த அமைதி அவசியமான ஒன்றாக இருக்கிறது. இந்தப் பயணம் கொடுக்கிற பாடங்களை அமைதியில் தியானிக்க நம்மை அழைக்கின்றது.

**திருத்தந்தை பிரான்சிஸ்**

கிறித்தவத் தியானம் என்பது மிக அவசியம் என்று திருத்தந்தை சொல்கிறார். 2021 ஏப்ரல் மாதம் 28 ஆம் தேதி, கிறித்தவத் தியானத்தின் அவசியம் மற்றும் தேவை என்பதைப் பற்றி திருத்தந்தை பேசுகிற போது, “கிறித்தவத் தியானம் நம்மைத் தாண்டி செல்லவும், இயேசுவின் வாழ்க்கையோடு ஒன்றித்து அவரோடு நம்மை இணைக்கவும் செய்கிறது” என்றார். மேலும் “தியானம் என்பது ஒரு பயணம். அது தொடர்ந்து நிகழ்கிறது“” என்கிறார். கல்வாரிப் பயணம் என்பது இன்றோடு முடிந்து விடுவதில்லை அது நமது தியானத்தில் தொடர்கின்றது.

**நம் வாழ்வில்**

இன்றைக்கு அமைதியில் வாழ்வது என்பது நமது மன அழுத்தத்தைக் குறைக்கிறது என்று மருத்துவர்கள் சொல்கிறார்கள். நமக்கு இந்த அமைதியோடு சேர்ந்து கிறித்தவ தியானமும் தேவைப்படுகின்றது. அதை உணர்ந்து நாம் இயேசுவோடு, உறவாடும் தியானத்தில் ஈடுபடுகிறோமா என்று சிந்திப்போம்.

**செபிப்போம்!**

தியானங்கள் நடத்துகின்ற, தியானங்களை ஏற்பாடு செய்கின்ற அனைவருக்காகவும் மன்றாடுவோம். அனைத்துத் தியானங்களும் நம்மை நமக்கும், இயேசுவை நமக்கும் காட்டும் தியானங்களாக இருக்க வேண்டுமென்று செபிப்போம்.

**முதல்வர்** : எங்கள் பேரில்.....

**அனைவரும்** : எங்கள் பேரில்.....

**முதல்வர்** : மரித்த விசுவாசிகளின்......

**முடிவுரை**

இயேசுவின் கல்வாரிப் பயணத்தில் இயேசுவைப் போல பயணிப்பது கடினம். ஆனால் அதில் நாம் ஒவ்வொருவரும் பங்கேற்க முடியும் என்கிற நம்பிக்கையை திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் தனது வாழ்வின் பயணத்திலிருந்து வெளிப்படுத்துகின்றார். இயேசுவின் பயணமும் திருத்தந்தையின் பயணமும் நமது பயணமாக இருக்கவும் வேண்டும் என்பதையே இச்சிலுவைப்பாதை உணர்த்துகின்றது. உண்மையான சீடர்களாய் வாழ நாமும் சிலுவைப் பயணத்தில் பங்கேற்க வேண்டும்.



# சிலுவைப்பாதை– 2

## உடைந்த தேகம்

(உடல் உறுப்புக்கள் தொடர்பான சிலுவைப்பாதை சிந்தனைகள்)



திரு. ரோனா ஆல்பர்ட்

# உடைந்த தேகம்
# (உடல் உறுப்புக்கள் தொடர்பான சிலுவைப்பாதை சிந்தனைகள்)

**முன்னுரை**

வளைந்து கொடுக்கும் எதுவும் ஓர் எல்லைக்கு மேல் வளைந்தால் முறிந்து போகும் அல்லது உடைந்து போகும் என்பது கண்கூடான உண்மை. இறைமகன் இயேசுவும் தம்மை எதிரிகளிடம் கையளித்தவராய் தம் மரண நேரம் வரை தம் பாடுகளுக்காய் வளைந்து கொடுத்தார். அதனால் உடைந்தும் போனார். நமக்காக, நம் பாவ மீட்புக்காக இயேசு தம்மை உடைத்துக் கொண்டார். அதன் அடையாளமாகவே திவ்விய நற்கருணையில் உறையும் அப்ப வடிவத் திருவுடல் ஆண்டாண்டு காலமாய் அன்றாடத் திருப்பலியில் உடைக்கப்படுகிறது. சிந்தப்பட்ட குருதியின் அடையாளமாய் திராட்சை இரசமும் ஒப்புக் கொடுக்கப்படுகிறது. இந்த அனுதினத் தத்துவத்துக்கு அடிப்படையே இயேசுவின் கடைசி இரவு உணவும், அதை தொடர்ந்த சிலுவைப்பாடு நிகழ்வுகளும். சிலுவைப்பாதையின் நிலைகளை நம் நிலையற்ற தேகத்தின் உறுப்புக்களோடு ஒப்பிட்டு ‘உடைந்த தேகம்’ என்ற தலைப்பில் இச்சிலுவைப் பாதை தியானம் எழுதப்பட்டுள்ளது.

நம் உடலின் பாகங்களை இயேசுவின் பாடுகளின் சிந்தனைகளோடு ஒப்பிட்டுப் பார்த்து இறைவனுக்கு ஒப்புக் கொடுப்போம். உடைந்தவர்களாயன்றி உயர்ந்தவர்களாய் வாழ முயற்சிப்போம்!

## 1. இயேசு தீர்ப்புக்கு உள்ளாகிறார் – வாய்

**முதல்வர்** : திவ்விய இயேசுவே!......

**அனைவரும்** : அதெனென்றால்......

தங்கள் இன யூதனுக்குக்கூட மரணதண்டனை வழங்கக் கூடிய அதிகாரமில்லாத தலைமைச் சங்கத்தார் இயேசுவுக்கு எதிரான பொய்க் குற்றச்சாட்டுக்களைக் கூறி ஆளுநன் பிலாத்து முன் அவரைக் கைதியாக்கி நிறுத்திவிட்டனர். விசாரணை மண்டபத்தில் குவிந்திருந்த கூட்டம் தாங்கள் எதிர்பார்க்கும் தீர்ப்பையே வழங்க வேண்டுமெனக் காத்திருந்தது. ஆளுநனும் இயேசுவை சிலுவைச் சாவுக்குக் கையளிக்கும்படி திருவாய் மலர்ந்தான். இயேசுவின்மீது அவதூறு கூறிய நாவுகள் இப்போது உற்சாகத்தில் பிலாத்துவையே புகழத் தொடங்கின.

**சிந்தனை :**

பேசுவதை விடக் காண்பதும் கேட்பதும் அதிகமாக இருக்கவேண்டும் என்றே கண்களையும் செவிகளையும் இரண்டிரண்டாகப் படைத்த இறைவன், வாய் ஒன்றைத்தான் படைத்துள்ளார். அந்த வாயோ மற்ற எல்லா உறுப்புகளையும் மிஞ்சி விடுகிறது. வம்பு, வதந்தி, வீண்பேச்சுக்கள், அவதூறு என மனிதனின் வாய் மற்றவர்களைப் பற்றிப் பேசியே பிறரின் மன அமைதியைக் கெடுக்கிறதேயொழிய தவறுகளை ஒப்புக்கொள்ளும்போது தன்னைத் திறவாமலேயே இருந்து விடுகிறது. எடுத்ததற்கெல்லாம் குறை சொல்லிக் கொண்டிருக்க புத்திசாலித்தனம் தேவையில்லை, வாய் மட்டுமே இருந்தால் போதும் என நிரூபித்துக் கொண்டிருக்கிறது.

நாக்கில் எலும்புகள் கிடையாது என்றாலும் அது எத்தனை பேருடைய எலும்புகளை நொறுக்குகிறது. இதயத்தின் நிறைவிலிருந்துதான் வாய் பேச வேண்டும். ஆனால் எத்தனை பேரின் இதயம் தன்னுள் நற்பண்புகளைக் குவித்துக்கொண்டு நிறைவாகப் பேசுகிறது? அனுபவத்தை அதிகப்படுத்தியோ அல்லது பொய்யாக்கியோதான் பேசுகிறோம். என்ன நடந்ததோ அதை இயல்பாகக் கூறும் குணம்கூட நம்மில் நிறைய பேருக்கு இருப்பதில்லை.

மனிதர்கள் அப்பத்தினால் மட்டுமன்று கடவுள் வாயினின்று வரும் ஒவ்வொரு வார்த்தைகளாலும் உயிர் வாழ்கிறார்கள் என்று இயேசு நமக்கு

உரைத்திருந்தாலும், நாமோ நம் வாய் வார்த்தைகளால்தான் வாழ்வதாக இறுமாந்து கொண்டு மிதமிஞ்சியவற்றைப் பேசுகிறோம்.

நாம் பேசும் வீண் வார்த்தைகள் ஒவ்வொன்றுக்கும் நியாயத் தீர்ப்பு நாளில் கணக்கு கொடுக்க வேண்டியிருக்கும் என்பதை நாம் அறிந்திருக்கிறோம். ஆனாலும் என்ன செய்வது? பல சமயங்களில் முப்பத்திரண்டு பற்களும் சேர்ந்து ஒரு நாக்கை அடக்க முடியாமல் போய்விடுகிறதே!

**செபம்:**

இறைவா! அமைதி நல்கும் ஆறுதல் பேச்சுக்கள், அனுசரணையான வார்த்தைகள், அன்பான சொற்கள் இவற்றோடு அனைத்து மக்களிடமும் இதயம் திறந்து பேசுபவர்களாய் மாற எங்கள் நாவுகளை பரிசுத்தப்படுத்த வேண்டுமாய் உம்மை மன்றாடுகிறோம்!

**முதல்வர்** : எங்கள் பேரில்.....

**அனைவரும்** : எங்கள் பேரில்.....

**முதல்வர்** : மரித்த விசுவாசிகளின்......

## 2. இயேசு சிலுவை சுமக்கிறார் – முதுகு

**முதல்வர்** : திவ்விய இயேசுவே!......

**அனைவரும்** : அதெனென்றால்......

தம் முதுகில் சுமத்தப்பட்ட பாரச் சிலுவையை தாமே சுமந்து கொள்ள வேண்டிய கொடுமையான நிலை இயேசுவுக்கு. முன்னிரவில் வீரர்களின் கொடிய கரங்களினால் பட்ட வேதனைகள் அவரைப் பலவீனமாக்கியிருந்தன. யாருக்கும் தீங்கு எண்ணாதவருக்கு இழிநிலைக் குற்றவாளிக்குக் கொடுக்கக்கூடிய சிலுவையைக் கொடுத்துவிட்டார்கள். இயேசுவின் முதுகுக்குப் பின்னால் நடந்த கபட நாடகங்களான தலைமைச் சங்கத்தாரின் சதி, யூதாசின் துரோகம், உரோமையரின் தீர்ப்பு இவையெல்லாம் இயேசுவின் முதுகில் பாரச்சிலுவையை சுமத்தின.

**சிந்தனை:**

மனிதர்களின் முன்பக்கத்துக்கு இருக்கும் முக்கியத்துவம் முதுகுப்புறத்துக்கு இருப்பதில்லை. உண்மையில் முதுகுத்

தண்டுவடம்தான் மனிதனுக்கு முழுத்தோற்றத்தை அளித்து அவனை நிமிர்த்தி நிறுத்துகிறது. ஆனால் பிறரின் முதுகுக்குப் பின்னால் அவதூறு பேசுவது, பிறர் முதுகில் குத்துவது, ஏமாந்தவர் முதுகில் சவாரி செய்வது போன்ற நம்முடைய எத்தனையோ தீச்செயல்கள் நம் தலைகளைக் குனிய வைக்கின்றன. ஒருவரின் முதுகுக்குப் பின்னால் நிறையக் குறைகள் பேசுகிறோம். முகத்துக்கு நேரேயோ நிறைவாய்ப் பேசுவதுபோல் நடிக்கிறோம். தன் முதுகில் கோணல் இருந்தாலும் அடுத்தவர் முதுகில் உள்ள புண்ணைப் பற்றியே ஆராய்ச்சி செய்கிறோம்.

குடும்பப் பொறுப்புகளைத் தட்டிக் கழிப்பது, நம்பியவர்களை மோசம் செய்வது, நமக்குப் பிணையாளர்களை சிக்கலில் தவிக்க விடுவது, வருவாயை சுயநலத்துக்காக மட்டுமே பயன்படுத்திக் கொள்வது போன்ற செயல்கள் நம்முடைய பாரத்தை அடுத்தவர் முதுகில் சுமத்தும் அநீதியான நடவடிக்கைகளே. இத்தகு தீங்குகளால் நம்மை நம்பியவர்களின் மன அமைதி குலைகிறது, இது நீடித்தால் நமக்கும் அவமானமே மிஞ்சுகிறது.

‘வருத்தப்பட்டு பாரம் சுமப்பவர்களே என்னிடம் வாருங்கள், நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன்’ என்றார் இறைமகன் இயேசு. பாவமூட்டையை சுமக்கும் நம்மைத்தான் வருந்தி மனமாற்றம் அடைய அழைப்பு விடுக்கிறார். பாவத்தில் விழுந்தபிறகு பாவ மூட்டையை சுமக்கும் பாரத்தால் இறைவன் முன்னிலையில் கூனிக்குறுகி கூனல் முதுகுடையோர்களாக நாம் நிற்க வேண்டியிருக்கிறது.

போர்க்களத்தில் புறமுதுகு காட்டுவதை வேண்டுமானால் வரலாறு தூற்றலாம், ஆனால் பாவக்களத்தில் புறமுதுகு காட்டுவதை வானதூதர்களும் வாழ்த்துவார்கள்!

**செபம்:**

பாவத்தின் பாரத்தால் அவதியுறும் எங்களுக்காக சிலுவையின் பாரத்தை ஏற்றுக்கொண்ட இயேசுவே! எம் சோதனை வேளைகளில் உம்மைத் திடமாக நெஞ்சில் சுமந்தவர்களாய் பாவ நேரங்களை வெல்ல வரம் அருள மன்றாடுகிறோம்!

**முதல்வர்** : எங்கள் பேரில்.....

**அனைவரும்** : எங்கள் பேரில்.....

**முதல்வர்** : மரித்த விசுவாசிகளின்......

## 3. இயேசு முதல் முறை கீழே விழுகிறார் – கால்கள்

**முதல்வர்** : திவ்விய இயேசுவே!......

**அனைவரும்** : அதெனென்றால்......

இயேசு தம் முதுகில் ஏற்றுக்கொண்ட பாரம், அவரை அடுத்த அடி எடுத்து வைக்கவிடாமல் கால்களைத் தள்ளாட வைத்தன. கலிலேயா முதற்கொண்டு யூதேயா வரை மக்களுக்கு இறையரசை அறிவிக்க நடையாய் நடந்த கால்கள் இப்போது நடக்க முடியாமல் தடுமாறுகின்றன. கயவர்களின் கரங்களில் சிக்குண்டு அடித்து நொறுக்கப்பட்டதால் ஏற்பட்ட உடல் வலிகள், அவதூறும் அலட்சியமும் கேலியும் கலந்த செயல்களால் உண்டான மனதின் நோக்காடுகள் எல்லாம் சேர்ந்து இயேசுவை நகரக்கூட முடியாமல் செய்து குப்புற வீழ்த்தின.

**சிந்தனை:**

என்னதான் கீழே விழுந்தாலும் நல்ல மனிதர்கள் எழுந்து நடந்துகொண்டுதான் இருக்கிறார்கள். வீழ்ச்சி அவர்களை வெறுமனே குப்புறத் தள்ளினாலும், எழுச்சி அவர்தம் கால்களுக்கு நடைபோட வலிமை கொடுக்கின்றது. பொதுவாக மனிதரின் கால்கள் பாவத்துக்கு எதிர்த்திசையில்தான் பயணிக்க விழைகின்றன. சோதனைகள்தாம் அவற்றை மனம்போன போக்கில் நடக்க விட்டுவிடுகின்றன.

இயேசு தம் திருப்பணியைத் துவங்கும் முன் தூய ஆவியால் அழைக்கப்பட, அவரின் கால்கள்கூட பாலைநிலத்தை நோக்கி நடந்தன. அங்கே நாற்பது நாட்கள் உண்ணா நோன்பிருந்தாலும், அலகையினால் சோதிக்கப்பட்டாலும் வெற்றி வீரராய்த் திரும்பிவந்து மக்களுக்கு போதிக்கத் தொடங்கினார். கால் போன போக்கிலே அவர் மனம் போகவில்லை. நாமோ மனம்போன போக்கில் நடந்து நம்மில் பாவ பாரத்தை மென்மேலும் ஏற்றிக் கொள்வதால் நம் நடையும் சரியாக இல்லை, நடத்தையும் சரியாக இருப்பதில்லை.

மனிதரின் பாதி உடம்பைத் தாங்குவதற்காக மட்டுமே கால்கள் படைக்கப்படவில்லை. ஓடோடிச் சென்று பிறருக்கு உதவிடவும் படைக்கப்பட்டிருக்கின்றன. கால்களை இழந்த, நடக்க முடியாத, தள்ளாத வயதில் தடுமாறும் எத்தனை மனிதர்கள் நம்மைச் சுற்றி வாழ்கின்றார்கள். அவர்களைக் கைத்தூக்கிவிட எத்தனை பேர் முன்னுக்குச் செல்கிறோம்?

வளர்கின்ற காலத்தில் உடல்நலம் பேணுவதை விட்டுவிட்டு வயோதிக காலத்தில் வாழ்நாட்களை அதிகரித்துக்கொள்ள நடைப்பயிற்சி செய்கிறோம், ஆனால் ஆன்மாவைக் காத்துக்கொள்ள என்ன பயிற்சி செய்கிறோம்?

கடவுள் நமக்குக் கால்களைக் கொடுத்திருக்கிறார். நடந்து போக பாதையில்லையே என்று கவலைப்பட வேண்டியதில்லை. அவருக்குக் கீழ்ப்படிந்து நடந்தால், உண்மையாக நடந்தால் நம் நடையே, நடத்தையே ஒரு நல்ல பாதையை உருவாக்கும்.

**செபம்:**

இறைவா! உம் இறைவார்த்தைகளை அனுதினமும் பயின்று அவற்றின் மறைபொருளை உணர்ந்தவர்களாய் எம் வாழ்வில் நேர்மையாக நடக்கக்கூடிய நற்சிந்தனையையும், நன்னடத்தையையும் அருளுமாறு உம்மை மன்றாடுகிறோம்!

**முதல்வர்** : எங்கள் பேரில்.....

**அனைவரும்** : எங்கள் பேரில்.....

**முதல்வர்** : மரித்த விசுவாசிகளின்......

## 4. இயேசு தம் தாயைச் சந்திக்கிறார் – இதயம்

**முதல்வர்** : திவ்விய இயேசுவே!......

**அனைவரும்** : அதெனென்றால்......

சிலுவையின் பாதையில் எதிர்ப்படும் தம் தாயைக்கூட ஏறிட்டுப்பார்க்க முடியாத பார அழுத்தம். இதயத்தை நொறுங்கச் செய்யும் தன் மகனின் நிலை கண்ட அன்னை மரியின் நிலையோ விவரிக்க முடியாத வேதனையின் உச்சக்கட்டம். தன் தாய்மை உணர்வுகளை வெளிப்படுத்த முடியாத சோக பிம்பமாய் அந்த தாய்! பெண்களுக்குள் பேறு பெற்றவளேயானாலும் மானிடப் பிறப்பில் அவளுடைய இதயமும் ஒரு தாயின் இதயம்தானே. அந்த தாயின் இதயமும் துடித்தது. அந்த இதயத்தின் ஒலி இறைஇயேசுவுக்கும் கேட்டுக் கொண்டிருந்தது.

**சிந்தனை:**

நம்முடைய இதயம் துடிக்கும் சத்தம் கூட எங்கோ வெளியில் கேட்பதாக எண்ணிக் கொள்ள வேண்டாம். நமக்குள் இறைச்சக்தி உறைந்து கொண்டிருக்கிறது என்பதை உணர்த்தும் அடையாளம்தான் இதயத் துடிப்புகள். இந்த இறைச்சக்திதான் வாழ்க்கைக்கு உயிரோட்டம் கொடுக்கிறது. இதை உணராத நம்முடைய இதயம் உலகக் காரியங்களால் தீண்டப்பட்டும், துக்கத்தினால் சுழற்றப்பட்டும், ஆசைகளால் அலைக்கழிக்கப்பட்டும் அவதிக்குள்ளாகிறது.

நம்முடைய சக்திக்கு அப்பாற்பட்ட சில பிரச்சனைகளும் நம் இதயத்தை பாதிக்கத்தான் செய்கின்றன. குடும்பப் பாசம், உறவு முறைகள், கணவன் மனைவி பற்றிய சில உணர்வுபூர்வமான பிரச்சனைகள், நம்முடைய கட்டுக்கு அடங்காத பிள்ளைகள், விசுவாசத்துக்கும் நம்பிக்கைக்கும் பாத்திரமில்லாத துணை, நட்பு, முதுமைப் பருவம், மரணம் முதலியவைகள் நம் வாழ்க்கையில் சிக்கல் நிறைந்தவையாக இருக்கக்கூடும்.

இந்தச் சிக்கல்களிலிருந்து விடுதலை பெற இறைவனின் இதய இரக்கத்தோடு நம் இதயத்தைச் சூழ்ந்துள்ள அச்சங்கள், அழுக்காறுகள், அகந்தைகள், கள்ளம் கபடங்கள், தன்னலப் பேராசைகள் போன்ற தீய குணங்களை படிப்படியாக அகற்ற வேண்டும். இவற்றை குவித்துக்கொண்டு இதய நோய்களுக்கு நாமே இடம் கொடுக்கக்கூடாது. நம் இதயத்தில் தெய்வீகச் சுடரான மனசாட்சி என்பது அணையாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். அப்போதுதான் பிறரின் இதயங்களை எளிதில் கவர முடியும். இதயத்தைக் கவர்ந்து கொண்டால் நாம் எது சொன்னாலும் புரிய வைக்கலாம். இறைவனுடைய இதயத்தையும் நாம் கவர முடியும்.

நல்ல மனிதனுடைய இதயம் உலகில் ஆண்டவர் வாழும் இல்லமாக விளங்கும்.

**செபம்:**

ஆண்டவரே! எம் இதய அழுக்குகளால் உம்மைவிட்டு வெகுதூரம் விலகி வாழும் எங்கள்மேல் இரக்கம் வைத்து உம் திருக்குமாரனின் பாதையில் தடம் பதித்து எம்மைச் சுத்திகரித்துக் கொள்ளும் இதய வேட்கையை எங்களுக்கு அருளுமாறு உம்மை மன்றாடுகிறோம்!

**முதல்வர்** : எங்கள் பேரில்.....

**அனைவரும்** : எங்கள் பேரில்.....

**முதல்வர்** : மரித்த விசுவாசிகளின்......

## 5. இயேசுவுக்கு சீமோன் தோள் கொடுக்கிறார் – தோள்

**முதல்வர்** : திவ்விய இயேசுவே!......

**அனைவரும்** : அதெனென்றால்......

சுமக்க முடியாத சிலுவை பாரத்தைச் சுமந்து சென்ற இயேசுவின் பரிதாபக் கோலத்தைக் கண்ட சீமோன், உரோமை வீரர்களின் அதிகாரத்துக்கு கட்டுப்பட்டு அவருக்கு தோள் கொடுத்து உதவுகிறார். இயேசுவுக்கு உதவ தோள் கொடுத்து முடித்த சீமோனுக்கும் தோள்கள் வலித்திருக்கும். உண்மைதான், இயேசுவோடு இணைந்து நன்மையான பாதையில் நடப்பவர்களுக்கு வலிகள் இருக்கத்தான் செய்யும். ஆனால் வலியின் முடிவில் கிட்டுவது நித்திய பேரின்பம் அல்லவா?

**சிந்தனை:**

தோள்கள் மனிதருக்கு அழகான தோற்றத்தைக் கொடுக்கின்றன. தோள் மூட்டுக்களில்தான் கரங்களும் கச்சிதமாக இணைந்திருக்கின்றன. உழவன் தன் தோளில் ஏர்க் கலப்பையை சுமப்பதால்தான் உலகத்துக்கு உணவு கிடைக்கிறது. ஆள்வோரின் தோள்களில் அரச பாரத்தோடுதான் நாடாளப்படுகிறது. சராசரி மனிதர்கள் தம் தோள்களில் சுமக்கும் குடும்ப பாரத்தால்தான் அன்பு, பாசம் என்ற உணர்வு இழைகளால் உறவுகள் உறுதியாய் இருக்கின்றன.

மனிதர்கள் தாங்கள் அனுபவித்து வரும் துயரங்களைக் குறைத்துக் கொள்ள ஒருவருக்கொருவர் தோள் கொடுத்து உதவ வேண்டும். தங்களுக்குள் அன்பு, பரோபகாரம், இரக்கம் ஆகிய குணங்களைக் கைக்கொண்டால் போதும், பாதித் துயரம் குறைந்துவிடும். ஆதித் திருச்சபையினர் தங்களுக்கு உள்ளதை பொதுவில் வைத்து பகிர்ந்து மகிழ்ந்தார்கள். அதன் அடையாளங்களான அன்பியங்களில் பகிர்வு மனப்பான்மை, துன்ப நேரங்களில் தோள் கொடுத்து உதவும் தோழமை உணர்வு இருக்கிறதா? அவ்வளவு ஏன் அடுத்தவரை பாராட்டுகிறோமா அல்லது ஆறுதல் வார்த்தைகள்தான் கூறிக் கொள்கிறோமா?

இயேசுவும் நல்ல சமாரியன் போன்ற உவமைகள் வழியாக அடுத்தவருக்கு தோள் கொடுத்து உதவ வேண்டிய அருங்குணத்தை

வலியுறுத்தினார். சமுதாயத்தில் ஒடுக்கப்பட்ட, அலட்சியப்படுத்தப்பட்ட, புறக்கணிக்கப்பட்ட, தாழ்த்தப்பட்ட ஆடுகளைத் தேடிப் போய் உதவும் நல்ல ஆயனாகத் திகழ்ந்தார்.

நாமும் காணாமல் போன ஆடுகள்தான். நம்மைத் தேடியும் இறைவன் குரல் கொடுக்கிறார் அவர் தேடும்போது நாமும் குரல் கொடுக்க வேண்டாமா? அப்போதுதானே அவர் நம்மைக் கண்டுபிடித்து தம் தோளில் சுமந்து செல்வார்?

**செபம்:**

எங்கள் நல்மேய்ப்பராம் இயேசுவே! பிறரின் துன்ப வேளைகளில் நாங்கள் முன்வந்து அவர்களுக்கு தோள் கொடுத்து உதவக்கூடிய கருணை உள்ளத்தை எங்களுக்கு அருளுமாறு மன்றாடுகிறோம்!

**முதல்வர்** : எங்கள் பேரில்.....

**அனைவரும்** : எங்கள் பேரில்.....

**முதல்வர்** : மரித்த விசுவாசிகளின்......

## 6. இயேசுவின் திருமுகத்தை வெரோணிக்கா துடைக்கிறாள் – முகம்

**முதல்வர்** : திவ்விய இயேசுவே!......

**அனைவரும்** : அதெனென்றால்......

இரத்தமும் வியர்வையும் பரவிக் கிடக்கும் இயேசுவின் திருமுகத்தை, போதிக்கும்போதெல்லாம் பார்த்து வியந்த பரிசுத்த முகத்தை பழைய நிலைக்குக் கொண்டு வர வேண்டுமென்று இயேசுவின் முகம் துடைத்தாள் வெரோணிக்கா. உலகத்தின் சுக துக்கங்களை நிர்ணயிக்கிற இறைவன், தம்முடைய சாயலாகப் படைக்கப்பட்ட மனிதர்களிடம் தமக்கும் ஒரு முகம் உண்டு என்பதை வெளிப்படுத்தினார். வெரோணிக்காவின் கைத்துண்டில் இயேசுவின் திருமுகம் பதிவு செய்யப்பட்டது.

**சிந்தனை:**

முகங்கள் மனிதரின் அடையாளச் சின்னங்கள். இவை இல்லாவிட்டால் எந்த வரலாற்றிலும் எவரையும் அடையாளம் காட்ட இயலாது. எவரையும் பெயர் சொல்லி அழைக்கவும் முடியாது. மனித

அழகே முகத்தில்தான் ஆரம்பிக்கிறது. ஒருவரையொருவர் அறிமுகப்படுத்திக் கொள்வதில் முகமே முன் நிற்கிறது. மனிதரின் ஐம்புலன்களில் நான்கு முக்கிய பாகங்களும் தலையைச் சார்ந்தவையே என்றாலும், அந்த தலைக்கே இன்னாரின் தலை என்றோ, இன்னாரின் உடல் என்றோ பெயரிட்டுச் சொல்வதற்குப் பிரதானமானது முகமே. மகிழ்ச்சி, துக்கம், சினம் போன்ற நவரசக் கலவைகளை வெளிப்படுத்தும் முகம் ஒரு விசித்திரமான உடற்பகுதிதான்.

முகங்கள் இறைச்சாயலின் பிரதிபலிப்புகள். மனிதரின் முகங்களுக்கு தம்மால் கொடுக்கப்பட்ட இறைச்சாயல் சீர்கெட்டுப் போவதைக் கண்டு மனமிரங்கிய இறைவன் தம் ஒரே திருக்குமாரனை மனிதச் சாயலுள்ள முகத்தோடு பூமிக்கு அனுப்பி வைத்தார். ஆனால் நாம் என்ன செய்தோம்? நம் பாவங்களாலும், தீய நடவடிக்கைகளாலும் அவருடைய முகத்தைச் சிதைத்து உள்ளத்தைக் காயப்படுத்தி இன்னமும் அவருடைய திருமுகத்தை ஏறிட்டுப் பார்க்க முடியாத நிலையில் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். பலதரப்பட்ட முகமூடிகளை அணிந்து கொண்டு உள்ளத்தில் நிறைந்து கிடக்கும் பாவ எண்ணங்களை, அதன் தாக்கங்களை சாமர்த்தியமாக மறைத்து வாழ்கிறோம். அடுத்தவரின் உண்மைக் குணங்கள் வெளிப்படையாக அவர்களின் முகங்களில் தெரிந்திருந்தால் எவ்வளவோ பேர் இன்னமும் உலகில் உயிரோடு இருந்திருப்பார்கள்.

தாபோர் மலையில் இயேசு தோற்றம் மாறியபோது அவர் முகம் கதிரவனைப்போல் ஒளி வீசியது. தாம் இறைவன் என்பதை எண்பித்தார். மனிதர்கள் நாமும் மனமாற்றத்தால் உண்மைத் தோற்றம் பெறும்போது அந்த ஒளிவீச்சு நம்முடைய முகங்களிலும் குடி கொள்ளும். நாம் இறைச்சாயலோடு படைக்கப்பட்டவர்கள் என்பதும் நிரூபணமாகும்.

**செபம்:**

இறை இயேசுவே! உம்முடைய தெய்வீகச் சாயலின் நிழல் எங்கள் முகங்களிலும் படியும் வண்ணம், எங்கள் உள்ளங்களைத் தூய்மையாக வைத்துக் கொள்ள தீய நாட்டங்களை வெல்லக்கூடிய மனதிடத்தை எங்களுக்கு அளிக்குமாறு மன்றாடுகிறோம்!

**முதல்வர்** : எங்கள் பேரில்.....

**அனைவரும்** : எங்கள் பேரில்.....

**முதல்வர்** : மரித்த விசுவாசிகளின்......

## 7. இயேசு இரண்டாம் முறை கீழே விழுகிறார் – முழங்கால்கள்

**முதல்வர்** : திவ்விய இயேசுவே!......

**அனைவரும்** : அதெனென்றால்......

முன்னிரவு கெத்சமேனித் தோட்டத்தில் தனிமையில் முழங்காலில் இருந்து பாடுகளை எதிர்கொள்ளும் மனவுறுதியை தந்தையாம் இறைவனிடம் வேண்டிப் பெற்று வந்தபோது வலிக்காத முழங்கால்கள், இப்போது மனபாரத்தோடு சிலுவை பாரமும் அழுத்த வலிமையற்று தளர்ந்து போக ஆரம்பித்தன. அவர் தம்முடைய இதயத்தில் சுமந்திருந்த நம்பிக்கைதான் சிலுவையைச் சுமக்க வைத்தது, அவர் கீழே விழுந்தபோது எழவும் வைத்தது. முழங்கால்களின் குரூரமான நோக்காட்டையும் பாராமல் தம் சிலுவைப் பயணத்தைத் தொடர்ந்தார் இயேசு.

**சிந்தனை:**

மனித உறுப்புகளில் முழங்கால்களுக்கென்று நாம் மகத்துவம் பாராட்டுவதில்லை. ஆனால் அவைதான் நடப்பதற்கு நலம் பயக்கின்றன. மூட்டுக்கள் இல்லாமல் வளைந்து கொடுக்காத கால்களை வைத்துக் கொண்டு நம்மால் நடக்கவியலாது. காலின் இருபகுதியின் இணைப்பு மூட்டான இந்த முழங்கால் மட்டும் இல்லாமல் போனால் மனிதரால் பாரம் சுமக்க முடியாது. இஸ்ராயேல் மக்கள் முகம் முப்புற விழுந்து ஆண்டவரை வணங்கியபோதெல்லாம் முழங்காலிலிருந்தே வணங்கினார்கள். பற்றி எரியும் முட்செடியின் முன் முழங்காலில் இருந்து மோசே வணங்கிய பிறகுதான் விடுதலைப் பயண வரலாறு நிகழ்ந்தது.

இறைப்பிரசன்னம் ஒளிரும் திருப்பலியின் எழுந்தேற்ற நேரத்தில் பல சமயங்களில் முடிந்தவர்கள்கூட முழங்காலிருக்க முன்வராதது வருந்தத்தக்கது. முழங்கால் வலியினால் தவிக்கும் எத்தனையோ பேரை நாம் பார்க்கிறோம். கால்கள் இருந்தும் நடக்கக் கஷ்டப்படும் நிலை அவர்களுக்கு. வேண்டாத உடல் பாரத்தை குறைக்காததால் வேதனையோடு சிலர். அதிக உழைப்பாலும், அதிக பாரம் சுமந்ததாலும் அவதியுறுவோர் பலர். அவர்களுக்காக இரங்கி செபிப்போம்.

நம்முடைய கவலைகளையும் முழங்கால்களுக்கு மேலே கொண்டு போக வேண்டாம். அவற்றை காலால் மிதித்துப் போடுவோம்.

தளர்ந்து போன கைகளோடும், தள்ளாடும் முழங்கால்களோடும் தரையில் விழுந்தாலும் வலிகளைப் பொறுத்துக் கொண்டு நமக்காக எழுந்து வழி நடந்த இறைஇயேசு முன் நாமும் முழந்தாளிட்டுப் பணிவோம்.
இறைவன் முன்னிலையில் மண்டியிட்டு வணங்குவதில் தயக்கம் தேவையில்லை. ஏனெனில் வணங்கும்போதுதான் வளர ஆரம்பிக்கிறோம்.

**செபம்:**

எல்லாம் வல்ல இறைவா! உம்மை வணங்குவதில் மெத்தனப்போக்கும், சோம்பலும், தயக்கமும் இல்லாத உள்ளார்ந்த பணிவு நிலை எங்கள் உள்ளங்களில் உருவாக உம்மை மன்றாடுகிறோம்!

**முதல்வர்** : எங்கள் பேரில்.....

**அனைவரும்** : எங்கள் பேரில்.....

**முதல்வர்** : மரித்த விசுவாசிகளின்......

## 8. இயேசு எருசலேம் மகளிருக்கு ஆறுதல் வழங்குகிறார் – கண்கள்

**முதல்வர்** : திவ்விய இயேசுவே!......

**அனைவரும்** : அதெனென்றால்......

இயேசு கொல்லப்படப் போகிறார் என்பது உறுதியாகிவிட்ட நிலையில் எருசலேம் நகர வாயிலில் பெண்கள் கூட்டம் அவரைக் கடைசியாகக் காணக் காத்திருந்தது. சிலுவையின் பாரத்தால் ஏறெடுத்துப் பார்க்க முடியாமல் மிகுந்த சிரமத்தோடு கண்களை உயர்த்திய இயேசு, கண்ணீரோடு நிற்கும் அப்பெண்களைக் கண் நோக்கினார். சிலுவை தம் முதுகில் சுமத்தப்பட்ட நேரத்திலிருந்து யாரிடமும் பேசாத இயேசு, எருசலேம் நகரத்துப் பெண்களிடம்தான் பேசினார். தாங்கள் கலங்குவதை நிறுத்திக்கொண்டு அவர் பேசுவதைக் கவனித்தன அந்தப் பெண்களின் கண்கள்!

**சிந்தனை:**

உடல் உறுப்புக்களில் முக்கியத்துவம் வாய்ந்தவை கண்கள். இதயம் பேச விரும்பாதபோது, வாய் பேச மறுக்கும்போது கண்கள் பேசும். முகத்தில் அழகு சேர்க்கும் இந்த அணிகலன்களில் கருணை

நிறைந்திருந்தால் அந்தக் கண்கள் கடவுள் ஏற்றிய தீபங்களாக விளங்கும். எந்த அளவுக்கு கண்கள் பெருமை வாய்ந்தனவோ, அந்த அளவுக்கு பாவத்தின் சன்னல்களாகவும் கண்கள் மாறும். இறைமகன் இயேசு கண்களை உடலின் விளக்குகள் என்றார். பார்வை பழுதுபட்டால் பாவமானது உடல் முழுக்கப் பரவி விடும். ஒளி தர வேண்டிய விழிகள் கெட்டுப்போனால் உடல் மட்டுமல்ல, உள்ளமும் கெட்டுப் போகும்.

கண்ணிருந்தும் குருடராயிருப்பவர்கள், கண்கெட்ட பிறகு வெளிச்சத்தைத் தேடுபவர்கள் மத்தியில் வாழும் இந்த பரபரப்பான வாழ்க்கைச் சூழலில் நாம் கவனத்துடன் பாதுகாக்க வேண்டியவை கண்கள். அத்தகு முக்கியம் வாய்ந்த கண்களைப் போல் காக்கப்பட வேண்டியவர்கள் நம் பிள்ளைகளும்தான். குழந்தைகள் ஈரமான சிமெண்ட் போன்றவர்கள். இந்த சிமெண்ட்டின் மீது எதுவெல்லாம் விழுகிறதோ அவை தன்முத்திரையை ஆழப் பதித்து விடுகின்றன. பிள்ளைகளின் மனங்களில் பாவமுத்திரை பதியா வண்ணம் பார்த்துக் கொள்ள வேண்டியது பெற்றோரின் கடமை.

சிறுவயதிலேயே கல்வி கற்க முடியாமல் பொருளீட்டப் போகும் சிறார்களின் ஏக்க முகங்களை கண்கொண்டு பார்த்து அவர்களின் அறிவுக்கண் திறக்க இயன்றதைச் செய்வோம். இயலாத, இல்லாத மனிதர்களை உற்று நோக்குவோம். உடனடியாக உதவ முடியாத நிலையிலும் ஆறுதல் வார்த்தைகள் மூலமாவது அவர்களுக்கு நம்பிக்கை அளிப்போம். நமக்குப் பிறகும் நாம் உலகத்தைக் காண கண் தானம் செய்வோம். கண்ணின் மணிகளாக காத்து வளர்க்கும் பிள்ளைகளைக் கண்காணித்து வளர்ப்போம். நம் பிள்ளைகளே நம்மைக் குறை கூற முடியாதபடி வாழ்ந்து காட்டுவோம். மனித குலம் நம்மை வெறுத்தால் நாம் தாங்கிக் கொள்ளலாம், நம் குழந்தைகளே நம்மை வெறுத்தல் நம்மால் தாங்கிக் கொள்ள முடியுமா?

**செபம்:**

இறைவா! உடலின் விளக்குகளான கண்கள் பழுதடைந்து போகாமல் பார்த்துக் கொள்ளவும், கண்மணிகளான பிள்ளைகள் கவனத்துடன் வளர நாங்களே முன்மாதிரிகைகளாக வாழ்ந்து காட்டவும் வேண்டிய மனப்பாங்கை எங்களுக்கு அருளுமாறு உம்மை மன்றாடுகிறோம்!

**முதல்வர்** : எங்கள் பேரில்.....

**அனைவரும்** : எங்கள் பேரில்.....

**முதல்வர்** : மரித்த விசுவாசிகளின்......

## ௯. இயேசு மூன்றாம் முறை தரையில் விழுகிறார் – கழுத்து

**முதல்வர்** : திவ்விய இயேசுவே!......

**அனைவரும்** : அதெனென்றால்......

சிலுவையின் பாரம் இயேசுவைப் பின்னுக்கு இழுக்க, அவரோ சிலுவையை முன்னுக்கு எடுத்துச் செல்லப் போராடிக்கொண்டிருந்தார். தோள் எலும்புகள் துருத்திக் கொண்டு வர, கழுத்தின் நரம்புகள் புடைத்துக் கொண்டிருந்தன. தம்முடைய பாதையில் தம்மை ஏளனப்படுத்திச் சிரிப்பவர் யார், தமக்காகக் கண் கலங்குபவர் யார் என்பதைக் கூட கண்டு கொள்ள முடியாத கையறு நிலை. உடல் வலுக்குன்றியதால் சிலுவையின் பாரத்தால் கழுத்து நரம்புகளும் தெறித்து விடுமோ என்ற அச்சத்தை ஏற்படுத்தின. மூன்றாம் முறை தரையில் விழுந்தும்கூட கழுத்து அறுபடப்போகும் ஆட்டுக்குட்டியைப் போல அவர் இழுத்துச் செல்லப்பட்டார்.

**சிந்தனை:**

எண்சாண் உடம்புக்கு தலையே பிரதானம். அந்த தலையைத் தாங்கிப் பிடிக்க கழுத்து தேவைப்படுகிறது. வெளிப்பார்வைக்கு வெறுமனே உடலின் ஒரு பகுதியைப்போல் தோன்றினாலும் நுரையீரலுக்கு மூச்சுக்குழலையும், இரைப்பைக்கு உணவுக் குழாயையும் இணைக்கும் பாலமாக கழுத்து பயனாகிறது. கழுத்து ஒரு மனிதனின் கம்பீரத்துக்கும் உதவுகிறது, அவன் தன் தலையை நிமிர்த்திப் பார்க்கும் ஆணவப் பார்வைக்கும் ஒத்துழைக்கிறது. அதே மனிதன் அவமானத்தால் தலை தாழ்த்திப் போகும் போதும் அதுவும் தன்னை வளைத்துக் கொள்கிறது.
ஆண்களின் கழுத்துக்கள் மாலை மரியாதைகளால் மகிழவும், பெண்களின் கழுத்துக்கள் அணிகலன்களால் அழகு செய்யப்படவும் ஆசிக்கின்றன. கழுத்தறுபடுவது விலங்குகளுக்கும், பறவைகளுக்கும் நேர்ந்தாலும் கழுத்தை அறுப்பது மனிதர்கள்தானே. உடனிருப்பவரையே மோசம் செய்து கழுத்தறுப்பது என்பது எல்லா துரோகச் செயல்களிலும் மோசமானது அல்லவா? யூதாசும் இதைத்தானே செய்தார்!

தன்னை ஒருவன் இகழும்போதோ கசப்பான வார்த்தைகளை கூறும்போதோ கூட அல்ல, அந்த எதிராளி ஒரு பொருட்டாக தன்னை மதிக்காதபோதுதான் ஒரு மனிதனின் மனதில் காயம் ஏற்படுகிறது. அலட்சியமாக, பராமுகமாக கழுத்தைத் திருப்பிக்கொண்டு போவதுதான் ஒருவர் இன்னொருவருக்குச் செய்யும் பெரும் அவமானம்.

அன்று விடுதலைப் பயணத்தில் இஸ்ராயேல் மக்கள் வணங்காக் கழுத்துடையோராய் வாழ்ந்து வேண்டாத தொல்லைகளையெல்லாம் அனுபவித்தார்கள். ஆணவத்தாலும், மெத்தனப் போக்காலும், கீழ்ப்படியாமையாலும் வணங்காக் கழுத்துடையவர்களாக இருப்பது இறைவனுக்குச் செய்யும் அவமானம்

இறைவனுக்குத் தலை வணங்குவது ஆகாத செயல் அல்ல, மாறாக மற்றவர்களுக்குத் தலை வணங்குவதிலிருந்து காப்பாற்றும் மனநிம்மதிக்குரிய செயல்.

**செபம்:**

ஆண்டவரே! உம்மை வணங்குவதும் உம் வார்த்தைகளின்படி வாழ்ந்துகாட்டுவதுமே எங்கள் பிறவிப் பயன் என்பதை உணர்ந்தவர்களாய், ஆணவம், கீழ்ப்படியாமை போன்ற தீய குணங்களை எங்கள் உள்ளங்களிலிருந்து எடுத்தெறியத் தேவையான மனப்பக்குவம் வேண்டுமென உம்மை மன்றாடுகிறோம்!

**முதல்வர்** : எங்கள் பேரில்.....

**அனைவரும்** : எங்கள் பேரில்.....

**முதல்வர்** : மரித்த விசுவாசிகளின்......

## 10. இயேசுவின் உடைகளைக் களைகிறார்கள் – உடல்

**முதல்வர்** : திவ்விய இயேசுவே!......

**அனைவரும்** : அதெனென்றால்......

மனித உடலோடு உலகில் பிறந்து மக்களுக்குப் போதித்து அவர்களைச் சுகப்படுத்தி நல்வழி காட்டிய திருமகனுக்கு இறுதியில் மிஞ்சியது உடல் வேதனைகள்தான். சாட்டையடிகளும் முள் முடியும், தடியடியும் அவர் மேனியை உருக்குலைத்தது போதாதென்று உள்ளத்தையும் உடைத்தனர் அந்தப் பாவிகள். பலர் பார்க்க, அவரின் ஆடைகளைக் களைந்து அவரை அரை நிர்வாணமாக்கி ஆர்ப்பரித்தனர். அவரை எதிர்த்தவர்கள் ஆனந்தம் கொண்டனர், ஆதரித்தவர்களோ வாய் பொத்தி நின்றனர். ஒற்றை வரியில் சொல்ல வேண்டுமானால் அவருக்கு உயிர் மட்டுமே எஞ்சியிருந்தது, உடல் ஒப்புக்குத்தான் இருந்தது.

**சிந்தனை:**

ஐம்புலன்களும் சேர்ந்து அழகாக வடிவமைக்கப்பட்ட ஆலயம் மனித உடல். மனித வாழ்க்கை என்பதே உயிர் மூச்சை இழுத்துப் பிடித்து தன்னுள் அடக்கி வைத்திருக்கும் உடலின் நடமாட்டமே. உடல் நலனுக்கும், மன நலனுக்கும் நெருங்கிய தொடர்பு இருப்பதால் மனதில் உறுதியை வளர்த்துக் கொள்வதன் வாயிலாய் உடலையும் உறுதிமிக்கக் கருவியாக உருவாக்கிக் கொள்ளலாம். உணர்ச்சிகளுக்கு இடம் கொடுத்தால் உடல் பாழ்பட்டுப் போகும். எனவே நம்முடைய அறிவுக்கு உடல்மீது ஆதிக்கம் இருக்க வேண்டும்.

இறைமகன் இயேசு மனிதப் பிறப்பெடுத்து வாழ்ந்த நாட்களில் தம் உடல்மீது உணர்ச்சிகளை ஆதிக்கம் செலுத்த அனுமதிக்கவில்லை. அவரின் அறிவுக்கும் ஆன்மாவுக்கும் உடல் கட்டுப்பட்டிருந்தது. இன்றைய நவநாகரீக உலகம் உடலழகை வெளிச்சமிட்டுக் காட்டுவதிலும், உடலை வியாபாரப் பொருளாக்குவதிலும் தயக்கம் கொள்வதில்லை. உயிர் கலந்திருக்கும்போது போற்றப்படும் உடல், அது அகன்றபின் பயங்கரத் தோற்றத்தைத் தருகிறது. அப்போது உலகம் முழுவதும் வெறுப்பினால் தன்னிரு கண்களையும் மூடிக் கொள்கிறது. இதுதான் உடலின் உண்மை அவல நிலை. மனித உடல் வெறுமனே வாரிசுகளை உருவாக்கித் தரப் படைக்கப்படவில்லை. பிறப்பெடுக்கிற நிகழ்விலே மனிதன் விலங்கினத்திடமிருந்து வேறுபடுகிறான். விலங்குகள் பெற்றெடுக்கின்ற பாச நிகழ்வுகளோடு நின்று விடுகின்றன. மனிதன் பெற்றெடுக்கின்ற நிகழ்வுகளோடு நின்றுவிடாமல், தான் பெற்ற உயிரினை புனிதப்படுத்தும் நிகழ்வோடு வாழ்வைத் தொடங்கி வைக்கிறான், அத்தகு புனித வாழ்க்கையை வாழத்தான் இறைவன் உடலை அளித்திருக்கிறார்.

நாம் நமக்காக மட்டுமே வாழாமல், நம் அயலாருக்காகவும் வாழத் துவங்கும்போதுதான் நமது அதிமனிதப் பண்புகளான கருணை, தியாகம், பிறர் நலம் பேணுதல் முதலிய குணங்களால் நம் உடல் புனிதம் பெறுகிறது. நாமும் நிறைவான மனிதர்களாகிறோம்.

**செபம்:**

உடலும் உயிரும் அளித்த ஆண்டவரே! வாழ்நாளில் எங்கள் சிந்தனை, சொல், செயல்களால் கறைபடியாமல் வாழ்ந்து, காலம் காலமாய் விண்ணுலகில் உம்மைத் தரிசித்து வாழும் வரமருள உம்மை மன்றாடுகிறோம்!

**முதல்வர்** : எங்கள் பேரில்.....

**அனைவரும்** : எங்கள் பேரில்.....

**முதல்வர்** : மரித்த விசுவாசிகளின்......

## 11 இயேசு சிலுவையில் அறையப்படுகிறார் – கைகள்

**முதல்வர்** : திவ்விய இயேசுவே!......

**அனைவரும்** : அதெனென்றால்......

உலகின் பாவங்களை போக்கத்தான் செம்மறிப்புருவை பூமிக்கு வந்தது. அதற்கே பலிபீடம் தயாரிக்கப்பட்டு விட்டது. கால்கள் இரண்டும் ஓர் ஆணியில் அறையப்பட்டன. அகல விரித்தக் கரங்களில் ஆணிகள் இரண்டும் ஆழத் துளைத்தன. இயேசுவின் கைகளோ கால்களோ இனியும் பிறருக்கு உதவும் பணியில் ஈடுபடக்கூடாதென்று, அவரைச் சிலுவையில் சேர்த்து அறைந்து அவரின் நற்செய்திப் பணிகளை முடக்கிவிட்டதாக அவர்கள் முடிவெடுத்துக் கொண்டனர். எப்படி முடக்கினாலென்ன இரக்கம் காட்ட இதயம் இருக்கிறது என்பதை உணர்த்தத்தான் தம்மிரு கரங்களையும் விரித்துக் கொடுத்தார் இயேசு.

**சிந்தனை:**

கைகள் இரண்டும் ஒரு மனிதனின் உண்மையான நண்பர்கள் என்றே சொல்லலாம். ஒருவன் தன்னை உயர்த்திக் கொள்ள, தன்னை நிலை நிறுத்திக் கொள்ள உழைப்பு என்னும் ஒப்பற்ற நிலைமைக்கு உருக்கொடுப்பது கரங்களே. கடமையாற்ற மட்டுமே படைக்கப்பட்டவை இவை. நம் குடும்பத்தாருக்கு செய்ய வேண்டிய கடமைகளை மட்டுமல்லாமல், நம் அயலாருக்கு நாம் செய்ய வேண்டிய கடமைகளை ஆற்றவும் கைகளுக்கு கடமையுண்டு. துன்ப நேரங்களில் கை கொடுப்பது, வீழ்ந்து கிடக்கையில் கைத்தூக்கி நிறுத்துவது, பிறரை உற்சாகப்படுத்தும்போது கைத்தட்டிப் பாராட்டுவது போன்றவற்றிற்கு கரங்களே பயன்படுகின்றன.

வாழ்வின் இலட்சியம் வயிற்றுச் சாப்பாட்டோடு நின்று போவதில்லை. மாறாக வாழ்க்கை முழுவதுக்குமான ஒரு பெரிய குறிக்கோளை முன்னே வைத்துக்கொண்டு நாம் பாடுபட்டு முன்னேற கைகள் அமைந்திருக்கின்றன.

இயேசுவின் கரங்கள் முப்பதாண்டுகள் வரை தம் தந்தை யோசேப்பு விட்டுச் சென்ற தச்சுத் தொழிலைச் செய்தன. பின் மூன்றாண்டுகள் புதுமைகள் புரிதல், குணப்படுத்துதல், ஆசீர்வதித்தல், கைத்தூக்கி விடல் போன்ற பணிகளைச் செய்தன. இறுதி இராவுணவில் தம் கரங்களால் அப்பத்தைப் பிட்டு ஆசீர்வதித்து தம் தேகத்தின்

அடையாள பலி நிகழ்வை ஆரம்பித்து வைத்தார். பின்னர் யூதர்களின் கைகள் அவரைக் குற்றம் சாட்டின. யூதாசின் கரங்கள் அவரைக் காட்டிக் கொடுத்தன. பிலாத்துவின் கைகள் தம்மைக் கழுவிக் கொண்டன. உரோமையரின் கைகள் அவர்மீது சிலுவை பாரத்தைச் சுமத்தின. கறைபடியாமல் வாழ்ந்த இயேசுவின் திருக்கரங்களோ சிலுவை மரணத்துக்காக தம்மை விரித்துக் கொடுத்தன.

மனசாட்சியிலும், கைகளிலும் கறைபடியாமல் வாழ்பவர் விண்ணகத்தின் கதவுகளைத் தங்கள் கை வைத்துத் திறக்க வேண்டிய அவசியமில்லை. அவரைக் கண்டதும் அது தானாகவே திறந்து கொள்ளும்.

**செபம்:**

எங்கள் நல்ல இயேசுவே! பாவச்சூழல் மிகுந்த இந்த வாழ்க்கையில், எங்கள் மனசாட்சியை விற்று கைகளைக் கறைப்படுத்திக் கொள்ளாதவர்களாய் வாழும் மனநிலையை எங்களுக்கு அருளுமாறு உம்மை மன்றாடுகிறோம்!

**முதல்வர்** : எங்கள் பேரில்.....

**அனைவரும்** : எங்கள் பேரில்.....

**முதல்வர்** : மரித்த விசுவாசிகளின்......

## 12. இயேசு சிலுவையில் உயிர் விடுகிறார் – இரத்தம்

**முதல்வர்** : எங்கள் பேரில்.....

**அனைவரும்** : எங்கள் பேரில்.....

**முதல்வர்** : மரித்த விசுவாசிகளின்......

பாரம்பரியமாக பலி கொடுக்க விலங்குகளைப் பயன்படுத்திய பழைய ஏற்பாட்டு கால நிலை மாறிப்போய் இறைவனின் புதிய ஏற்பாட்டில் அவர் திருமகனின் சொந்த இரத்தமே பலிப்பொருளானது. இறைவனுக்கும் மனிதருக்கும் இடையேயான உடன்படிக்கை அன்றுதான் நிறைவேறியது. இரத்த வியர்வை வியர்த்ததிலிருந்து உயிர்விடும் இந்நேரம்வரை சிந்திய குருதி போதாதென்று அவர் செத்த பிறகும் செங்குருதி சிந்துவது நிகழ்ந்தது. ஆம், இயேசு சிலுவையில் உயிரோடு இருக்கிறாரா இல்லையா என்பதை சோதித்துப் பார்க்க ஈட்டி அவர் விலாவில் இறங்கியது. வியப்புக்குரிய விதத்தில் அவர் விலாவிலிருந்து வெளிப்பட்டது இரத்தம் கலந்த நீர்!

**சிந்தனை:**

மனிதரின் எல்லா நோய்களுக்கும் மூல காரணம் இரத்தம்தான். உடலெங்கும் பரவி ஓடிக் கொண்டிருக்கும் இரத்தத்தில் சுத்தம் இல்லையென்றால் மொத்தத்தில் மனிதன் நோய்களின் பிடியில் சிக்கித் தவிக்க நேர்கிறது. சீரான இரத்த ஓட்டம் சுறுசுறுப்பளிக்கும் சிந்தனைகளில் தெளிவு தரும். தீய பழக்க வழக்கங்களால் குருதி கெட்டுப் போகும். உயிர் காக்க நம் நல்இரத்தத்தை தானம் செய்வதால் மீண்டும் அது சுரக்குமேயோழிய அதனால் நாம் இறக்கப்போவதில்லை. எனவே இரத்த தானம் செய்வோம்.

இரத்தம் திரவப் பொருள்தான். ஆனால் மனிதனை திடப்படுத்தும் பொருள் அதுதான். நம்மை இறைவனோடு ஒப்புரவாக்கி திடப்படுத்தியது இயேசுவின் இரத்தம்தான். வேறுபாடுகள் உடைய வெவ்வேறு மனிதர்களை ஒருங்கிணைத்து இறைவனின் திருமுன் ஒரே மக்களாக, கிறிஸ்தவர்களாக நிற்க வைத்தது இயேசுவின் தூய இரத்தம்தான். நம்மை ஒரே மந்தைக்குள் கொண்டுவர இயேசு இரத்தம் சிந்தினார். எத்தனையோ மறைச்சாட்சிகளின் குருதியால் கட்டியெழுப்பப்பட்ட திருச்சபையின் ஒரே மக்களாகிய நமக்குள் சாதீயப் பாகுபாடுகளால் இயேசுவின் இதயத்தை உடைப்பதுதான் வேதனையானது.

குடும்ப நலனுக்காக, நாட்டு நலனுக்காக, சமுதாய நலனுக்காக சுயநலக் கலப்பற்று நாம் சிந்தும் வியர்வைத் துளிகள் கூட இரத்தத்தின் வகையறாதான். நம் இரத்தப் பிரிவு என்ன என்பதைக் கண்டறிந்து கொள்வோம். ஒருவேளை அது நம் அவசரங்களில் அவசியப்படலாம். பிரிவுகள் இரத்தத்தோடு இருந்து போகட்டும், ஏனெனில் அவை மாற்ற முடியாதவை. மற்ற வகைப் பிரிவினைகள் மாறக் கூடியவை. அவை நமக்கு வேண்டாம். ஏனெனில் நாம் தூய மக்களினத்தவர் ஒரே கிறிஸ்தவத் திருக்கூட்டம்!

**செபம்:**

எங்களுக்காக செங்குருதி சிந்திய இயேசுவே! எம் வாழ்வில் சக மனிதர்களோடு எவ்விதப் பாகுபாடும் பாராட்டாமல் எல்லோரும் ஒரே மனித இனத்தவர் என்ற சமதர்ம உணர்வோடு வாழ வரம் அருளுமாறு உம்மை மன்றாடுகிறோம்.

**முதல்வர்** : எங்கள் பேரில்.....

**அனைவரும்** : எங்கள் பேரில்.....

**முதல்வர்** : மரித்த விசுவாசிகளின்......

## 13 இயேசு தாயின் மடியில் கிடத்தப்படுகிறார் – தலை

**முதல்வர்** : திவ்விய இயேசுவே!……

**அனைவரும்** : அதெனென்றால்……

மூன்றாண்டுகளுக்கு முன்பு இறையாட்சிப் பணிக்காக புறப்பட்டுச் சென்ற மைந்தன் தம் திருப்பணி முடித்து தாமறியாமல் தலை சாயக் கிடைத்த இடம் அன்னையின் மடிதான். ஒரு பெண்ணுக்கு தான் சாகும்வரை நினைவிலிருக்கும் மறக்கமுடியாத இழப்பு என்பது வளர்ந்துவிட்ட தன் தலைமகன் தனக்கு முன்னே இறந்துவிட்டு இறையடிச் சேர்வதுதான். தலைவனாக உருவெடுத்த தலைமகனின் உடலை கல்லறைக்குக் கொண்டு போக வேண்டிய நேரம் வரையில் தன் மடிசாய்த்து அன்னையின் வலக்கரம் தாங்கிப் பிடித்திருந்தது தன் தலைப்பிள்ளையின் தலையை!

**சிந்தனை:**

ஐம்புலன்களில் பெரும்பான்மையான உறுப்புகளை தன்னகத்தே கொண்டு விளங்குவது தலை. உடல் என்னும் தொழிற்சாலையை இயக்க, கட்டளையிட, கட்டுப்படுத்த தலைதான் தலைமையகம். இதன் அடிப்படையிலேதான் முக்கியமானவற்றுக்கும், முதலானவற்றுக்கும் தலை தொடர்பான சொற்றொடர்கள் உருவாயின. தலையின் மூளைப்பகுதி சிறிய அளவே எனினும் எவ்வளவு எடை கொண்ட உடலையும் அது இயக்குகிறது.

காணவும், கேட்கவும், சுவாசிக்கவும், உரைக்கவும், உணரவும் அமைந்துள்ள கண், செவி, மூக்கு, வாய், தோல் பகுதியோடு நம் வாழ்க்கை முழுக்க சிரமப்பட்டு சீவிப் பாதுகாக்கும் தலைமுடி கூட இறைவன் படைப்பில் ஓர் அற்புதத்தை நிகழ்த்துகிறது. உடலில் உஷ்ணம் ஏறுவதைக் குறைத்து, குளிர வைத்து உடலைப் பாதுகாக்கிறது. உடலின் உறுப்புக்கள் பட்டியலில் வராத தலைமுடிக்கும்கூட ஒரு தனி மகத்துவம் இருக்கிறது. மனிதர்கள்தான் கடவுள் படைப்பின் மகத்துவம் புரியாமல் வாழ்கிறார்கள்.

தலையின் தனித்தன்மையையும், முக்கியத்துவத்தையும் உணர்ந்துதான் புனித பவுலடியாரும் திருச்சபையாகிய உடலுக்கு இயேசுவைத் தலையென உருவகப்படுத்துகிறார். உண்மைதான், தலையில்லாமல் தேகம் இல்லை, இயேசு இல்லாமல் திருச்சபை இல்லை.

ஆனால் உடலாகிய திருச்சபையின் உறுப்பினர்களாகிய நாம் எந்த அளவுக்கு திருச்சபைக்கும் சமுதாயத்துக்கும் பயன்படுகிறோம்? நம்பகத்தன்மை இல்லாத தலைவர்களை ஏற்றுக்கொண்டு நாமே நம்பிக்கையிழந்து வாழ்கிறோம். நாம் நம்ப வேண்டிய ஒரே தலைவர் இயேசு கிறிஸ்துதான். அவரை நம்பி வாழும் வாழ்க்கை நம் தலைகளை வானோக்கி உயர வைக்கிறது.

நாமும் நம் தலைமுறையினரும் வாழ வேண்டும், பாவங்களிலிருந்து மீட்புப் பெற வேண்டும் என்பதற்காகவே தம் தலையில் முள்முடி சூட்டிக் கொண்ட இயேசுவைத் தவிர மேலான தலைவர் உலகில் எவர்தான் உண்டு?

**செபம்:**

எங்கள் தலைவரும் அரசருமாகிய இயேசுவே! திருச்சபையின் உறுப்பினர்களாகிய நாங்கள் உம் வார்த்தை வழி நடந்து உம் உடனிருப்போடு என்றும் வாழ வரமருளுமாறு உம்மை மன்றாடுகிறோம்!

**முதல்வர்** : எங்கள் பேரில்.....

**அனைவரும்** : எங்கள் பேரில்.....

**முதல்வர்** : மரித்த விசுவாசிகளின்......

## 14. இயேசு கல்லறையில் அடக்கம் செய்யப்படுகிறார் – ஆன்மா

இயேசுவை கல்லறையில் வைக்கும்போது, இயேசு என்ற ஒளி, மரணம் என்ற இருளைக் கிழித்துக் கொண்டு வெளிப்படப்போகிறது என்ற உண்மையை எவருமே அறிந்திருக்கவில்லை. சீடர்கள் யாவருமே உயிரும் உடலும் இழந்த இயேசுவின் ஆன்மா எப்போதும் தங்களை நேசிக்கும் என்று உறுதியாக நம்பினார்கள். உடலாலும் உயிராலும் இயேசு பிரிந்தாலும் தங்கள் ஆன்மாக்கள் உயிர் வாழும்போது மட்டுமல்லாமல் தங்கள் மரணத்துக்குப் பின்னும் இயேசுவோடு ஐக்கியமாகிவிடும் என்று உறுதிபட எண்ணிக் காத்திருந்தார்கள்.

**சிந்தனை:**

இவ்வுலகில் அழிவுக்குரியதான உடலோடு உயிர் ஒன்றித்திருக்கிறது. இவற்றோடு இணைந்திருக்கும் ஆன்மா மட்டுமே மறுவுலகில் நித்தியமாக வாழக்கூடியது. ஆன்மா மட்டுமில்லையென்றால்

நம்முடைய சிந்தனைகளில், செயல்களில் தெய்வீகம் இருக்காது. ஆன்மா இறைவனிடம் பேசக் கூடியது. அதுதான் அவரின் கேள்விகளுக்கு நாம் வாழ்ந்த விதத்தைப் பற்றிக் கணக்கு கொடுக்கக் கூடியது.

மரண நேரத்தில் உயிர் பிரிந்து போக உடல் மண்ணுக்குப் போகிறது. ஆனால் ஆன்மா கடவுளுக்குச் சேர வேண்டிய கடன் பொருளாக அவர் கரங்களிலேயே சேர்ந்து விடுகிறது. மரணத்துக்குப் பின்னும் மறுவுலக வாழ்வு இருக்கிறது என்னும் மறையுண்மைக்கு கருப்பொருளே ஆன்மாதான். நம்முடைய ஆன்ம முன்னேற்றத்துக்கு தடையாக இருப்பவை நம் சுயநலச் செயல்பாடுகளே. நம்முடைய சுயநலத்தால் அழிவுக்குரிய உடல், ஆன்மாவை உயர கீழ்நோக்கி அழுத்துகிறது. உயிரைக் காத்துக் கொள்ள உடலைப் பேணிப் பாதுகாப்பதுபோல் ஆன்மாவைக் காத்துக் கொள்ள புண்ணிய வாழ்வில் நிலை பெற வேண்டும். உலகமெல்லாம் ஆதாயமாக்கிக் கொண்டாலும், ஆன்மாவை இழந்துவிட்டால் நம்முடைய நிலை பரிதாபமே.

அழியக்கூடிய நம் தேகத்தின் செயல்பாடுகள் மூலமாகவே நம் ஆன்மாவைக் காத்து ஒளிவிடச் செய்ய முடியும். இயேசு உடலோடு வாழ்ந்தார். தம்மை உடைத்து நமக்கு கடைத்தேற்றம் புரிந்தார். அவரின் உயிரான உடல் இன்னமும் நமக்காக உடைபடுகிறது என்பதை அருட்பணியாளர்கள் அப்பத்தைப் பிட்டு அன்றாடத் திருப்பலியில் அடையாளப் பலியாக்கி உணர்த்திக் கொண்டிருக்கின்றனர்.

ஆன்மா இறைவனின் சொந்தம், உடலோ மண்ணுக்கு சொந்தம். ஆயினும் ஆன்ம நலனைக் கெடுத்துக் கொண்டு இந்த உலகில் சேர்த்து வைக்கும் செல்வங்களை தாங்கள் நிரந்தரமாக அனுபவிக்கப் போவதில்லை என்பதை உணர்ந்தும் முறையற்ற ஆசைகளோடும், நிறைவற்ற மனதோடும் நம்மில் பலர் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள் என்பதுதான் நெஞ்சைச் சுடும் உண்மை!

**செபம்:**

எல்லாம் வல்ல இறைவா! அழியக்கூடிய ஐம்புலன்களின் வாயிலாய் நாங்கள் செய்யும் நற்செயல்களெல்லாம் அழியாத ஆன்மாவை ஒளிரச் செய்யும் புனிதச் செயல்களாக அமைய வரம் வேண்டி உம்மை மன்றாடுகிறோம்!

**முதல்வர்** : எங்கள் பேரில்.....

**அனைவரும்** : எங்கள் பேரில்.....

**முதல்வர்** : மரித்த விசுவாசிகளின்......

# சிலுவைப்பாதை – 3

# சிலுவைப் பயணம்



அருட்பணி ஜெயசீலன் சவரியார்பிச்சை ச.ச.

# சிலுவைப் பயணம்

## முன்னுரை

அன்பார்ந்தவர்களே, இயேசு எதிர்கொண்டது சிலுவைப் பயணம். இது முடிந்துபோன பாதையல்ல, மாறாக தொடர்ந்துகொண்டிருக்கும் பயணம். சிலுவைப் பயணம் நீங்கா நினைவுப் பயணம். நமது வாழ்க்கையில் நடக்கும் அவலங்களைச் சுட்டிக்காட்டும் உயரியப் பயணம்; நாம் எதிர்கொள்ளும் துன்பங்களை, துயரங்களைத் தாங்கி நிற்கும் சுமைதாங்கிப் பயணம்; நமது குழப்பங்களுக்கும், கேள்விகளுக்கும் விடைகொடுக்கும் ஆற்றுப் பயணம்; சோர்ந்தவர்களுக்கு தோள்கொடுக்கும் ஆறுதல் பயணம்; திசைமாறிச் செல்லும் அனைவருக்கும் இது ஒரு ஆன்மீகப் பயணம்; நமது அன்றாட வாழ்க்கையின் அர்த்தங்களை எடுத்துச் சொல்லும் அன்பின் பயணம். ஆம், இது ஆன்மீகத்தின் தொடர் பயணம்.

நமது ஒவ்வொருவரின் வாழ்விலும் இந்த பயணம் தொடர்கிறது. சிறுவயது முதல் முதுமை அடையும் வரை இந்த பயணம் தொடர்கிறது; காலை முதல் மாலை வரை பல வழிகளில் இந்த பயணம் தொடர்கிறது; பிறப்பு முதல் இறப்பு வரை இதன் தொடர் ஓட்டம் இருந்துகொண்டே இருக்கும். அன்றாட நிகழ்வுகளில் நடக்கும் சோகங்களையும், துக்கங்களையும், சோதனைகளையும், வேதனைகளையும், நினைவில் கொண்டு இந்த சிலுவைப் பயணத்தைத் தொடர்வோம்! நமது சிலுவைப் பயணங்கள் இயேசுவின் பயணத்தைப் பிரதிபலிக்கட்டும். நாம் அனைவரும், இயேசுவோடு இணைந்து நமது சிலுவைப் பயணத்தை தொடர்வோம்!

## முதல் நிலை
## உண்மை, குற்றவாளிக் கூண்டில்!

**முதல்வர்** : திவ்விய இயேசுவே! உம்மை ஆராதித்து வணங்கி, உமக்கு நன்றியறிந்த தோத்திரம் செய்கிறோம்.

**அனைவரும்** : அதெனென்றால் உமது பாரமான திருச்சிலுவையாலே உலகை மீட்டு இரட்சித்தீர்.

இன்பன் ஒரு துடிப்பான இளைஞன். பெயருக்குத் தகுந்த குணம் படைத்தவன். சிறியவர் தொடங்கி முதியவர்வரை அனைவரிடமும் அன்பாக நடந்து கொள்பவன். சிறுசிறு உதவிகளைச் செய்து அனைவரையும் மகிழ்ச்சி வெள்ளத்தில் நனைப்பவன். நன்மையும் உண்மையும் கலந்த கலவை என்றே சொல்லலாம். இன்பனின் தன்னலமில்லா மகிழ்ச்சி ஒருசில இளையோருக்கு வீழ்ச்சியைக் கொடுத்தது. எப்படியாவது அவனின் நற்பெயருக்கு களங்கம் விளைவிக்க வேண்டும் என்று நினைத்தனர். அதற்கான தகுந்த நேரத்தை தேடினார்கள். ஒருநாள் அவர்கள் ஒரு சிறுவனின் பெற்றோரிடம் சென்று இன்பனைப்பற்றி தவறுதலாக சித்தரித்தனர். சிறுவர்களை மயக்கி தன் வயப்படுத்துகிறான், இனிய வார்த்தைகளால் அவர்களை மடைமாற்றம் செய்கின்றான், இப்படியே சென்றால் உங்கள் குழந்தையின் எதிர்காலம் உங்கள் கையில் இல்லை. இவ்வார்த்தைகளைக் கேட்டு உண்மையை ஆராயாமல், உணர்ச்சி வசப்பட்டு இன்பனை வெறுக்கிறாள் அவனது தாய். அதைப் பார்த்து மற்ற குழந்தைகளின் பெற்றோரும் அவனை வெறுக்க ஆரம்பிக்கின்றனர். அங்கிருந்த பெரியவர்களும் இன்பனை வில்லனாகப் பார்க்க, நடப்பதைப் பற்றி அறிவதற்கு முன்பே, இன்பன் அனைவருக்கும் துன்பனாக மாறுகிறான், அந்த ஊரிலிருந்து விரட்டப்படுகிறான்! உண்மை ஓரங்கட்டப்பட்டு, பொய்மை பரவலாக்கப்படும் காலமிது.

நன்மைக்கும் உண்மைக்கும் ஊற்றானவர் இயேசு. உலக வாழ்வில் ஒருவருக்கும் தீங்கு நினைக்காதவர். பாவிகளை இரக்கத்தோடு பார்த்தார், நோயுற்றோரைக் குணப்படுத்தினார், இறந்தோரை உயிர்த்தெழச்செய்தார், நற்சிந்தனைகளைப் போதித்தார், தவறுகளைச் சுட்டிக் காட்டினார், தீச்செயல்களைச் சாடினார், பகைவனையும் அன்பு

செய்யச் சொன்னார், நிலைவாழ்விற்கு அழைப்பு விடுத்தார். இறுதியில் அவருக்கு மரணதண்டனை பரிசாக அளிக்கப்பட்டது. நன்மைக்கும், தீமைக்கும் உள்ள போராட்டத்தில், தீமை வெற்றி பெற்றது. உண்மைக்கும் பொய்மைக்கும் நடுவே நடந்த சண்டையில் உண்மை நிர்வாணமாக்கப்பட்டது, எள்ளி நகைக்கப்பட்டது.

நாம் உண்மைக்காக பழிக்கப்பட்டவர்களா? நாம் இயேசுவோடு பயணிக்கின்றோம். கடவுள் இல்லா உலகை நோக்கி இன்றைய தலைமுறை பயணிப்பதை நாம் கண்கூடாகப் பார்க்கின்றோம். உண்மை பேசுபவர்களை, நன்மை செய்பவர்களை ஓரங்கட்டி, பொய்மை கூட்டத்தை முன்னிலைப்படுத்தும் ஒவ்வொரு நேரமும் நாம் உண்மை இயேசுவை குற்றவாளிக் கூண்டில் நிறுத்துகிறோம்!

## இரண்டாம் நிலை
## அமைதியை அழுத்தும் ஓசை

**முதல்வர்** : திவ்விய இயேசுவே!......

**அனைவரும்** : அதெனென்றால்......

அழகான வீடு, அமைதியான குடும்பம், குழந்தைகளின் ஆரவாரம், தாய், தந்தையரின் பாசம், பெரியவர்களின் ஆசீர், என்று மகிழ்ச்சியாக ஏறுமுகப் பாதையில் சென்றுகொண்டிருந்த குடும்பத்தில், திடீரென்று கணவன் மனைவிக்குள் சிறு சண்டை. முனகிக்கொண்டு இருந்தவர்கள், உரக்க பேச ஆரம்பித்தனர். கணவன் தனது குரலை உயர்த்த, அவனிடம் தவறு இருக்கிறது என்று தெரிந்தும், குடும்பத்தின் நலனுக்காக தன் குரலை தாழ்த்தி அமைதியாகிறாள் மனைவி. அவளின் அமைதி கணவனுக்கு வாய்ப்பாக அமைகிறது, தனது குரலை மேலும் உயர்த்துகிறான், குழந்தைகளும், பெரியவர்களும், அக்கம் பக்கத்தில் உள்ளவர்களும் மனைவி மேல்தான் தவறு இருக்கிறது என்று எண்ணுகிறார்கள். அவளைப் பற்றி, அவளின் அமைதியைப் பற்றி இல்லாதது, பொல்லாதது சொல்லி அவள்மேல் பழி சுமத்துகிறார்கள். அமைதியின் தோள்களில் ஓசையின் சிலுவை.

இயேசுவின் நன்மைத்தனத்தை ஏற்றுக்கொள்ள முடியாதவர்கள், அவரின் தெளிந்த சிந்தனைகளால் எச்சரிக்கப்பட்டவர்கள், அவரின் இறையரசைப் புறக்கணித்தவர்கள் தங்கள் குரலை இயேசுவிற்கு எதிராக

உயர்த்தினார்கள். இயேசுவின் அமைதியை அவர்கள் பயன்படுத்திக்கொண்டார்கள். பொய் குற்றச்சாட்டுகளோடு வாய்கிழியக் கத்தினார்கள். "பரபாவை விடுதலை செய்யும்", "இவன் சாகப்பிறந்தவன்" என்று உரக்கக் கத்தி இயேசுவின் தோள்களில் சிலுவையை சுமத்துகிறார்கள். இங்கே ஓசை வெற்றி பெற, அமைதி தோற்கடிக்கப்படுகிறது.

ஓசை, அமைதியை குலைக்கும் காலமிது. ஓங்கி ஒலிக்கும் ஓசைதான் உண்மை என்று நினைத்து அமைதியை பழி தீர்க்கும் நேரமிது. அமைதியாக இருப்பவர்கள்மேல் மென்மேலும் சுமைகளை அதிகரிக்கும் தலைமுறை இது. நாம் நமது அமைதியினால் துன்புறுத்தப்படுகிறோமா? நமது தோள்கள் இயேசுவின் தோள்களைப் பிரதிபலிக்கின்றது. அமைதியோடு நமது தோள்களுக்கு ஆற்றலையும் இறைவன் தருவார் என்ற நம்பிக்கையோடு பயணத்தை தொடர்வோம்!

**முதல்வர்** : எங்கள் பேரில்.....

**அனைவரும்** : எங்கள் பேரில்.....

**முதல்வர்** : மரித்த விசுவாசிகளின்......

## மூன்றாம் நிலை
## விழுவோம் எழுவோம்!

**முதல்வர்** : திவ்விய இயேசுவே!......

**அனைவரும்** : அதெனென்றால்......

அவன் கடின உழைப்பாளி. இரண்டு தங்கைகளுக்கு திருமணம் செய்து வைக்கவேண்டும் என்ற பொறுப்பை அறிந்தவன். படிப்பை நிறுத்திவிட்டு வேலைக்குச் செல்கிறான். சரியான வருமானம் இல்லாததால் வெளிநாட்டிற்குச் செல்கிறான். கிடைத்த பணத்தை வீட்டிற்கு தவறாமல் அனுப்பி வைக்கிறான். இறுதியில் இரு தங்கைகளுக்கும் திருமணம் செய்துவைத்த மகிழ்ச்சியில் இருக்கும்போதுதான் தெரிய வருகிறது, தனது குடும்பமானது மிகப்பெரிய கடன் சுமையால் தள்ளாடிக்கொண்டு இருக்கிறது என்று. அனைத்துமே இவன் தோள்களை அழுத்த, நிலை தடுமாறி விழுகிறான் வாழ்க்கையின் கடைக்கோடியில். தன் நலனை மறந்து, தனது திருமணத்தைக் கூட நினைத்துப் பார்க்காமல்,

தனக்கென்று ஒரு வருங்காலத்தை எதிர்பார்க்காமல், குடும்பத்தின் சுமையை சுமந்து, மாதம்தோறும் கடின உழைப்பின் பயனை அப்படியே வீட்டிற்கு அனுப்பியவனுக்கு உறவுகள் கொடுத்தது கடன் சுமை. நிமிர்ந்து நிற்கவேண்டியவன் நிலை குலைந்து விழுகிறான்.

நற்சொற்களின், செயல்களின் நாயகன் இயேசு. நான்கு பேரின் நலனில் அக்கறை கொண்டவர். “நானும் உன்னைத் தீர்ப்பிடவில்லை, “இனிமேல் பாவம் செய்யாதே” என்று விபச்சாரத்தில் பிடிபட்ட பெண்ணிடம் கனிவான வார்த்தைகளைச் சொன்னவர். இரண்டு மீன்களையும், ஐந்து அப்பங்களையும் பகிர்ந்து பசியால் இருந்த பல்லாயிரம் பேருக்கு பகிர்ந்தளித்தவர், என்று அவரின் நன்மைத்தனத்தை அடுக்கிக்கொண்டே போகலாம். ஆனால் நன்மைகளை மட்டுமே செய்தவருக்கு தண்டனை, கீழே தள்ளப்பட்டதுதான். தீயச் சிந்தனைகள் இணைந்து இயேசுவின் தோள்களை அழுத்த கீழே விழுகிறார். நன்மைக்கும் தீமைக்கும் உள்ள போரில், நன்மை கீழே தள்ளிவிடப்படுகிறது.

நன்மை செய்வோரை எள்ளி நகைக்கும் மனிதர்களின் எண்ணிக்கை ஆயிரம். உதவிகளை ஏற்றுக்கொண்டு, உதவியவர்களை உதாசீனப்படுத்தும் தனி நபர்களும் ஏராளம். அவ்வாறு செய்யும்போது நாமும் இயேசுவைக் கீழே தள்ளிவிடுகிறோம். நற்செயல்களுக்காக வஞ்சிக்கப்பட்டவர்களா நாம்? இயேசுவோடு நாமும் கீழே தள்ளப்படுகிறோம், கீழே விழுந்த நம்மை, இயேசு மீண்டும் எழுப்புவார்! விழுவோம், உண்மைதான், ஆனால் இயேசுவோடு எழுவோம்!

**முதல்வர்** : எங்கள் பேரில்.....

**அனைவரும்** : எங்கள் பேரில்.....

**முதல்வர்** : மரித்த விசுவாசிகளின்......

## நான்காம் நிலை
## தாயின் துணிவு

**முதல்வர்** : திவ்விய இயேசுவே!......

**அனைவரும்** : அதெனென்றால்......

அவள் ஒரு வழிப்போக்கர். வயிற்றுப் பசியைப் போக்க தன் குழந்தையுடன் பலரிடம் யாசித்து வாழ்பவள். ஒருநாள் இரவு நேரம், சந்தேகத்தின் பெயரில், அவளை காவல்நிலையத்திற்கு அழைத்துச் செல்கின்றனர். காவலர்கள் குழந்தையை அங்கேயே விட்டுவிக்கின்றனர் தாயின் மனம் பதைபதைக்க, குழந்தையைப் பிரிய மனமில்லாமல் போராடினாள், வேண்டினாள், கெஞ்சினாள். குழந்தையை என்னோடு கூட்டி வருகிறேன் என்றாள். ஆனால் அவர்கள், அவளை மட்டும் வலுக்கட்டாயமாக சிறையில் அடைத்தனர். காலையில் அவளைச் சிறையில் காணாமல் அதிர்ச்சியடைந்தனர். சிறிது நேரத்தில் அந்த தாயானவள் தன் குழந்தையுடன் காவல்நிலையத்திற்கு திரும்பியது அனைவரையும் ஆச்சரியத்தில் ஆழ்த்தியது. காவலர்கள் அவளை வினவ, அவள் சொன்னாள், என்னுடைய குழந்தை இரவு முழுவதும் தனியாக என்ன செய்து கொண்டிருப்பாள் என்று என் மனம் வெதும்பியது. என் குழந்தையைப் பிரிய மனமில்லை, ஆகவே இங்கிருந்த மதில் சுவர் மேல் ஏறிச்சென்று, என் குழந்தையைத் தேடிக் கண்டுபிடித்து, திரும்பி வந்துவிட்டேன். குழந்தையின் மேல் உள்ள பாசம், மதில் சுவர் தாண்டும் துணிச்சலைக் கொடுத்தது அந்த தாய்க்கு.

கடவுளின் திட்டத்திற்கு "ஆம்" என்று சொல்லி தனது சம்மதத்தை தெரிவித்தவள் அன்னை மரியா. கடவுளின் தாய் என்றால் சிறப்புதானே, என்று எண்ணியவளுக்கு பல ஏமாற்றங்கள், பல வியாகுலங்கள். "உமது உள்ளத்தையும் ஒரு வாள் ஊடுருவிப் பாயும்" என்ற சிமியோனின் வார்த்தைகள்; சிறு வயதிலேயே பெற்றோரை மறந்துவிட்டு கோவிலிலே தங்கி விடுகிற இயேசு; "எனது தாய் யார்?" என்று கேட்டு மரியாளுக்கு அதிர்ச்சி கொடுக்கின்ற தருணங்கள்; தனது மகனைப் பைத்தியக்காரன் என்று பிறர் சொல்லக் கேள்விப்பட்டு நொந்து போகிற இதயம்; இறுதியில் கயவன் என்றும், பொய்யன் என்றும் பட்டம் சூட்டி, தன்னுடைய மகனை பாரச்சிலுவையோடு, முள்முடி தலையோடு, இரத்தம் சிந்தும் கோலத்தில்

சந்திக்கின்றாள் மரியா. அவளின் துணிவு, உண்மையான அன்பின் வெளிப்பாடு. தோல்விகளைக் கண்டு துவண்டுவிடாமல், துன்பத்தில் தோள்கொடுத்து தனது உடனிருப்பை பகிர்ந்து கொள்கிறாள்.

நாம் பிறர் துன்பத்தில் இருக்கும்போது அவர்களோடு உடனிருப்பவர்களா? நாம் மரியாவின் பிள்ளைகள். துணிவு என்பது துன்பத்தை எதிர்கொள்வதில் இருக்கும் ஆதாயம். மரியாவின் துணிவோடு, நமது துன்பங்களை எதிர்கொள்வோம்!

**முதல்வர்** : எங்கள் பேரில்.....

**அனைவரும்** : எங்கள் பேரில்.....

**முதல்வர்** : மரித்த விசுவாசிகளின்......

## ஐந்தாம் நிலை
## உதவியின் உறவு

**முதல்வர்** : திவ்விய இயேசுவே!......

**அனைவரும்** : அதெனென்றால்......

சீராகச் சென்ற அவன் வாழ்க்கை, திடீரென்று சறுக்கியது. பல முயற்சிகள் செய்தான், முட்டி மோதினான், சறுக்கல் இரட்டிப்பானது. தொடர் முயற்சிகள், தொடர்ந்த பயணங்கள், எல்லாமே வீணாகிவிட்டது. சறுக்கல்களை ஏற்றுக்கொள்ள முடியாதவன் சரிந்தே விட்டான். வாழ்க்கையின் எல்லைக்கே சென்று விட்டான். அருகிலிருந்தவர்கள், சிரித்துப் பழகியவர்கள் அனைவருமே, நம்மிடம் உதவிகள் எதிர்பார்ப்பானோ என்று நினைத்து, அவனைவிட்டு வெகுதூரம் சென்றுவிட்டனர். அவனை வேண்டாதவனாகப் பார்த்தார்கள். அனைவரும் கைவிட்ட நிலையில், பசியின் கொடுமையில், தனிமையில் செய்வதறியாது திகைத்தபோது, பக்கத்துவீட்டு மூதாட்டி, அவன் நிலை உணர்ந்து, தனக்காக வைத்திருந்த உணவை, அவனுக்கு கொடுத்து சாப்பிட வைக்கிறாள். உடலைப் பார்த்துக்கொள், தளர்ந்துவிடாதே, சாப்பிட இல்லையென்று கவலை வேண்டாம், நான் இருக்கிறேன், என்ற மூதாட்டியின் வார்த்தைகள், அவனுக்கு புத்துணர்வு தந்தது, எழுந்து நடக்க ஆற்றல் தந்தது.

பாரச் சிலுவை சுமந்து, முள்முடிகளால் முகம் சிதைந்து, சிலுவையின் சுமையால் கீழே விழுந்து, உருவிழந்த நிலையில் தன் தாயைச் சந்தித்த கால்கள், இப்போது தடுமாறுகின்றன; வலுவான தோள்கள் வலுவிழந்து, தளர்ந்து, தடம் மாறுகின்றன. தொடர்ந்தவர்கள், உடன் பயணித்தவர்கள், வல்லச் செயல்களால் பயனடைந்தவர்கள் அனைவரும் இயேசுவின் அருகில் செல்ல மனமில்லாதவர்களாய், தூரத்திலிருந்து அவரைப் பின் சென்றனர். இந்நிலையில்தான் முகம் தெரியாத சீமோனின் உதவி, உண்மையில் ஒரு உறவின் தொடக்கம்; இயேசுவுக்கும் சீமோனுக்கும் இடையே ஏற்பட்டது தெய்வீக உறவு. முன்பின் தெரியாதவர்கள் இயேசுவும் சீமோனும், ஆனால் சிலுவை உதவியால் வரலாற்று உறவினர்கள் ஆகின்றனர்.

நாம் உதவி செய்யும் மனம் படைத்தவர்களா? நாம் சீமோனைப் போல உறவு மனிதர்கள். மெலிந்தவர்க்கும், நலிந்தவர்க்கும் செய்யும் உதவி, உதவியல்ல, மாறாக அது உறவு; தெய்வீக உறவு. அந்த உறவு அவனை வாழ வைப்பதால் அல்ல, மாறாக அதுதான் வாழ்க்கை என்பதால். அடுத்திருப்பவனுக்கு உதவு, உறவுகள் நம் வசம்!

**முதல்வர்** : எங்கள் பேரில்.....

**அனைவரும்** : எங்கள் பேரில்.....

**முதல்வர்** : மரித்த விசுவாசிகளின்......

## ஆறாம் நிலை
## முகத்தின் பதிவு

**முதல்வர்** : திவ்விய இயேசுவே!......

**அனைவரும்** : அதெனென்றால்......

சிரிப்பில்லா முகம், கனத்த இதயம், வார்த்தைகள் இல்லா குரல், உணவு இல்லா இரண்டு நாட்கள், சுருண்டு விழுகிறாள் அந்த தாயானவள், காரணம் தனது மகளை இழந்த சோகம். ஏற்றுக்கொள்ள முடியாத வேதனை; ஆறுதலை ஏற்க மறுக்கும் உள்ளம்; ஆற்றுப்படுத்த முடியாத மனது. சோகத்தின் எல்லைக்கே சென்றுவிட்டாள். சட்டென்று விழிக்கிறாள், அருகிலே சுருண்டு படுத்திருக்கும் மகன், மூலையில் முடங்கி

நிற்கும் கணவர் என்று வீடே அழகு இழந்து, இருட்டில் இருந்ததை உணர்கிறாள். தன் கவலையை மறைத்து, தனது மகனைக் கட்டி அணைக்கின்றாள், கணவனை ஆற்றுப்படுத்துகிறாள், சமையலறையில் அடுப்பு எரிந்து உணவு தயாரானது, வாடிய முகங்கள் மலர ஆரம்பித்தன. சிதைந்த முகங்களின் பதிவு அவளின் உள்ளத்தின் ஆழத்தில் புதைந்தது. மெல்ல மெல்ல வீட்டில் புத்துணர்வு பிறக்கிறது. சோகமான முகங்கள் புன்னகை முகங்களாக மாறின. ஆனால் அந்த தாயின் மனதில் சோகங்களும், வேதனைகளும் மறைவாகப் பொதியப்பட்டன.

முள்முடியால் பீறிட்டு பாய்ந்த இரத்தம், கசை அடிகளால் ஏற்பட்ட வேதனை, சிலுவையின் கனம், இயேசுவின் முகத்தை மறைக்க; கூடியிருந்த மக்களின் வசை மொழிகள், இவரைப் பழிதீர்க்க நினைத்த பரிசேயர்களும், சதுசேயர்களும், ஆரவாரத்தோடு சொன்ன பழிச் சொற்கள்; நெஞ்சிற்கு நெருக்கமான சீடர்களின் ஒளிவு மறைவு இவை அனைத்தும் இயேசுவின் முகத்தைச் சிதைத்தது. சிதைத்த முகத்தை சீர் செய்ய எழுகிறாள் வெரோணிக்கா. கூட்டத்தின் நெரிசல், கூடி இருந்தவர்களின் எதிர்ப்பு, அவர்களின் உச்சக்கட்ட கோபம், அனைத்தையும் தாண்டி, இயேசுவை நோக்கி தனது பார்வையை பதிக்கிறாள். சிதைந்த முகத்தை சீர் செய்ய ஆசிக்கிறாள், தைரியமாக இயேசுவின் அருகில் தன்னை நகர்த்துகிறாள் வீரப்பெண். இயேசுவின் முகத்தை, தான் வைத்திருந்த துணியால் துடைக்கிறாள், அவரின் சிதைந்த முகம் அந்த துணியில் பதிவாகி, அவரின் முகம் தெளிவாகிறது.

நாம் சோகமான முகங்களுக்கு, புன்னகை தருபவர்களா? வெரோணிக்கா போல் வீர மனிதர்கள் நாம். சிதைந்த முகங்களைச் சீர் செய்யும் மாமனிதர்களாக, தெளிவான முகங்களுக்கு முகவரியாக, இயேசுவின் சாயலாக இருக்க தொடர்ந்து நடப்போம்!

**முதல்வர்** : எங்கள் பேரில்.....

**அனைவரும்** : எங்கள் பேரில்.....

**முதல்வர்** : மரித்த விசுவாசிகளின்......

## ஏழாம் நிலை
## மீண்டும் எழுவோம்!

**முதல்வர்** : திவ்விய இயேசுவே!......

**அனைவரும்** : அதெனென்றால்......

அலுவலகப் பணிகளைச் சிறப்பாக செய்பவள் அவள். அனுபவம் அதிகமாக இருப்பதாலும், திறமை மிகுந்து இருப்பதாலும், இடைவேளைகளில் மற்றும் தனது ஓய்வு நேரங்களில், தேவைப்பட்டால் அலுவலகத்திற்குச் சென்று உதவி செய்பவள். நாட்கள் நகர்ந்தன, ஒருவகையான மந்த நிலைக்குத் தள்ளப்பட்டாள். மகிழ்ச்சியாக, தன்னிச்சையாக, மனமுவந்து உதவி செய்தவளுக்கு அதுவே பளுவாக, பாரமாக மாறிவிட்டது. உதவிக்காக வேண்டுகோள் செய்தவர்கள், அவளை அதே உதவிக்காக கட்டாயப்படுத்தி அவளின் உதவிகளைப் பயன்படுத்தி அவரவர் தேவைகளை நிறைவு செய்துகொண்டு, புகழ் சம்பாதித்தனர். இறுதியில் அவளுக்கு கிடைக்கவேண்டிய பதவி உயர்வும் மறுக்கப்பட்டு, வஞ்சிக்கப்பட்டு, கீழே தள்ளப்பட்டாள். பிறருக்கு பாரபட்சமின்றி உதவி செய்பவர்களை, ஏறி நின்று மிதிப்பது வாடிக்கையாகிவிட்டது.

சுமையின் அழுத்தம் இரட்டிப்பாக, வஞ்சக வார்த்தைகள் இதயத்தைப் பிளக்க, கசை அடிகள் உடலின் சதையைக் கிழிக்க, முள்முடிகளால் முகத்தில் பதிந்த இரத்தம் உடலுக்கு பீறிட்டுப் பாய, கால்கள் தளர, இரண்டாம் முறையாகக் கீழே விழுகிறார் இயேசு. வீழ்ந்தும் கசையடிகள் அவரைப் பதம் பார்த்தன. காவலர்களின் கால்கள் அவர்மேல் பதிந்தன; விழுந்தவர் முகம் மண்ணை முத்தமிட்டது. “இவன் கதை முடிந்துவிட்டது, இனிமேல் இவனால் எழுந்து நடக்க முடியாது” என்று சொல்லி எள்ளி நகையாடியவர்களுக்கு சம்மட்டி அடி கொடுக்கும் படியாக, இயேசு மீண்டும் எழுந்து நடக்கிறார். தன்னை வஞ்சித்தவர்களுக்கு, “கடவுளின் அருளால் என்னால் எழுந்து நடக்க முடியும், அவர் துணையால் எல்லாமே சாத்தியம்” என்பதை தனது அனுபவத்தால் எடுத்துச் சொல்கிறார்.

மீண்டும் எழுவது ஒரு புதிய வரலாற்றின் தொடக்கம். நாம் மீண்டும் மீண்டும் வஞ்சிக்கப்பட்டவர்களா? இயேசுவோடு எழுந்து நடக்க அவர் அருள் வேண்டுவோம், மீட்பின் வரலாற்றில் பங்குபெறுவோம்!

| | | |
|---|---|---|
| **முதல்வர்** | : | எங்கள் பேரில்..... |
| **அனைவரும்** | : | எங்கள் பேரில்..... |
| **முதல்வர்** | : | மரித்த விசுவாசிகளின்...... |

## எட்டாம் நிலை
## அழுகையின் அன்பு

| | | |
|---|---|---|
| **முதல்வர்** | : | திவ்விய இயேசுவே!...... |
| **அனைவரும்** | : | அதெனென்றால்...... |

சமூகத்தின்பால் ஆர்வமுள்ள இளைஞன் அவன். ஆங்காங்கே நடக்கும் அநீதிகளைத் தட்டிக் கேட்பவன். மக்களின் உரிமைகளுக்காக குரல் கொடுப்பவன். உண்மைக்கும், நேர்மைக்கும் அடி பணிபவன். மக்களும் அவன்மேல் மரியாதை வைத்திருந்தனர். மக்கள் மத்தியில் இவன் குரல் ஓங்கி இருந்தது. ஆனால் அந்த ஊரிலிருந்த சில அரசியல்வாதிகளுக்கும், பணக்காரர்களுக்கும் இவன் எதிரி. இவனின் குரலை எப்படியாவது ஒடுக்கவேண்டும் என்று பலவாறு திட்டம் தீட்டினர். இவனைத் தவறாகச் சித்தரித்து, ஒரு புரளியைக் கிளப்பினார்கள். ஒட்டுமொத்த ஊரும் இவனுக்கு எதிராகத் திரண்டது. மக்கள் இவனை வஞ்சித்து, இல்லாத பொல்லாத வார்த்தைகளால் திட்டினர். அது ஒரு புரளி, உண்மையல்ல என்ற உண்மையை, பல முறை, தன்னால் இயன்றவரை, எடுத்துச் சொல்லியும் அதை எவரும் ஏற்க வில்லை. ஒரு சிலரால் தூண்டப்பட்டு, மக்கள் அனைவரும் இணைந்து அந்த இளைஞனை அடித்தனர், உதைத்தனர். அவன் மனம் உடைந்து போய், கனத்த இதயத்தோடு, அவனது கண்ணீர் உடலை நனைத்தது. அவன் அழுகையைப் பார்த்து சிரித்த கூட்டத்தின் நடுவில், ஒரு மூதாட்டியின் கண்கள் மட்டும் கண்ணீரால் நனைந்தது. அவள் அழுகையில் அன்பு நிறைந்திருந்ததை உணர்ந்தான், உறைந்தான்.

இயேசு வாழ்ந்த காலக்கட்டத்திலே, பெண்கள் மதிக்கப்படவில்லை, அவர்களுக்கான முக்கியத்துவம் கொடுக்கப்படவில்லை, அவர்களை அந்த சமுதாயம் ஒரு பொருட்டாகவே கருதவில்லை. ஆண்களுக்கு குறைந்தவர்களாக, திறமை இல்லாதவர்களாக, தரம் தாழ்ந்தவர்களாக, அடுப்பு ஊதும் பெண்களாகவே சித்தரிக்கப்பட்டார்கள். ஆனால் இயேசு அவர்களைக் கண்டுகொண்டார், தாயாக, சகோதரியாகப் பார்த்தார், ஏன்! அவர்களில்

சிலரை தனது சீடத்திகளாக ஆக்கி அழகு பார்த்தார். அருகிலிருந்து அவருடைய வல்லச் செயல்களைக் கண்கூடாகப் பார்த்து ரசித்தவர்கள் பட்டாம் பூச்சிகளாகப் பறந்துவிட, சிறிது தூரத்திலிருந்து அவரைப் பின்தொடர்ந்த பெண்கள், அருகில் சென்று அவருக்காக அழுகிறார்கள், ஆறுதல் சொல்கிறார்கள். இந்த வீரப்பெண்கள் அவர்களின் அழுகையின் வாயிலாக, இயேசுவின்பால் உள்ள அன்பை அபரிமிதமாக வெளிப்படுத்தினார்கள்.

பிறர் துன்பத்தில் இருக்கும்போது நாம் அவர்களுக்காக அழுபவர்களா? நாம் இயேசுவைச் சற்று தூரத்திலிருந்து பின்தொடர்ந்த சீடர்களே. பிறருக்காக அழுபவன் இயேசுவுக்காக அழுகிறான். பிறருக்காக பரிவு கொள்பவன், இயேசுவுக்காக பரிவு கொள்கிறான்.

**முதல்வர்** : எங்கள் பேரில்.....

**அனைவரும்** : எங்கள் பேரில்.....

**முதல்வர்** : மரித்த விசுவாசிகளின்......

## ஒன்பதாம் நிலை
## மீண்டும் மீண்டும் எழுவோம்!

**முதல்வர்** : திவ்விய இயேசுவே!......

**அனைவரும்** : அதெனென்றால்......

நட்புக் கூட்டத்தை நம்பிய அவன், சுயமாக தொழில் ஒன்று தொடங்குவதற்கு தயாராகிறான். தன்னிடமிருந்த அனைத்தையும் முதலீடு செய்கிறான். உறவினர்களின் உந்துச் சொற்கள் ஒருபுறம், நண்பர்களின் நம்பிக்கைச் செயல்கள் மறுபுறம். துணிந்து எழுகிறான், வியாபாரத்தைத் தொடங்குகிறான். உடனிருந்தவர்கள் துணையால் சிறிது சிறிதாய் முன்னேற்றம் காண்கின்றான். மகிழ்ச்சியோடு தொடங்கி தொடர்ந்தது தொழில். வாழ்வில் ஏற்றம் கண்டு, அடுத்த படியை எட்டிப் பார்க்கும்போது, தொடங்கியது தொல்லை. நம்பிக்கைக்கு நங்கூரமாக இருந்த நட்புக் கூட்டமும், உடனிருந்து உதவி தோள்கொடுத்த உறவுக் கூட்டமும், இவன் வளர்ச்சியில் பொறாமை கொண்டனர். மெல்ல மெல்ல இவனை விட்டு விலகினர். இன்னும் சிலர் அவன் வியாபாரத்திற்கு தடையாக இருந்தனர். முதுகில் குத்தி அவனைத் தரையில் தள்ளினர்.

அவன் நம்பி இருந்த அனைவரும் செய்த ஏமாற்று வேலைகள், அவனை மீளாப் பாதாளத்திற்குத் தள்ளிவிட்டது, எழுந்து நடக்க முடியாத நிலைக்கு உருக் குலைக்கப்பட்டான். நல்லதை நினைத்து, நல்லவற்றையே செய்த இவனுக்கு, உடனிருந்தவர்கள் கொடுத்த பரிசு, துரோகம்!

இயேசுவுக்கு அடிமேல் அடி, தாங்கிக்கொள்ள முடியா வலி, மீள முடியாத் துயரம், நடக்க சக்தி இல்லை. சிலுவையைத் தூக்கிச் செல்ல, தோள்களுக்கு ஆற்றலும் இல்லை, கால்களுக்கு வலிமையும் இல்லை. மூன்றாவது முறையாக சிலுவையோடு கீழே விழுகிறார். அதிகாரத்தோடு இறையாட்சியைப் பறைசாற்றியவர், ஒரு வார்த்தையால் பேய்களை ஓட்டியவர், தனது புனிதக் கரங்களால் நோய்களைக் குணமாக்கியவர், இப்பொழுது அதிகார வர்க்கங்களால், அவர்களின் ஆணவத்தின் ஆதிக்கத்தால், கீழே தள்ளிவிடப்படுகிறார். ஆனால் அவர்களால், இயேசுவின் இறையாட்சிக் கனவைச் சிதைக்க முடியவில்லை. எழுகிறார், இறையாட்சியை மலரச் செய்ய, உண்மைக்கு சாட்சியமாக, இறைவனின் சித்தத்தை நிறைவேற்றுவதற்காக, மீண்டும் மீண்டும் எழுகிறார். எழுந்து நடக்கிறார்.

உண்மைக்காக நாம் மீண்டும் மீண்டும் கீழே தள்ளிவிடப்படுகிறோமா? நாம் இயேசுவின் இறையாட்சிக் கனவு கொண்டவர்கள். இயேசுவோடு மீண்டும் மீண்டும் எழுவோம், எழுந்து வீரத்தோடு நடப்போம்!

**முதல்வர்** : எங்கள் பேரில்.....

**அனைவரும்** : எங்கள் பேரில்.....

**முதல்வர்** : மரித்த விசுவாசிகளின்......

## பத்தாம் நிலை
## ஆடையின் தியாகம்

**முதல்வர்** : திவ்விய இயேசுவே!......

**அனைவரும்** அதெனென்றால்......

திருட்டுச் செயலுக்காக, இரு இளையோரை, சந்தேகத்தின் பெயரில் சிறைப்பிடித்தனர் காவலர்கள். ஒருவன் அரசியல்வாதியின் மகன், சிறிது செல்வாக்கு உடையவன். மற்றவன் சாதாரண நடுத்தர குடும்பத்திலிருந்து வருபவன். அரசியல்வாதி தனது பணம் மற்றும் அதிகாரப் பலத்தால் தன் மகனை உடனே வீட்டிற்கு கூட்டிச் செல்கிறான்.

தவறு செய்திருந்தாலும், அதனால் எந்த ஒரு பாதிப்பும் இல்லாமல், சுலபமாக வெளியே வந்துவிடுகிறான். அதைச் சாதனைபோல் கெண்டாடுகிறான். ஆனால் மற்றவனுக்குப் பரிந்து பேச யாரும் இல்லாததால், அவனைக் குற்றவாளியாக சித்தரிக்கின்றார்கள். குற்றம் புரியவில்லை என்றாலும், குற்றம் சுமத்தப்படுகிறான். பலமுறை முறையிட்டாலும், அவனது குரலைச் செவிகொடுத்து கேட்க யாரும் இல்லாதது அவனை வேதனைப்படுத்தியது. அதோடு அவனது ஆடைகளைக் களைந்து, உள்ளாடையோடு அவனைச் சித்திரவதை செய்தது அவனை அடியோடு சாய்த்தது. குற்றம் புரிந்தவன் வெளியில் ஆடம்பரமாய், ஆனந்தமாய் சுற்றித் திரிய, குற்றமில்லாதவன், அரைகுறை ஆடையோடு, அரை மனிதனாக தரையோடு சாய்ந்தான்.

’ “கொடுப்பதன் இன்பம் பெறுவதில் இல்லை” என்ற பாடல் வரி இங்கே பொருத்தம். தனது சாயலை மனிதனோடு பகிர்ந்த இறைவன், தனது உடனிருப்பையும் இயேசுவின் வாயிலாகப் பகிர்ந்தார். தனது இறையாட்சியை அவர் வழியாகப பறைசாற்றினார். இயேசுவும் தந்தையின் அன்பை அபரிமிதமாகக் கொடுத்தார். தனது சிந்தனை, சொல், செயல் அனைத்தையுமே, மனிதம் மாண்பு பெறப் பகிர்ந்தளித்தார். செவிக்கு உணவு கொடுத்த இயேசு, உண்ண உணவையும் பகிர்ந்து கொடுத்தார். இப்பொழுது தனது ஆடையையும் தன்னை வஞ்சித்தவர்களுக்காக விட்டுக்கொடுக்கின்றார். “ஆடையில்லா மனிதன் அரை மனிதன்” என்று சொல்வார்கள், தனது மனிதத்தையும் அவர்களுக்கு கொடையாகக் கொடுக்கிறார். தனது உயிரையும் தியாகம் செய்யத் தயங்கமாட்டார் என்பதை எடுத்துச் சொல்கிறது இந்த ஆடையின் தியாகம். இயேசுவின் தியாகப் பகிர்வு அரை மனிதனாக அல்ல, மாறாக முழு மனிதமாக!

உண்மைக்காக, இறையாட்சிக்காக, நாம் நிர்வாணமாக்கப்படுகிறோமா? நாம் இயேசுவோடு இணைந்து முழு மனிதர்களாகிறோம். உண்மைக்காக, நம்மையே முழுமையாக பகிர்ந்தளிக்க, துணிந்து நடப்போம்!

**முதல்வர்** : எங்கள் பேரில்.....

**அனைவரும்** : எங்கள் பேரில்.....

**முதல்வர்** : மரித்த விசுவாசிகளின்......

## பதினொன்றாம் நிலை
## ஆணியின் ஆழம்!

**முதல்வர்** : திவ்விய இயேசுவே!......

**அனைவரும்** : அதெனென்றால்......

அரசியல் நுண்ணறிவுள்ள இளைஞன் அவன். அரசியல்வாதிகளின் அராஜகத்தை அடக்கும் வண்ணம், அவர்கள் செய்யும் அநியாயங்களையும், அட்டூழியங்களையும், மக்கள் கவனத்திற்கு எடுத்துச் சென்றான். மக்கள் மத்தியில் அரசியல் பேசி, விழிப்புணர்வு ஏற்படுத்தினான். தொலைநோக்குப் பார்வையோடு, மக்களை சிந்திக்கச் செய்தான். ஒட்டுமொத்த வளர்ச்சிப் பாதையை மையப்படுத்தினான், அதையே அவனது இலக்காக்கினான். நமது ஊர், நமது நாடு, நமது சமூகம் என்ற பரந்துபட்ட எண்ணங்களை மக்கள் மனதில் விதைத்தான். புதியதோர் சமுதாயத்தைச் செதுக்கத் தயாரானான். தேர்தல் நெருங்கியது, ஊழல்வாதிகளை எதிர்த்து தானும் போட்டியிட்டான். மக்கள் அவன் பக்கம் நிற்கிறார்கள் என்ற நம்பிக்கை அவனை உந்தித் தள்ளியது. ஆனால், பிரச்சாரத்தின்போது, மற்ற அரசியல்வாதிகளால் பணம் பட்டுவாடா செய்யப்பட்டது. பணம் அனைவரின் எண்ணங்களையும் ஒரு நொடியில் மாற்றியது; பணத்திற்காக தங்களது ஓட்டுக்களை விற்றனர். அதற்காக தங்களது விழுமியங்களை நீர்த்துப்போகச் செய்தனர். விழுமிய அரசியல் பேசிய இளைஞனை, பணம் வீழ்த்தியது. அவன் பணம் என்ற மிகப்பெரிய ஆணியால் அறையப்பட்டான்.

இயேசுவின் தந்தை யோசேப்பு தச்சு வேலை செய்தவர். தனது முப்பது வயதுவரை தாய் தந்தையோடு இருந்த இயேசு, கண்டிப்பாக தந்தையின் வேலையைக் கற்றுத் தேர்ந்திருப்பார். தனது வேலையின்போது, ஆணியின் பங்களிப்பைப் பற்றி அறிந்திருப்பார். ஆணியின் ஆழத்தைப் பொறுத்தே ஒரு பொருளின் ஆற்றலையும் கண்டறிய முடியும். ஆனால், இங்கு பொருட்களுக்குப் பதிலாக இயேசுவின் கைகளையும், கால்களையும் ஆழம் பார்க்கின்றன அந்த ஆணிகள். ஆணிகள் உடலின் சதையைக் கிழிக்க, எலும்புகளை முறிக்க, வலியினால் அழுகை வானைப் பிளக்க, இரத்தம் பீறிட்டுப் பாய்கிறது. வழி நெடுக சிதறிக்கிடந்த இரத்தம் உறைந்ததால் அவர் உடம்பில் இரத்தம் கண்டிப்பாக இருக்காது என்று நினைத்தவர்களுக்கு, ஆணியின்

ஆழம், இரத்தமாய்க் காட்சியளித்தது. சித்திரவதையின் உச்சத்தைப் படம் பிடித்துக் காட்டியது இந்த ஆணியின் ஆழம்.

நாமும் பணத்தின், பாரபட்சத்தின், பாரச் சுமைகளால் தோற்கடிக்கப்பட்டவர்களா? நாம் இயேசுவின் கைகளிலும், கால்களிலும் அறையப்பட்ட ஆணியின் ஆழத்தை தெரிந்தவர்கள். அவரின் ஆற்றலைப் பெற்று வலிகளோடு, ஆனால் அவரின் ஆற்றலோடு பயணத்தைத் தொடர்வோம்!

**முதல்வர்** : எங்கள் பேரில்.....

**அனைவரும்** : எங்கள் பேரில்.....

**முதல்வர்** : மரித்த விசுவாசிகளின்......

## பன்னிரெண்டாம் நிலை
## சிலுவையின் வெற்றி!

**முதல்வர்** : திவ்விய இயேசுவே!......

**அனைவரும்** : அதெனென்றால்......

செல்வந்தர்களின் மதிப்பு, நல்ல மனிதர்களுக்கு இல்லாதுதான் இன்றைய வருத்தமான எதார்த்தம். பணம் இருந்தால், அவன் குணத்தை யாரும் பார்ப்பதில்லை; பதவியில் இருப்பவர்களின் சொல்லும், செயலும் தீவிரமாக நடைமுறையாக்கப்படுகிறது, அது சரியா, தவறா என்றுகூடப் பார்க்கப்படுவதில்லை. அதிகாரத்தில் இருப்பவர்களின் கட்டளை வேக வேகமாக செயலாக்கம் செய்யப்படுகிறது, அது தேவையா இல்லையா என்று தெரியாமலேயே. ஆட்சியாளர்கள் எங்கு சென்றாலும் அவர்களைத் தலைவர்களாகப் பார்க்கும் அவலம், அவர்கள் அறம் கொண்டவர்களா என்று பார்க்காமலேயே. ஆனால் நல்ல மனிதர்கள், நற்செயல் புரிபவர்கள், அறத்தோடு வாழ்பவர்கள் இங்கே புறந்தள்ளப்படுகிறார்கள்; தரமற்ற கேள்விகளால் ஓரங்கட்டப்படுகிறார்கள். அவர்களின் உடனிருப்பு, பல வேளைகளில் எச்சரிக்கையாகவும், அச்சுறுத்தலாகவும், சில வேளைகளில் அவமானமாகவும் பார்க்கப்படுகிறது. ஆக, அறமற்றவர்கள் கொண்டாடப்படுவதும், அறம் உள்ளவர்கள் தினம் தினம் சிலுவையில் அறைப்பட்டு, அவமானப்படுத்தப்பட்டு, அவர்களின் உயிர் சூறையாடப்படுவதும் வாடிக்கையாகிவிட்டது. ஆனால், அறத்தின் நிலைத்தன்மை, சிலுவையின் வெற்றியே.

எருசலேம் நுழைவாயிலில், சிவப்புக் கம்பளத்தால் வரவேற்பு பெற்றவர்; குருத்து ஓலைகளைக் கைகளில் ஏந்தி “யூதர்களின் அரசரே வாழி” என்று மக்கள் புடை சூழ அரசப் புகழ் பெற்றவர்; கழுதை மேல் ஏற்றி, வழி எங்கிலும் துணிகளால் பாதைகள் அலங்கரிக்கப்பட்டு, ஒய்யாரமாய் கூட்டிச் செல்லப்பட்டவர். புகழின் உச்சிக்கு கொண்டு செல்லப்பட்டவர், இப்பொழுது, சிலுவை மரத்திலே, அவமானத்தின் சின்னமாக தொங்கிக்கொண்டு இருக்கின்றார். நல்லதையே நினைத்தவர், நல்லதையே பேசியவர், நல்லதையே செய்தவர், சிலுவையில் அறையப்பட்டுக் கொல்லப்படுகிறார். “பகைவனுக்கும் அன்பு” என்னும் உயர்ந்த சிந்தனையைப் போதனையோடு நிறுத்திவிடாமல், தனக்கு எதிராக செயல்பட்ட அனைவரையும் மன்னித்து, அந்த போதனையை வாழ்வாக்கிய தலைவனுக்குப் பரிசு, சிலுவைச் சாவு. இது இறப்பு அல்ல, மாறாக சிலுவைக்கு இயேசு கொடுக்கும் அடையாளம். அவமானத்தின் அடையாளம் அன்று, மாறாக வெற்றியின் அடையாளம். அவரின் நிலையான நன்மைத்தனத்தின் அடையாளம். துன்பங்களுக்கு மத்தியிலும், உண்மைக்கு இறுதிவரை சாட்சியாக இருந்த வெற்றியின் அடையாளம், சிலுவை வெற்றியின் அடையாளம்!

நமது நன்மைத்தனம் வஞ்சிக்கப்படுகிறதா? நமது உண்மைத்தனம் சித்திரவதைக்கு உள்ளாக்கப்படுகிறதா? நாம் இயேசுவின் சிலுவை வெற்றியை பிரதிபலிக்கின்றோமா? துன்பங்கள் மத்தியிலும் உண்மைக்கு சாட்சி பகர்வோம்!

**முதல்வர்** : எங்கள் பேரில்.....

**அனைவரும்** : எங்கள் பேரில்.....

**முதல்வர்** : மரித்த விசுவாசிகளின்......

## பதின்மூன்றாம் நிலை
## அன்னையின் மடியில்!

**முதல்வர்** : திவ்விய இயேசுவே!......

**அனைவரும்** : அதெனென்றால்......

அப்பாவின் கனமான வார்த்தைகள், கோபமான முகபாவனை, இறுக்கமான அணுகுமுறை, எதிர்மறையான எண்ணங்கள்,

அனைத்துமே அவனை இறுக்க, ஒரு நாள் அவன் வீட்டை விட்டு வெளியே சென்றுவிட்டான். எங்கு செல்வது என்று தெரியாமல், கால்போன போக்கிலே போய்க்கொண்டிருந்தான். வழியெங்கிலும் அப்பாவின் செயல்களை ஒவ்வொன்றாக நினைக்க, அவை அனைத்தும் அவன் மனதை அழுத்த, கோபத்தின் உச்சத்திற்கே சென்றுவிட்டான். திடீரென்று அவனுக்கு அம்மாவின் ஞாபகம் வந்தது. காலையிலிருந்து மாலை வரை வீட்டிற்குச் செல்லவில்லை, உணவு உண்ணவில்லை, அம்மா எனக்காக காத்துக் கொண்டிருப்பாள், மகனைக் காணவில்லை என்று அழுது கொண்டிருப்பாள் என்பதை உணர்ந்தான். அம்மாவின் அழுகை முகம் அவனை வாட்டியது, கட்டி இழுத்தது. எழுந்தான், விரைந்தான், வீட்டிற்குச் சென்றான். வீட்டிலே அப்பா சோகமாக, நாற்காலியில் அமர்ந்திருக்க, அம்மா ஏங்கி ஏங்கி கண்ணீர் வற்றிய கண்களோடு அழுதுகொண்டிருந்தாள். அவள் அழுகையில் அன்பு கொட்டியிருந்ததை உணர்ந்தான், ஓடிச்சென்று அவள் மடியில் படுத்துக் கொண்டான். அன்னையின் மடி, அவனை அன்போடு அரவணைத்தது.

கடவுளை மகனாக ஈன்றெடுத்த தாய், அதே மகனின் உயிரற்ற உடலைத் தன் மடியோடு அரவணைக்கின்றாள். மகனைப்பற்றிய பல கனவுகளோடு தொடங்கிய தாயின் வாழ்க்கை சோகத்தால் சூறையாடப்பட்டுவிட்டது. அவளின் மகன் நாடோடி வாழ்க்கை வாழ்ந்தார்; கடற்கரை ஓரங்களைக் கடந்தார்; மலைகளிலும், குன்றுகளிலும், செபம் செய்வதற்காகச் சென்றார்; படகில் பயணம் செய்து கடலையும், காற்றையும் அடக்கினார்; தொழுகைக் கூடங்களுக்குச் சென்று, இறையாட்சியை பறைசாற்றினார்; கோயில்கள் பல சென்று போதனை செய்தார், குறிப்பாக எருசலேம் கோயிலை நோக்கியே அவரது ஒட்டுமொத்தப் பயணமும் இருந்தது; இவ்வாறு பல இடங்களைச் சுற்றி வந்தவர், இறுதியில், தாயின் மடியில் தஞ்சம் புகுகின்றார். தாயின் மடிதான் நிலையான, நிறைவான அன்பைக் கொடுக்கிறது.

நாம் நமது அன்புப் பிள்ளைகளை இழந்தவர்களா? நாம் மரியாளின் வியாகுலத்தில் பங்கு பெற்றவர்கள். மரியாளின் அன்பு மடியில் இளைப்பாறி, நிலைவாழ்வை முன்சுவைத்து நம் அன்னை மரியாளின் வியாகுலங்களோடு பயணிப்போம்!

**முதல்வர்** : எங்கள் பேரில்.....

**அனைவரும்** : எங்கள் பேரில்.....

**முதல்வர்** : மரித்த விசுவாசிகளின்......

# பதினான்காம் நிலை
# கல்லறைக் கனவு

**முதல்வர்** : திவ்விய இயேசுவே!......

**அனைவரும்** : அதெனென்றால்......

நேர்மையான அதிகாரி அவர். ‘கையூட்டு’ அவர் அகராதியில் இல்லாத சம்பவம். அருகிலிருந்த கிராமங்களின் வறுமையை நன்கு அறிந்தவர், அவற்றின் வளர்ச்சிக்குப் பெருந்துணையாக தன் செயல்பாடுகளை முடுக்கி விட்டார். விளைநிலங்களைப் பாதுகாக்கும் வகையில் பல நுணுக்கமான செயல்களைச் செய்து, சரியான ஆவணங்களைத் தயாரித்து, அங்கு வசித்து வந்த கிராமவாசிகளையும் பாதுகாத்தார். அதே வேளையில், விளைநிலங்களை அபகரிக்க நினைத்த சிலர், அதிகாரியைப் பணத்தால் வாங்கிவிட நினைத்தனர். ஆனால் அது நடக்கவில்லை. கிராமத்தைப் பாதுகாப்பதே தனது முதல் கடமை என்று ஆணித்தரமாக சொல்லிவிட்டார் அதிகாரி. கோபமுற்றவர்கள், அதிகாரியைத் தீர்த்துக் கட்ட துணிந்தனர். திட்டங்கள் தீட்டினர். தகுந்த தருணம் பார்த்து அவரைக் கொன்றனர். பழியேதும் அவர்கள் பக்கம் வராதபடி பார்த்துக்கொண்டனர் நேர்மையான அதிகாரி கயவர்களால் புதைக்கப்பட்டாலும், அவரின் நேர்மை அந்த கிராம மக்களிடையே விதைக்கப்பட்டது. பல இளையோர் அவரைப்போல் வாழவேண்டும் என்று கனவு கண்டனர். புதைக்கப்பட்டவர், தனது நேர்மைக் கனவுகளால் உயிர் பெற்றார்.

இறந்த சிறுமியைத் தூக்கிவிட்டவர், கல்லறையில் அடக்கம் செய்யப்பட்ட இலாசரை உயிர்ப்பித்தவர், நூற்றுவர் தலைவனின் பணியாளனை இறப்பிலிருந்து காப்பாற்றியவர், இப்பொழுது கல்லறையில் புதைக்கப்படுகிறார். கடவுளைக் கல்லறையில் புதைக்கின்றனர். புதைத்தது கடவுளையல்ல, மனிதத்தை. மனித மாண்பு புதைக்கப்பட்டது. உண்மை, நேர்மை, நன்மை, அன்பு, தியாகம், புண்ணியம்; நட்பு, பண்பு, பணிவு என்று எல்லாவித மனித மாண்புகளும் இங்கே புதைக்கப்படுகின்றன. இயேசுவின் இறையரசுக் கனவும் சேர்ந்து இங்கே புதைக்கப்படுகிறது. ஆனால் இவை அனைத்தும் புதைக்குழியில் அழிந்துபோக வேண்டிய நினைவுகள் அல்ல, மாறாக வீறுகொண்டு

உயிர்த்தெழும் விழுமியக் கனவுகள். இவை கல்லறைக் கனவுகள். கல்லறைக் கனவுகள் சற்று இளைப்பாறுகின்றன. மீண்டும் எழும், ஆற்றலோடும், ஆசீரோடும்!

கடவுள் இல்லா உலகு, அறம் இல்லா அறிவுலகு. காசுக்காக கடவுளைப் புதைத்தோம். ஆனால், உயிர்த்தெழும் நேரம் அருகில் உண்டு, என்ற நம்பிக்கையோடு அமைதியில் கலைந்து செல்வோம்!

**முதல்வர்** : எங்கள் பேரில்.....

**அனைவரும்** : எங்கள் பேரில்.....

**முதல்வர்** : மரித்த விசுவாசிகளின்......



# சிலுவைப்பாதை – 4

## இயேசப்பாவின் சிலுவைப் பயணம்



அருட்பணி. ஜோ எடல் வினோத்

# இயேசப்பாவின் சிலுவைப் பயணம்

**முன்னுரை**

**அப்பா:** சீக்கிரம் கிளம்புடா. சிலுவைப்பாதைக்கு போகணும்

**மகன்:** சிலுவைப்பாதையா? அப்பிடின்னா என்னாப்பா?

**அப்பா:** டிசம்பர் மாதம் கிறிஸ்துமஸ் கொண்டாடினோமே ஞாபகம் இருக்கா? அப்ப இயேசப்பா மனிதனாகப் பிறந்தார். அவரு நம்மை மீட்க நமக்காக பாடுபட்டு சிலுவையில் உயிர் துறந்தார். அவரு சிலுவையை தூக்கிட்டு பாடுபட்டு நடந்த பாதையை நாம் தியானிக்க உதவுறது தான் இந்த சிலுவைப்பாதை. இப்ப தவக்காலம் ஆரம்பித்து விட்டது. அதனால் இயேசப்பா நமக்காக எப்படியெல்லாம் துன்பத்தை அனுபவித்தார் என்பதை இந்த சிலுவைப்பாதை நமக்கு உணர்த்தும். 2000 வருடங்களுக்கு முன் இயேசப்பா எருசலேம் நகரிலே சிலுவையை சுமந்து போனதை நாம நினைத்து பார்க்கப் போறோம். கோவில் வந்துருச்சு. கண்ணை மூடி இயேசப்பாக்கிட்ட வேண்டிக்க.

**செபம்:** என் அன்பு இயேசப்பா! நீங்க எனக்காக எவ்வளவு துன்பப்பட்டீங்க. நீங்க என்ன எவ்வளவு அன்பு செய்றீங்க! நான் இந்தச் சிலுவைப்பாதையில் உருக்கமா பங்கெடுத்து உங்க பாடுகள நினைச்சு பாக்கப்போறேன். நான் எப்பொழுதும் உங்க அன்ப புரிந்து கொண்டு உங்க பிள்ளையா இருக்க எனக்கு உதவுங்க.

## முதல் நிலை
## இயேசப்பாவை சிலுவையில் அறைய உத்தரவிடுகிறார்கள்

**முதல்வர்** : திவ்விய இயேசுவே!......

**அனைவரும்** : அதெனென்றால்......

**மகன்:** ஏன்பா இயேசப்பாவை சிலுவையில் அறைய உத்தரவிடுகிறார்கள்? யாருப்பா உத்தரவிட்டது?

**அப்பா:** அதாவது, இயேசப்பா இஸ்ரேல் நாட்டிலே பிறந்து வளர்ந்தது உனக்கு தெரியுமில்லையா? அவரு அங்க வீதிவீதியா நடந்து போய் நற்செய்தியை அறிவித்தார். எல்லா மக்களுக்கும் நல்லது செய்தார். புதுமைகள் செய்தார். மூடநம்பிக்கையை எதிர்த்து கேள்வி கேட்டார். குறிப்பா அங்க இருந்த மதகுருமார்களையும் அவர்கள் மக்களை இழிவா நடத்தியதையும் கண்டித்தார். இதனால் அவங்க இவர் மேல் கோப்பட்டு அங்க ஆளுநராக இருந்த பிலாத்துக் கிட்ட இயேசப்பாவ சிலுவையில் அறையச் சொன்னாங்க. அதானால பிலாத்துத்தான் இயேசப்பாவை சிலுவையில் அறைய உத்தரவிட்டான்.

**செபம்**

என் அன்பு இயேசப்பா! நீங்க நல்லது மட்டும்தான் செய்தீங்க. இந்த உலகம் உங்கள அநியாம பழி சுமத்திவிட்டது. எனக்கு உங்கள போல நல்லது மட்டும் செய்ய ஆசை. அடுத்தவங்களுக்காக வாழ்ந்த உங்களப் போல எனக்கும் வாழணும். எனக்கு உதவி செய்யுங்க இயேசப்பா.

**முதல்வர்** : எங்கள் பேரில்.....

**அனைவரும்** : எங்கள் பேரில்.....

**முதல்வர்** : மரித்த விசுவாசிகளின்......

## இரண்டாம் நிலை
## இயேசப்பா மீது சிலுவையை சுமத்துறாங்க

**முதல்வர்** : திவ்விய இயேசுவே!......
**அனைவரும்** : அதெனென்றால்......

**மகன்:** சிலுவைன்னா என்னாப்பா? அதை ஏன் இயேசப்பா மீது வைக்கிறாங்க?

**அப்பா:** அந்த காலத்துல உரோமை அரசாங்கம்தான் இஸ்ரேல் மக்கள ஆட்சி செய்தாங்க. உரோமை அரசர் சீசர் தன்னுடைய பிரதிநிதியாக ஒவ்வொரு இடத்துக்கும் ஒரு ஆளுநர் நியமிச்சிருந்தார். அப்படி இஸ்ரேலுடைய ஆளுநர்தான் பிலாத்து. அதேபோல உரோமை அரசாங்க சட்டங்கள் தான் அவர்கள் ஆட்சி செய்த இடங்களிலும் பின்பற்றப்பட்டது. உரோமை அரசாங்கத்த எதிர்ப்பவர்களுக்கு வழங்கப்படும் கொடூரமான தண்டனை தான் சிலுவை மரணம். அந்த தண்டனை வழங்கப்பட்ட நபர் தன்னுடைய சிலுயை சுமந்து கொண்டு ஊருக்கு வெளியே செல்ல வேண்டும். அப்படிதான் இயேசப்பா மீதும் சிலுயை சுமத்தினாங்க. இயேசப்பா எந்த தப்பும் செய்யல. ஆனால் அந்தச் சிலுவையை நமக்காக சுமந்தார்.

**செபம்**

என் அன்பு இயேசப்பா! திருடர்களுக்கும் துரோகிகளுக்கும் கொடுக்கப்பட்ட கடுமையான தண்டனையை எந்த தப்புமே செய்யாத உங்களுக்கு கொடுத்து உங்கள சிலுவையை சுமக்க வைச்சுட்டாங்க. ஆனாலும் எனக்காக நீங்க அதை மனமுவந்து ஏத்துக்கிட்டீங்க. உங்க நல்ல மனசப்போல என் மனசும் ஆகணும்.

**முதல்வர்** : எங்கள் பேரில்.....
**அனைவரும்** : எங்கள் பேரில்.....
**முதல்வர்** : மரித்த விசுவாசிகளின்......

## மூன்றாம் நிலை
## இயேசப்பா முதல்முறை கீழே விழுகிறார்

**முதல்வர்** : திவ்விய இயேசுவே!......

**அனைவரும்** : அதெனென்றால்......

**மகன்:** அப்பா! இயேசப்பா கீழவிழுந்துட்டார். எப்படிப்பா?

**அப்பா:** இயேசப்பா ரொம்ப பாரமான சிலுவையை சுமக்கிறாரு. அதோட பாரம் தாங்காம கீழ விழுந்துட்டாருப்பா. அவரை ஏற்கெனவே கசையடிக் கொடுத்து முள்முடி வைச்சு ரொம்ப கொடுமைப்படுத்திட்டாங்க. அது மட்டுமில்லாம இந்த உரோமை படைவீரர்களும் அவர் ரொம்ப சுமையோடு போறப்ப, அவரை துன்புறுத்திக்கிட்டே இருக்காங்க. சுத்தியிருந்த மக்களும் அவரை ஏளனமாப் பேசி அவமானப்படுத்துறாங்க. அவர் நடந்து போன பாதையும் கரடுமுரடானப் பாதை. அவரால தாங்க முடியலப்பா. அதான் கீழ விழுந்துட்டாரு. ஆனாலும் மீண்டும் எழுந்து தொடர்ந்து சிலுவையை சுமந்து நடக்கிறாரு. எல்லாம் நம்ம மேல வைச்ச அன்பாலதான்.

**செபம்**

என் அன்பு இயேசப்பா! எனக்காக எவ்வளவு துயரத்தையும் துன்பத்தையும் நீங்க அனுபவிச்சிருக்கீங்க! என் மேல எவ்வளவு அன்பு உங்களுக்கு! அதை நான் உணரணும் இயேசப்பா! நான் என் வாழ்க்கையில் விழாமல் இருக்க நீங்க சிலுவையை சுமந்து விழுந்தீங்க! உங்களுக்காக நான் வாழ எனக்கு உதவி செய்யுங்க இயேசப்பா!

**முதல்வர்** : எங்கள் பேரில்.....

**அனைவரும்** : எங்கள் பேரில்.....

**முதல்வர்** : மரித்த விசுவாசிகளின்......

## நான்காம் நிலை
## இயேசப்பா தன்னோட அம்மா மாதாவை சந்திக்கிறார்

**முதல்வர்** : திவ்விய இயேசுவே!......

**அனைவரும்** : அதெனென்றால்......

**மகன்:** ஆமாப்பா! நானும் கேட்கணும்னு நினைச்சேன். மாதா எப்படிப்பா இதெல்லாம் பார்த்தாங்க?

**அப்பா:** உனக்கு ஞாபகம் இருக்கா? கொஞ்ச நாளைக்கு முன்னாடி இயேசப்பாவை கோவிலில் காணிக்கையாக கையளிக்கப்பட்ட திருவிழாவை கொண்டாடினோம். அப்ப, எருசலேம் ஆலயத்திலே ஒரு தாத்தா வந்து பேசுனாரே? அவரு பேரு சிமியோன். அவரு இயேசப்பாவை பார்த்ததும், மாதாவோடு ஒரு வார்த்தை சொன்னார், உனக்கு ஞாபகமிருக்கா? உன் உள்ளத்தை ஒரு வாள் ஊடுருவும். இயேசப்பா குழந்தையாக இருக்கறப்பவே அவரைப்பற்றி மாதாவுக்கு நல்லா தெரியும். இயேசப்பா உலக மக்களோட மீட்புக்காக பலியாக்கப்படுவார் என்று. ஆனாலும் தன் கண்ணெதிரே தன்னுடைய மகன் இவ்வாறு துன்பப்படும்பொழுது ஒரு அம்மாவின் மனது எப்படி துன்பப்படும்? நீ கீழ விழுந்தா அம்மா உடனே வந்து தூக்கிவிடுவாங்களே, அதுபோலதான் மாதா மனசும். நொந்துபோயிருப்பாங்க. இயேசப்பா தன்னுடைய பாடுகளின் பாதையில் செல்லும்பொழுது, ஒரே ஆறுதலாக தன்னுடைய அம்மாவைப் பார்க்கிறார். ஆனால் அவங்க மனசு வேதனை சொல்ல முடியாத அளவுக்கு இருந்தது.

**செபம்**

என் அன்பு இயேசப்பா! எந்த அம்மாவும் தன் மகன் துன்பப்படுவத தாங்கீக்க மாட்டாங்க. ஆனா, எனக்காக மாதா நீங்க பட்ட துன்பத்தையெல்லாம் கண்ணீரோடு ஏற்றுக்கொண்டாங்க. இந்த அன்புக்கு நான் என்ன திருப்பிக்கொடுக்க முடியும்? நான் என் அம்மா மனசு வேதனைப்படாம நடந்துக்க எனக்கு உதவி செய்யுங்க இயேசப்பா!

**முதல்வர்** : எங்கள் பேரில்.....

**அனைவரும்** : எங்கள் பேரில்.....

**முதல்வர்** : மரித்த விசுவாசிகளின்......

## ஐந்தாம் நிலை
## இயேசப்பா சிலுவையை சுமப்பதற்கு சீமோன் உதவுகிறார்

**முதல்வர்** : திவ்விய இயேசுவே!......
**அனைவரும்** : அதெனென்றால்......

**மகன்:** சீமோன் யாருப்பா? அவரு எங்கிருந்து வந்தாரு?

**அப்பா:** இயேசப்பா ஏற்கெனவே ரொம்ப வேதனையோட இருக்காருப்பா. அவரு மேலும் சிலுவையை சுமக்க அவரு உடல்நிலை வலுவில்லாம இருந்துச்சு. இதைப்பார்த்த அந்த உரோமை படைவீரர்கள் கூட்டத்தில், வேடிக்கைப் பார்த்துகொண்டிருந்த சீமோன் அப்படிங்கிற நபர்கிட்ட உதவி செய்யச் சொல்லுறாங்க. அவருக்கு இதுல விருப்பமில்ல. ஊரே கூடி திட்டுகின்றபொழுது யாருக்கு உதவி செய்ய மனசு வரும்?; உரோமை படைவீரர்கள் அவரைக் கட்டாயப்படுத்தி உதவி செய்ய வைக்கிறாங்க. ஆனால், இயேசப்பா பக்கத்தில் வந்ததும், இயேசப்பா சீமோனைப் பார்த்தும், இயேசப்பா பற்றி சீமோனுக்கு புரிந்து விட்டது. அநியாயமாக தண்டிக்கப்பட்ட இயேசப்பாவுக்கு சீமோன் மனமுவந்து உதவி செய்கிறார். சில நேரங்களில், அடுத்தவங்களுக்கு உதவி செய்ய நமக்கு துன்பமாத்தான் இருக்கும். மனசு வராது. ஆனாலும் நாம் செய்யணும். நான் ஒரு உதவின்னு கேட்டா செய்வீல்ல? நாம வீட்ல ஒருவருக்கு ஒருவர் உதவி செய்தால் தான் வெளியிலும் உதவி செய்ய முடியும். சீமோனைப் பார்த்து நாமும் கற்றுக்கொள்ள வேண்டும்.

**செபம்**

என் அன்பு இயேசப்பா! உங்களுக்கே உதவி செய்ய அருள் பெற்ற சீமோனின் மனது எனக்கும் வரணும் இயேசப்பா! அடுத்தவர்கள் துன்பப்படும் பொழுது வெறுமனே கடந்து செல்லாமல் உதவி செய்யும் மனசு தாங்கப்பா! எனக்கு மற்றவர்கள் உதவுவது போல நானும் எல்லாருக்கும் உதவி செய்யும் பொழுது உங்களுக்கே உதவுகிறேன் என்று எனக்கு புரிய வைங்க இயேசப்பா!

**முதல்வர்** : எங்கள் பேரில்.....
**அனைவரும்** : எங்கள் பேரில்.....
**முதல்வர்** : மரித்த விசுவாசிகளின்......

## ஆறாம் நிலை
## இயேசப்பா முகத்தை வெரோணிக்கா துடைக்கின்றார்

**முதல்வர்** : திவ்விய இயேசுவே!......

**அனைவரும்** : அதெனென்றால்......

**மகன்:** ஏன்பா இயேசப்பா முகத்தை துடைக்கிறாங்க? யாரு வெரோணிக்கா?

**அப்பா:** இயேசப்பா முகமெல்லாம் இரத்தம்பா! ஏற்கெனவே சொன்னேன்ல? அவருக்கு கசையடிக் கொடுத்தாங்க. முள்முடி அவரு தலையில வைத்திருந்தாங்க. அதெல்லாம் அவருக்கு இரத்தம் வர வைத்திருந்தது. அவருடைய முகமெல்லாம் வேர்த்திருந்தது. அது மட்டுமில்லாம அவரு நடக்கிற இடமெல்லாம் புழுதி பறந்து அவரு முகத்துல படிஞ்சிருக்கு. அவருடைய முகம் அவ்வளவு கொடூரமாய் மாறிப்போச்சு. இந்த நேரத்துல தான் வெரோணிக்கா வருகிறார். அங்க அவ்வளவு கூட்டம். எல்லாருமே இயேசப்பாவ திட்டிக்கிட்டு ஏளனமாக பேசிக்கொண்டிருந்தாங்க. ஆனால், இயேசப்பாவோட நன்மை நிறைந்த முகம் இவ்வளவு கோரமாக இருக்கிறத தாங்க முடியாமல் அந்த கூட்டத்தையெல்லாம் பொருட்படுத்தாமல் தைரியமாக வந்து உரோமைப் படைவீரர்கள் நடுவில் நின்று இயேசப்பாவோட முகத்தை துடைக்கிறாங்க. ஒரு வகையில அது இயேசப்பாவுக்கு ஒரு சிறிய ஆறுதலாக இருந்தது. வெரோணிக்காவுக்கு பரிசாக இயேசப்பா தன்னுடைய முகத்தை அந்த துணியில் பதித்தாகவும் அந்த துணி இன்றளவும் பாதுகாக்கப்படுவதாகவும் ஒரு செய்தியுண்டு. ஆனால் அந்தத் துணிச்சலைத்தான் வெரோணிக்காவிடம் நாம் கற்றுக்கொள்ள வேண்டும். சில நேரத்துல நான் உன்ன அடிக்கிறப்ப துணிச்சலா வந்து தடுக்கிறாளே உன் அக்கா, அப்பொழுது எனக்கு வெரோணிக்கா தான் ஞாபகம் வருகிறார். யாருமே உதவிக்கு இல்லாமல் துன்படும் மக்களுக்கு உதவி செய்யும்பொழுது நாம கூட வெரோணிக்கா இயேசப்பாவுக்கு செய்கிற மாதிரி செய்யுறோம்.

**செபம்**

என் அன்பு இயேசப்பா! எந்த வழியிலும் உதவி கிடைக்காத எளிய மக்கள் வாழ்க்கையில் உன் கரமாய் இருந்து உதவி செய்யும் மனசு தாங்கப்பா! யார் எதிர்த்தாலும் அடுத்தவங்களுக்கு நல்லது செய்யும்

துணிச்சல் தாங்கப்பா! அடுத்திருப்பவர்களின் தேவையை உணர்ந்து செயலாற்றும் திறமை தாங்கப்பா! என்ன நேர்ந்தாலும் நன்மையின் வழியில் உங்களுடன் நடக்கும் மனசு தாங்க இயேசப்பா!

**முதல்வர்** : எங்கள் பேரில்.....
**அனைவரும்** : எங்கள் பேரில்.....
**முதல்வர்** : மரித்த விசுவாசிகளின்......

## ஏழாம் நிலை
## இயேசப்பா இரண்டாம் முறை கீழே விழுகிறார்

**முதல்வர்** : திவ்விய இயேசுவே!......
**அனைவரும்** : அதெனென்றால்......

**மகன்:** அப்பா! இயேசப்பா திரும்பவும் விழுந்துட்டாருப்பா.

**அப்பா:** அவ்வளவு பெரிய சிலுவையை சுமந்து கொண்டு மலை ஏறுவது சாதாரணமில்லப்பா. இன்றைக்கு மாதிரி அன்றைக்கு சாலைகள் கிடையாது. புழுதி நிறைந்த கல்லு மண் சாலைகள்தான். அதுவும் சீராக இருக்காது. குண்டு குழியோட தான் இருக்கும். அப்படிப்பட்ட சாலையில் இயேசு நடந்து சென்றார். இயேசுவை பிலாத்து இருந்த அந்தோணியா கோட்டையிலிருந்து கல்வாரி மலைக்கு சிலுவை சுமக்க வைத்தனர். இது ஏறக்குறைய ஒரு கிலோமீட்டர் தூரம். அந்த சிலுவையின் பாரம் என்னவென்று தெரியுமா? இப்படி கடினமான ஒரு பாதையை இயேசு நமக்காக ஒப்புக்கொண்டார். சிலநேரத்தில் எனக்கு கால் வலிக்கிதுப்பா என்னையை தூக்குங்கன்னு அழுவ. உன்னைத் தூக்கிக்கொண்டு சிறிது தூரம் நடந்தாலே எனக்கு கைகள் வலிக்கும். ஆனால் இயேசப்பா ஏறக்குறைய எண்பது கிலோ பாரத்தை தூக்கிக் கொண்டு நடந்தார். அப்படியிருக்கும் பொழுது அவர் கீழே விழுவது அவரது வலுவின்மையால் தான். நாம இப்ப பாவத்தால கீழே விழாமல் மன்னிப்பு பெற இயேசப்பா அன்னைக்கு இரண்டாம் முறையா கீழே விழுந்தார்.

**செபம்**

என் அன்பு இயேசப்பா! நீங்க விழுந்தாலும் மீண்டும் எழுந்து எங்களுக்காக சிலுவைப்பாதையை தொடர்ந்தீங்க! ஆனால், நீங்க

எனக்காக பட்ட துன்பத்தையெல்லாம் மறந்துவிட்டு நான் மீண்டும் மீண்டும் பாவத்தில் விழுகின்றேன். இருந்தாலும் உங்களுடைய மன்னிப்பின் மூலம் என்னை மீட்கும் உங்களுக்கு என்றும் உண்மையோடு இருக்கும் மனது எனக்கு தாங்க இயேசப்பா!

**முதல்வர்** : எங்கள் பேரில்.....

**அனைவரும்** : எங்கள் பேரில்.....

**முதல்வர்** : மரித்த விசுவாசிகளின்......

## எட்டாம் நிலை
## இயேசப்பா யூதப் பெண்களுக்கு ஆறுதல் கூறுகிறார்

**முதல்வர்** : திவ்விய இயேசுவே!......

**அனைவரும்** : அதெனென்றால்......

**மகன்:** இந்த யூதப் பெண்கள் யாருப்பா? இந்த நேரத்தில் எப்படிப்பா ஆறுதல் கூறினார்?

**அப்பா:** இயேசப்பா பற்றி நற்செய்தியில் எத்தனை தடவை படித்திருக்கிறாய்? இயேசப்பா எப்பவுமே பெண்களை ஆண்களுக்கு நிகராக சமமாக மதித்து நடந்தவர். யூத மக்கள் கலாச்சாரத்திலே பெண்களுக்கும் குழந்தைகளுக்கு முக்கியத்துவம் கிடையாது. சில நேரத்திலே ஆண்கள் பெண்களை ஒரு பொருட்டாவே மதிக்கவில்லை. ஆனால், இயேசப்பா ஆண் பெண் வித்தியாசம் காட்டாமல் அனைவரையும் கடவுளின் பிள்ளைகள் என போதித்தார். தங்களுக்காக பரிந்து பேசிய இயேசப்பாவை இந்த கோலத்தில் காண வேண்டி வந்ததை நினைத்து அந்த பெண்கள் அழுதார்கள். ஆனால் இயேசப்பா இந்த நேரத்திலேயும் அந்தப் பெண்களுக்கு ஆறுதல் கூறினார். நற்செய்தியில் ஒரு தடவை வாசிச்சப்ப கேட்டீயே பட்ட மரம் என்றால் என்ன என்று. இயேசப்பா இவங்களுக்கு ஆறுதல் சொல்றப்பதான் அந்த வார்த்தையை சொன்னார். நன்றாக வெயிலிலே காய்ந்த மரம்தான் பட்ட மரம். பச்சை மரத்தை யாரும் விறகாக பயன்படுத்த மாட்டார்கள். பட்ட மரத்தைதான் பயன்படுத்துவார்கள். இயேசப்பா தன்னை பச்சை மரமாக காட்டி இந்த உவமையை பயன்படுத்தினார். இந்த உலகை மீட்க வந்த மெசியாவாகிய என்னையே இந்த பாடுபடுத்தினார்கள் என்று உரிமையின்றி சமூகத்தில்

வாழ்ந்து வரும் பெண்களையும் எளிய மக்களையும் என்ன பாடுபடுத்துவார்கள் என்ற பொருளில் தான் கூறினார். அதனால் அப்பெண்களை கவனமாக இருக்கச்சொன்னார். இப்ப புரியுதா?

**செபம்**

என் அன்பு இயேசப்பா! இந்த உலகத்திலே எந்த மாற்றமும் இல்லை. இன்றும் அநேக பெண்கள் மற்றும் எளிய மக்களை வலியவர்கள் துன்புறுகிறார்கள். எத்தனையோ குடும்பங்களில் உள்ள அம்மாக்களும் அக்காக்களும் தங்கைகளும் இன்றும் ஒரு காரணமுன்றி துன்புறுத்தலுக்கு உள்ளாகுகிறார்கள். அவங்களுக்கு மன வலிமையும நம்பிக்கையும் நீங்க தான் தரணும் இயேசப்பா! அதே போல எல்லாரையும் சமமா நடத்துற மனசும் எனக்கு தாங்க இயேசப்பா!

**முதல்வர்** : எங்கள் பேரில்.....

**அனைவரும்** : எங்கள் பேரில்.....

**முதல்வர்** : மரித்த விசுவாசிகளின்......

## ஒன்பதாம் நிலை
## இயேசப்பா மூன்றாம் முறையாக கீழே விழுகிறார்

**முதல்வர்** : திவ்விய இயேசுவே!......

**அனைவரும்** : அதெனென்றால்......

**மகன்:** அப்பா! இயேசப்பா திரும்பவும் விழுந்திட்டாருப்பா! எனக்கு அழுகையா வருது.

**அப்பா:** நான்தான் முன்னாடியே சொன்னேன்ல! அவரு போற பாதை சாதாரண பாதையில்லை. கரடுமுரடான பாதை. எண்பது கிலோ பாரமுள்ள சிலுவை வேற. நீ நினைச்சுப் பாறேன். நீ கொண்டுபோற பள்ளிக்கூட பையோட கீழ விழுந்தா எப்படி இருக்கும்? ஆனா இயேசப்பா விழுந்தப்ப அவரு கீழ விழுந்த வலி மட்டுமில்ல. அவரு மேல விழுந்த அந்த சிலுவை அவரு வேதனையை பல மடங்கு அதிகமாக்கியிருக்கும். ஆனா நம்ம பாவ நிலையை விட அவருக்கு அந்த வேதனை பெருசா தெரிஞ்சிருக்காது. நமக்கு பாவ மன்னிப்பு கொண்டு வரத்தான் அவர் இதெல்லாம் சகித்துக்கிட்டாரு. உனக்கு ஞாபகமிருக்கா? நற்செய்தியில காணாமல் போன ஆடு கிடைக்கும் பொழுது விண்ணுலகில் எவ்வளவு

சந்தோஷம் இருக்கும் என்று சொன்னாரே? ஆனால் அதேபோல ஒரு மனிதன் இயேசப்பாவ மறந்து பாவத்துல விழுந்தாலும் அவ்வளவு துக்கமும் இருக்கும். இயேசப்பா சிலுவைப்பாதையில் மூன்று முறை விழுந்து நமக்கு கொண்டு வந்த மீட்பை நாம் மறந்து பாவம் செஞ்சோன்னா அவர மீண்டும் மீண்டும் நாமே தள்ளிவிட்டு அவர் மீது பாரமான சிலுவையை தூக்கிப் போடுறோம். நீ பாவத்திலே விழாம இருந்தா இயேசப்பாவுக்கு அதிக சந்தோஷம் மட்டுமே இருக்கும்.

**செபம்**

என் அன்பு இயேசப்பா! நீங்க ஒவ்வொரு தடவ விழுந்தப்பவும் எங்களுக்காகத்தான் விழுந்தீங்கன்னு எனக்கு புரிய வைங்க! நீங்க எங்கள எந்த அளவுக்கு எங்கள அன்பு செஞ்சீங்கன்னா இந்த வலியையும் வேதனையையும் தாங்கிட்டீங்கன்னு உணர வைங்க! என்னால நீங்க மீண்டும் மீண்டும் விழக்கூடாது. நான் பாவத்தை ஒதுக்கி உங்க நன்மை நிறைந்த அன்பினால் மட்டுமே வாழ கத்துக்கொடுங்க இயேசப்பா!

**முதல்வர்** : எங்கள் பேரில்.....

**அனைவரும்** : எங்கள் பேரில்.....

**முதல்வர்** : மரித்த விசுவாசிகளின்......

## பத்தாம் நிலை
## இயேசப்பாவின் ஆடைகளை களைகிறார்கள்

**முதல்வர்** : திவ்விய இயேசுவே!......

**அனைவரும்** : அதெனென்றால்......

**மகன்:** ஏன்பா இயேசப்பாவோட ஆடைகளை கழட்றாங்க? இது ரொம்ப மோசம் அப்பா.

**அப்பா:** ஒரு தடவ நீ இன்னும் சின்ன புள்ளையா இருந்தப்ப, உன்ன குளிப்பாட்டிவிட வேண்டி உன் ஆடைகளை கழட்ட நான் பட்ட பாடு எனக்குத்தான் தெரியும். உனக்கே அவ்வளவு வெட்கம் எல்லாம் இருந்துச்சு. ஆனா இயேசப்பாவோட நிலைமையை யோசிச்சுப்பாரு. முப்பத்திமூன்று வயது நிரம்பிய ஒரு முழுமனிதனோட ஆடைகளை எல்லா

மக்களும் பார்க்க கழட்டுகிறார்கள். அது ஏதோ நாம சட்டையை கழட்டுற மாதிரி கிடையாது. இயேசப்பா அணிந்திருந்தது ஒரு அங்கி. நம்ம அருட்பணியாளர்கள் எல்லாம் போடுவாங்களே அது போல ஒரு நீளமான அங்கி. அந்த அங்கிய மாதாவே தனது கைகளால் செஞ்சி இயேசப்பாவுக்கு கொடுத்தாங்கன்னு எங்கயோ படிச்ச ஞாபகம். அந்த அங்கிய கழட்டும் பொழுது இயேசப்பா மீதிருந்த இரத்தத்தாலேயும் வியர்வையினாலும் அது உடம்போடு ஒட்டியிருந்தது. அதனால அத கழட்டுறப்ப இயேசப்பாவுக்கு அது இன்னும் வலியும் வேதனையும் கொடுத்தது. இன்னைக்கும் நம்ம சமுதாயத்திலே தன்னுடைய ஏழ்மையினால கிழிஞ்ச ஆடை போட்டுகிட்டு வீட்ட விட்டு வெளிய வர முடியாம தவிக்கிற நிறையபேர் இருக்காங்க. நற்செய்தியில இயேசப்பா சொல்லுவாரே, நான் ஆடையின்றியிருந்தேன் நீங்கள் என்னை உடுத்தினீர்கள் என்று. ஆனா சில நேரத்தில நாமே இயேசப்பாவோட ஆடைகளை கழட்டுகிறோம். எப்பவெல்லாம் அடுத்தவர்களைப் பற்றி தப்பா பேசி அல்லது அடுத்தவர்களை அவமானப்படுத்துகிறோமோ அப்பவெல்லாம் நாம இயேசப்பாவோட ஆடைகளைத்தான் கழட்டுகிறோம்.

**செபம்**

என் அன்பு இயேசப்பா! உங்களுக்கு எவ்வளவு அவமானமா இருந்திருக்கும் அந்த நேரத்திலே? அந்தத் தப்பை நான் செய்யாம இருக்க எனக்கு உதவி செய்யுங்க இயேசப்பா! எப்பொழுதும் அடுத்தவர்களை மதிக்கவும் அன்பு செய்யவும் அவர்களுக்கு என்னாலான உதவிகளை செய்யவும் எனக்கு ஒரு நல்ல மனசு தாங்க இயேசப்பா! எப்பொழுதுமே எனக்கு பக்கத்தில் இருக்கும் மற்ற நபர்களிடம் உங்களைக் காணும் கண்கள் தாங்க இயேசப்பா!

**முதல்வர்** : எங்கள் பேரில்.....

**அனைவரும்** : எங்கள் பேரில்.....

**முதல்வர்** : மரித்த விசுவாசிகளின்......

## பதினொன்றாம் நிலை
## இயேசப்பாவை சிலுவையில் அறைகிறார்கள்

**முதல்வர்** : திவ்விய இயேசுவே!......

**அனைவரும்** : அதெனென்றால்......

**மகன்:** என்னப்பா இவ்வளவு கொடுமைப்படுத்தியும் அவங்க கோபம் அடங்கலயா? இப்ப சிலுவையில் வேற அறையுறாங்கப்பா.

**அப்பா:** பாரமான சிலுவையை தூக்கிட்டுப் போறதினாலே மட்டும் இது சிலுவைப்பாதையில்ல. அந்த சிலுவையை தூக்கிட்டு போனதே அதுல அறையப்படத்தான். உனக்கு ஞாபகமிருக்கா? நாம ஒரு தடவ காட்டுப்பாதை வழியா நடந்து வந்தப்ப நீ ஒரு சின்ன முள்ள மிதிச்சிட்ட. அப்ப எவ்வளவு அழுத? ஆனா இயேசப்பா கையிலயும் காலுலயும் கிட்டத்தட்ட ஏழு இன்ச் நீளமும் ஒரு இன்ச் அகலமும் கொண்ட நான்கு ஆணியை அடித்தார்கள். அந்த நான்கு ஆணியும்தான் இயேசப்பாவை சிலுவையில் தாங்கிப்பிடித்தது. அந்த ஆணி அடிச்சப்ப அது கை கால்களைத் தாண்டி அந்தச் சிலுவை மரத்திலேயும் நன்கு பதிய வேண்டும். அப்ப எத்தனைமுறை அடிச்சிருப்பாங்க. எவ்வளவு வலியும் வேதனையும் அனுபவித்திருப்பார் இயேசப்பா? ஏற்கெனவே அந்த உடம்புல இருந்த இரத்தமெல்லாம் கசையடியாலும் சிலுவை சுமந்து வந்து பட்ட பாடுகளாலும் வெளியேறியிருக்கும். ஆனாலும் ஆணியடிச்சப்ப எவ்வளவு இரத்தம் சிந்தியிருப்பார் இயேசப்பா? நல்லா இயேசப்பாட்ட வேண்டிங்க நீ அவரு மேல ஆணியடிக்கமா இருக்கணுமுன்னு. ஏன்னா எப்பவெல்லாம் உன் வார்த்தைகளால அடுத்தவங்கள காயப்படுத்துறியோ அப்பவெல்லாம் நீயும் இயேசப்பா மேல ஒரு ஆணியடிக்கிற.

**செபம்**

என் அன்பு இயேசப்பா! என் வார்த்தைகளை நான் கவனமாக பயன்படுத்த எனக்கு உதவி செய்யுங்க இயேசப்பா! வார்த்தைகள் உயிருள்ளது என்று நீங்க எங்களுக்கு சொல்லிக் கொடுத்திருக்கீங்க. அந்த வார்த்தைகளை நல்ல விதமாக பயன்படுத்தும் அறிவைத் தாங்க இயேசப்பா! என் வீணான வார்த்தைகளால் அடுத்தவர் மனது புண்பட்டிருந்தால் என்னை மன்னிச்சிருங்க இயேசப்பா!

**முதல்வர்** : எங்கள் பேரில்.....

**அனைவரும்** : எங்கள் பேரில்.....

**முதல்வர்** : மரித்த விசுவாசிகளின்......

## பன்னிரண்டாம் நிலை
## இயேசப்பா சிலுவையில் உயிர்விடுகிறார்

**முதல்வர்** : திவ்விய இயேசுவே!......

**அனைவரும்** : அதெனென்றால்......

**மகன்:** அப்பா! இயேசப்பா செத்துட்டாருப்பா. ஏலி ஏலி லெமா சபக்தானி ன்னு சொல்லிட்டுப் போய்ட்டாருப்பா. அப்படின்னா என்னப்பா?

**அப்பா:** அது மட்டுந்தான் கேட்டியா? அதுக்கு முன்னாடி இன்னொன்னு சொன்னாரே? தந்தையே இவர்கள் செய்வது இன்னதென்று தெரியாமல் செய்கிறார்கள். இவர்களை மன்னியும். இப்படிச் சொல்ல யாருக்கு மனசு வரும். நம்மள யாராவது ஒரு வார்த்தை சொல்லிட்டா அவங்கள மீண்டும் ஒரு பத்து வார்த்தைச் சொல்லி திட்டாமவிட்டா அன்னைக்கு தூங்கமாட்டோம். இவ்வளவு நேரம் அவரு பட்டப் பாடுகளையும் வேதனையும் கேட்டோமே, ஆனா அவரு எதையும் மனசுல வைச்சுக்காம இவர்களை மன்னியும் என்று வேண்டிக்கிறாரே, அவ்வளவு தூரம் இயேசப்பா நம்மை அன்பு செய்யுறாரு. அதையேத்தான் நம்மையும் செய்யச் சொல்றாரு. நீ கேட்டியே ஏலி ஏலி லெமா சபக்தானி, அது அராமிய மொழி. இயேசப்பா அந்த மொழி தான் பேசுனாரு. அந்த வார்த்தைகளோட அர்த்தம் என் இறைவா என் இறைவா ஏன் என்னைக் கைவிட்டீர் அப்படின்றதுதான். இதனால கடவுள் இயேசப்பாவை கைவிட்டுட்டார் அப்படின்னு நினைக்க கூடாது. இது திருப்பாடல் 22ல் வருகிற ஒரு வரி. இந்த வார்த்தைகளைச் சொல்லிதான் இயேசப்பா வேண்டுகிறார். ஆனால் உனக்கு எதுக்கு இயேசப்பா இறந்தாருன்னு புரியுதா? திருமுழுக்கு யோவான் இயேசுவை பார்க்கிறப்ப இதோ கடவுளின் செம்மறின்னு சொல்லுவாரு. ஞாபமிருக்கா? அந்த காலத்துல தினந்தோறும் எருசலேம் ஆலயத்தில மக்களின் பாவங்களுக்கு பரிகாரமாக ஒரு செம்மறியாடு பலியாக்கப்படும். அதேபோல, உலக மக்கள் எல்லோருடைய பாவங்களுக்கு பரிகாரமாக இயேசப்பா கடவுளின் செம்மறியாக மாறி பலியானார். அதனால நாம மீண்டும் மீண்டும் பாவம் செஞ்சோமுன்னா இயேசப்பா நமக்காக செய்த தியாகத்தை கிண்டல் செய்கிற மாதிரி ஆகும். அதனால உருக்கமா வேண்டிக்க. அவருடைய அன்பை நாம உணரனும் என்று.

**செபம்**

என் அன்பு இயேசப்பா! சாகப் போகிற வேளையிலும் உங்களை துன்புறுத்தியவர்களுக்கா நீங்க செபம் செய்தீங்க. அவர்களுடைய மன்னிப்பிற்காகவும் நீங்க சிலுவையில் பாடுபட்டு உங்க உயிரை கொடுத்தீங்க. ஆனால் பல நேரத்திலும் உங்களுடைய இந்த அன்பை உணராத தருணங்களுக்காக எங்கள மன்னிச்சிருங்க. உங்க அன்பை புரிந்து கொள்ளவும் அதே அன்பை மற்றவர்களுக்கு கொடுக்கவும் ஒரு நல்ல இதயத்தை எனக்கு கொடுங்க இயேசப்பா!

**முதல்வர்** : எங்கள் பேரில்.....

**அனைவரும்** : எங்கள் பேரில்.....

**முதல்வர்** : மரித்த விசுவாசிகளின்......

## பதின்மூன்றாம் நிலை
## இயேசப்பாவின் உயிரற்ற உடல் அன்னை மரியின் மடியினில்

**முதல்வர்** : திவ்விய இயேசுவே!......

**அனைவரும்** : அதெனென்றால்......

**மகன்:** மாதாவப் பார்த்தா பாவமா இருக்குப்பா! எப்படி அழுவுறாங்க பாருங்க?

**அப்பா:** இருக்காதா? எல்லா அம்மாக்களும் தான் செத்தாலும் என் பையன் நல்லா இருக்கனுன்னு நினைப்பாங்க. அம்மாக்கள் மனசே அப்படித்தான். தன் பையனுடைய உயிரற்ற உடலை மாதா மடியில வைச்சா அவங்க மனசு என்ன பாடுபட்டிருக்கும்? போன வருஷம் ஒரு காரியம் பண்ணியே! மறந்திட்டியா? தேர்வுல ஒழுங்கா மதிப்பெண் வாங்காம போனதால, அத எங்கிட்டயும் அம்மா கிட்டயும் சொல்ல பயந்துகிட்டு வீட்டை விட்டு ஓடிப்போனியே? ஞாபகமிருக்கா? அன்று நான் மனச தேற்றிக்கிட்டு உன்ன தேட ஆரம்பிச்சிட்டேன். ஆனா அன்னக்கி நாள் முழுவதும் உனக்கு என்ன ஆச்சோன்னு நினைச்சி உங்கம்மா அழுதத நான் மறக்கமுடியாது. ஒரு நாள் உன்னப் பார்க்கம துடிச்ச உங்கம்மா மனசவிட இவ்வளவு வேதனையும் அனுபவிச்சிட்டு இறந்து போன தன் பையன நினைச்சி துடிச்ச மாதா மனசு எவ்வளவு பாரமாயிருந்திருக்கும்? உன் உள்ளத்தை ஒரு வாள் ஊடுருவும் என்று சிமியோன் தாத்தா சொன்னது இவ்வளவு பெரிய பாரமென்று நமக்குத்

தெரியாது. ஆனால், எல்லாவற்றையும் கடவுளின் திட்டம் என்று ஏற்றுக்கொண்டு நம் பாவமன்னிப்பிற்காக இயேசுவோடு கல்வாரிப்பாதையில் பயணித்த மாதாவின் மனசு ரொம்பப் பெருசு. அன்னைக்கு இயேசப்பா தன் அன்புச்சீடர் யோவானிடம் சொன்னது நம்ம எல்லோருக்கும்: இதோ உன் தாய்.

**செபம்**

என் அன்பு இயேசப்பா! உங்க அம்மாவ எங்களுக்கெல்லாம் அம்மாவாக, உலக மக்கள் அனைவரின் அன்புக்குரிய அம்மாவாகக் கொடுத்தற்கு நன்றி இயேசப்பா! எப்படி உங்க அம்மாவுக்கு நீங்க எவ்வளவு நல்ல பிள்ளையாக இருந்தீங்களோ, அதே எங்கள் விண்ணக அம்மாவுக்கு நாங்களும் நல்ல பிள்ளைகளாகவும் அவரைப் போலவே கடவுளின் திட்டத்தை எங்கள் வாழ்வில் ஏற்று நடக்கும் பிள்ளைகளாகவும் வாழ உதவி செய்யுங்க இயேசப்பா!

**முதல்வர்** : எங்கள் பேரில்.....

**அனைவரும்** : எங்கள் பேரில்.....

**முதல்வர்** : மரித்த விசுவாசிகளின்......

## பதினான்காம் நிலை
## இயேசப்பாவை கல்லறையில் அடக்கம் செய்கிறார்கள்

**முதல்வர்** : திவ்விய இயேசுவே!......

**அனைவரும்** : அதெனென்றால்......

**மகன்:** அப்பா நானும் ரொம்ப நாளா கேட்கனுன்னு நினைச்சேன். இறந்தவங்கள நாம மண்ணுல தானே புதைக்கிறோம். அப்புறம் ஏன் அது கல்லறை?

**அப்பா:** அது பழைய ஏற்பாட்டு காலத்திலிருந்தே நடக்கின்ற ஒரு நிகழ்வு. நம்மைப் போன்று யூதர்கள் அந்தக் காலத்திலே மண்ணில் புதைக்கமாட்டாங்க. ஒரு மலையிலுள்ள ஒரு குகையில் அல்லது ஒரு பாறையில் குடைந்த ஒரு அறையில் வைப்பாங்க. அதனால் அது கல்லறை. அதையே நாமும் சொல்கிறோம். இயேசப்பாவையும் அப்படித்தான் ஒரு கல்லறையில் வைத்தார்கள். யோசேப்பு யாருன்னு தெரியுமா? மாதாவின் கணவர் யோசேப்பு அல்ல. இவரு வேறு ஒரு

யோசேப்பு. அரிமத்தியா அப்படின்ற ஒரு ஊர்க்காரர். இவர் மற்ற சீடர்களைப் போல வெளிப்படையாக இயேசப்பாவை பின்பற்றாமல், மறைமுகமாக இயேசப்பாவோட சீடராய் இருந்தார். அவரு போய் பிலாத்துவிடம் இயேசப்பாவின் உடலை கேட்டு வாங்கி தனக்கு வெட்டி வைத்திருந்த கல்லறையில் கொண்டு போய் அடக்கம் செய்கிறார். இயேசப்பாவோட நிலைமையை பார்த்தியா? பிறக்கும்போதும் தனக்கு சொந்தமில்லாத ஏதோ ஒரு மாட்டுக்கொட்டாயில் பிறந்தார். இறக்கும் பொழுதும் யாருக்கோ வெட்டிவைத்திருந்த கல்லறையில் அடக்கம் செய்யப்பட்டார். இந்த உலகையே உருவாக்கிய கடவுளுக்கு சொந்தமாக ஒரு இடமில்லை. மனுமகனுக்கு தலைசாய்க்கக்கூட இடமில்லை என்று அவர் சொன்னது எவ்வளவு உண்மை. இதே தான் நமக்கும். பல நேரத்தில் ஏதோ உலகையே நாம் கட்டி எழுப்பியது போல எல்லாவற்றையும் சொந்தமாக்க நினைக்கிறோம். ஆனா போகும் பொழுது நாம இரண்டு காரியத்தை மட்டுந்தான் எடுத்துட்டு போக முடியும். ஒன்னு நாம செய்த நன்மைகள். இன்னொன்று பாவங்கள். அதுக்குத்தான் இயேசப்பா சொன்னார், விண்ணுலகில் உங்கள் செல்வத்தை சேர்த்து வையுங்கள். அங்கே பூச்சியும்  துருவும் அழிப்பதில்லை. திருடரும் கன்னமிட்டுத் திருடுவதில்லை.

**செபம்**

என் அன்பு இயேசப்பா! நீங்க கல்லறையில அடக்கம் செய்யப்படவில்லை இயேசப்பா! நீங்க என்னோட மனசுல இருக்கீங்க. எனக்கு இந்த உலகம் தர சொத்து மேல ஆசைப்பட விடாதீங்க இயேசப்பா. நீங்கதான் என்னோட மிகப்பெரிய சொத்து. நீங்க திவ்யநற்கருணையாக என்னைத்தேடி வரும் தருணந்தான் என் வாழ்க்கையில நான் இழந்திடக்கூடாதுன்னு நினைக்கிற முக்கியமான நேரம் இயேசப்பா. எப்பொழுதும் என் வாழ்க்கையில இந்த இறைத்தாகமும் ஆன்மப்பசியும் இழந்திடாம இருக்க உதவி செய்யுங்க இயேசப்பா!

**முதல்வர்** : எங்கள் பேரில்.....

**அனைவரும்** : எங்கள் பேரில்.....

**முதல்வர்** : மரித்த விசுவாசிகளின்......

# முடிவுரை

**மகன்:** என்னாப்பா? சிலுவைப்பாதை முடிஞ்சிருச்சி? இயேசப்பா இன்னும் உயிர்த்து வரவில்லையே?

**அப்பா:** இது தவக்காலம். அதனால இயேசப்பாவோட அடக்கம் வரைக்கும்தான் தியானிப்போம். உயிர்ப்பு ஞாயிறுக்கு அப்புறம் அவரோட உயிர்ப்பைத்தானே ஆண்டு முழுவதும் கொண்டாடுறோம். உனக்கு ஞாபமிருக்கா? நற்செய்தியில இயேசப்பாவோட பரிசேயர்கள் நோன்பு குறித்து வாதிடுவாங்க. அப்பொழுது இயேசப்பா சொல்லுவாங்க மணமகன் தங்களோடு இருக்கும்வரை மணவிருந்தினர்கள் துக்கம் கொண்டாட முடியுமா? மணமகன் அவர்களை விட்டுப் பிரியவேண்டிய காலம் வரும். அப்போது அவர்களும் நோன்பு இருப்பார்கள். அதுதான் இந்தக்காலம். இயேசப்பா நமக்காக எப்படி பாடுகள் பட்டு நம்மை பாவத்தின் பிடியிலிருந்து மீட்டார் என்பதை தியானிக்கவே இந்த தவக்காலம். அதனால இவ்வளவு நேரம் அவரோட சிலுவைப்பாதையில் நடந்த நாம அவரது அன்பையும் இரக்கத்தையும் மன்னிப்பையும் நம் வாழ்வில் உணர்ந்து அதை மற்றவர்களுக்கும் பகிர்ந்து கொடுக்கும் ஒரு நல்ல மனசும் இதயமும் வேணுமுன்னு இயேசப்பாகிட்ட கேளு.

**செபம்**

என் அன்பு இயேசப்பா! உங்க அன்பை நான் புரிஞ்சிக்கணும். உங்க அளவுகடந்த இரக்கத்தை என் வாழ்நாள் முழுவதும் நான் அனுபவிக்கணும். உங்க நிபந்தனையற்ற மன்னிப்பை நான் பெற்றுக்கொண்டே இருக்கணும். இதையெல்லாம் எனக்கு மட்டுந்தான் என்கிற சுயநல சிந்தனை கைவிட்டு அதை எல்லாருக்கும் கொண்டு சேர்க்கணும். இது என் ஆசை இயேசப்பா. இதே சிந்தனையோடு கடைசி வரை சிலுவைப்பாதையின் வழி என்னை உங்க கூட அழைத்துச் செல்லுங்க இயேசப்பா!

# சிலுவைப்பாதை – 5

## மனிதனும் இறைமையும்



ரீட்டா

## மனிதனும் இறைமையும்

**முன்னுரை**

ஐயா இயேசுவே! உம்மையல்லாமல் வேறு தெய்வம் உண்மையாய் இல்லையே! நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவைத் தவிர வேறு தெய்வம் என்பது எங்கும் கிடையாது. இதுவே நம் விசுவாச சத்தியம். இவ்விசுவாச சத்தியத்தை மறுதலிக்கும் விதமாக நம் வாழ்க்கை ஆண்டவரின் அன்பிற்கு எதிராகவும், அவரின் அன்பை புறக்கணிப்பதாகவும் அமைந்திருக்கிறது.

நாம் சிலுவையை உற்றுப் பார்க்கிறோம். பக்திப் பொருளாக நினைத்து முத்தம் செய்கிறோம். சிலுவைப்பாதை என்னும் வழிபாட்டு உணர்வை மேடை நாடகம்போல் அரங்கேற்றி சுயபெருமை தேட முயற்சிக்கிறோம். ஆனால் நம் வாழ்க்கைப் பாதையோடு சிலுவையை இணைத்துச் சிந்தித்து, தியானித்து, மனம் திருந்தி, மனித மாண்புடன் வாழ முயற்சி செய்துள்ளோமா? இதோ சிலுவைப் பயணம் அதற்கு உதவி செய்கிறது. நம் பாவங்களையும் குற்றங்குறைகளையும் பணிந்த மனதோடு ஏற்று இயேசுவைப் பின் செல்வோம் வாருங்கள்.

## முதல் நிலை
## இயேசு சிலுவை சாவிற்குத் தீர்ப்பிடப்படுகிறார்

**முதல்வர்** : திவ்விய இயேசுவே!......

**அனைவரும்** : அதெனென்றால்......

**செயல்பட**

“உண்மையானவை எவையோ; கண்ணியமானவை எவையோ; நேர்மையானவை எவையோ; தூய்மையானவை எவையோ; அவற்றையே நீங்கள் மனத்தில் இருத்துங்கள்” **(பிலி 4:8)**

**சிந்திப்போம்**

இயேசுவே வாழ்வு தரும் உம் வார்த்தைகள் வற்றாத நன்மைத்தனங்களைக் கற்றுத் தந்தாலும் வாடிக்கையாகப் படித்துவிட்டு உண்மைக்கு எதிராகவும், கண்ணியமின்றியும் அசுத்தப் பேச்சுக்கள் பேசி தீமையை நாடித் திரிகின்றோம்.

சமூகத் தொடர்பு சாதனங்களில் மயங்கி மனித மாண்புகளையும், மானுட நேயங்களையும் புதைத்துவிட்டு முரண்பட்ட பொய்யான மதிப்பீடுகளுக்கு முன்னுரிமை தருகிறோம். பத்திரிக்கை, சின்னத்திரை, பெரிய திரை, இணையதளம், வலைத்தளம், அலைபேசி, கைபேசி, முகநூல் என அனைத்தையும் தீமைக்குப் பயன்படுத்தி, அவலங்களைப் பெரிதாக்கி அகமகிழ்கின்றோம். இம்மகிழ்ச்சி பொய்யானது, மாயையானது என்பதை உணராத எம் மனநிலையால் இன்றும் உம் உயிருக்கு மரண ஓலை எழுதுகின்றோம். எம்மை மன்னித்து நாங்கள் மனம் மாற அருள் செய்யும். – **ஆமென்!**

**முதல்வர்** : எங்கள் பேரில்.....

**அனைவரும்** : எங்கள் பேரில்.....

**முதல்வர்** : மரித்த விசுவாசிகளின்......

## இரண்டாம் நிலை
## இயேசுவின் தோள்மீது பாரமான சிலுவை சுமத்தப்படுகிறது

**முதல்வர்** : திவ்விய இயேசுவே!......

**அனைவரும்** : அதெனென்றால்......

**செயல்பட**

“என் பொருட்டு பிறர் உங்களை இகழ்ந்து துன்புறுத்தி உங்களைப் பற்றி இல்லாதவை பொல்லாதவை எல்லாம் சொல்லும்போது நீங்கள் பேறு பெற்றவர்கள். மகிழ்ந்து பேருவகை கொள்ளுங்கள்.” **(மத்தேயு 5:11)**

**சிந்திப்போம்:**

பேறுபெற்றவர்களாக வாழ எங்களைப் பெயர் சொல்லி அழைத்த ஆண்டவரே! உம் கட்டளைகளின்படி, நியமங்களின்படி நாங்கள் நடக்க முனையும்போது இடர்ப்பாடுகளையும் ஏளனப் பேச்சுகளையும் எதிர்கொள்ள வரும் என்பதை ஏற்க மறுக்கின்றோம்.

சுமைகளால் வாடும் இளஞ்சிறார்களை நினைவுகூர மறுக்கின்றோம். ஒருவேளை கஞ்சிக்காக, பகல் இரவு பாராமல் எட்டி உதைக்கும் எஜமானர்களுக்கு எடுபிடியாய் ஏளனப்பேச்சுகளுக்கு ஆளாகி பட்டாசு, தீப்பெட்டி, பீடி தொழிற்கூடங்களிலும், உணவு விடுதி, பட்டறை, பேருந்து, இரயில் நிலையங்களிலும் அல்லல்படும் குழந்தைகளை நினைக்க மறுக்கின்றோம். அவர்களின் வாழ்வுரிமை, கல்வி உரிமை, சமூக அந்தஸ்து மறுக்கப்படுவதை எதிர்க்க மறுக்கின்றோம். இதனால் உம் சிலுவையின் பாரம் அதிகமாவதை அறியாமல் இருக்கின்றோம். எங்களின் அறியாமை நோய்க்காகவும், பிஞ்சு மனங்களில் சுமைகளை ஏற்றி வைத்த குற்றங்களுக்காகவும் மனம் வருந்துகின்றோம். எம்மை மன்னித்து மனம் திருந்தி வாழ அருள் தாரும். **–ஆமென்!**

**முதல்வர்** : எங்கள் பேரில்.....

**அனைவரும்** : எங்கள் பேரில்.....

**முதல்வர்** : மரித்த விசுவாசிகளின்......

## மூன்றாம் நிலை
## இயேசு சிலுவையின் பாரத்தால் முதல் முறை தரையில் விழுகிறார்

**முதல்வர்** : திவ்விய இயேசுவே!......

**அனைவரும்** : அதெனென்றால்......

**செயல்பட**

"உங்களுடைய சகோதர சகோதரிகளுள் ஒருவர், ஒரே நாளில் உங்களுக்கு எதிராகப் பாவம் செய்து ஏழு முறையும் உங்களிடம் திரும்பி வந்து 'நான் மனம் மாறிவிட்டேன்' என்று சொல்வாரானால் அவரை மன்னித்து விடுங்கள்" **(லூக்கா 17:4)**

**சிந்திப்போம்**

அடிமையின் தன்மை பூண்ட ஆண்டவரே! எம்மீது நீர் வைத்த அன்பை எண்பிக்க, சிலுவை சுமந்து மண்ணில் விழுந்து எழுந்து நடந்தீர். நாங்களோ உம்மைப் போற்றுகிறோம், புகழ்கிறோம், ஆராதிக்கிறோம், அன்பு செய்கிறோம் என்று சொல்லிக்கொண்டு அடுத்தவர் நலனைக் கெடுக்க முயற்சிக்கிறோம். அநியாய வட்டி வாங்குகின்றோம்; மற்றவர்களின் நற்பெயரை சிதைக்கின்றோம்; ஏழை எளியவரைக் கண்டு

எள்ளி நகையாடுகின்றோம்; ஆடம்பர வாழ்வையும், ஆதிக்க மனநிலையும் கொண்டு அடிமைப்படுத்த நினைக்கின்றோம்.

கலாச்சார மேம்பாடு என்று சொல்லி போதைப்பழக்கங்களிலும், ஒழுங்குமுறையற்ற பொழுதுபோக்குகளிலும் விட்டில் பூச்சிகளாய் விழுந்து கிடக்கிறோம். எங்களின் இந்த நாற்றமடிக்கும் நடவடிக்கைகளால் உம்மை இன்றும் கீழே விழச் செய்கின்றோம். ஒடுக்கமான வாயில் வழியே ஐம்புலன்களை அடக்கி நுழைய மறுக்கின்றோம். இதற்காக மனம் வருந்துகின்றோம். எம்மை மன்னியும் ஆண்டவரே! – **ஆமென்!**

**முதல்வர்** : எங்கள் பேரில்.....

**அனைவரும்** : எங்கள் பேரில்.....

**முதல்வர்** : மரித்த விசுவாசிகளின்......

## நான்காம் நிலை
## இயேசு தன் தாயை சந்திக்கின்றார்

**முதல்வர்** : திவ்விய இயேசுவே!......

**அனைவரும்** : அதெனென்றால்......

**செயல்பட**

“சோதனையை மனவுறுதியுடன் தாங்குவோர் பேறுபெற்றோர். ஏனெனில், அவர்களது தகுதி மெய்ப்பிக்கப்படும்போது, தம்மீது அன்பு கொள்வோர்க்குக் கடவுள் வாக்களித்த வாழ்வாகிய வெற்றி வாகையினை அவர்கள் பெறுவார்கள்” **(யாக்கோபு 1:12)**

**சிந்திப்போம்:**

பாடுகளின் பாதையில் பரிதவிக்கும் தாயின் மனம் கண்டு மௌன மொழியால் மனத் திடம் கற்றுத் தந்தவரே இறைவா, பிறர் துன்பம் கண்டு கலங்கிய நீர் தண்ணீரை திராட்சை இரசமாக்கினீர். நோய்களையும் பிணிகளையும் குணமாக்கினீர். ஆனால், நாங்களோ பிறர் படும் துன்பம் கண்டு மகிழ்கிறோம். இவனுக்கு ‘இதுவும் வேண்டும், இதற்கு மேலும் வேண்டும்’ என்கிறோம். மேலும் கிறிஸ்தவ வாழ்வின் அஸ்திவாரமாம் விசுவாசத்தை மறுதலித்து பெயர், புகழ், பதவிக்காக உம்மை உதறித் தள்ளுகிறோம்.

விளம்பர வார்த்தைகளில், ஆடம்பர அலங்காரங்களில் எம் வழிபாட்டை வாடிக்கையாக்கி ஆன்மாவை அடகு வைக்கிறோம். உம் தாயின் 'ஆகட்டும்' என்ற வார்த்தையின் அசைக்க முடியாத விசுவாசத்தை அசட்டை செய்து வாழ்கிறோம். எம்மை மன்னியும், மனமாற்றம் பெற்று உம் தாயைப் போல விசுவாசப் பயணத்தில் துணிவுடன் நடக்க மனவலிமை தாரும். **–ஆமென்!**

**முதல்வர்** : எங்கள் பேரில்.....

**அனைவரும்** : எங்கள் பேரில்.....

**முதல்வர்** : மரித்த விசுவாசிகளின்......

## ஐந்தாம் நிலை
## இயேசு சிலுவை சுமக்க சீமோன் உதவுகிறார்

**முதல்வர்** : திவ்விய இயேசுவே!......

**அனைவரும்** : அதெனென்றால்......

**செயல்பட**

"பாம்புகளைப் போல விவேகம் உள்ளவர்களாயும், புறாக்களைப்போல் கபடற்றவர்களாயும் இருங்கள்" **(மத்தேயு 10:16)**

**சிந்திப்போம்:**

துன்புறும் மனிதனுக்கு துணிந்து உதவி செய்யவேண்டும் என்பதை சீமோன் வாயிலாகக் கற்றுத் தந்தவரே இறைவா! ஆழம் காண முடியா உம் அன்பை சோதித்துப் பார்க்கும் அறிவிலிகளாய் இருக்கின்றோம்.

மனத்தெம்பூட்டும் மனித நேயச் செயல்களைச் செய்யும் சகோதர சகோதரிகளை மாறுபட்டுப் பார்க்கின்றோம். விபரீத விளைவுகளுக்குள் அவர்களைச் சிக்கவைத்து விமர்சிக்கின்றோம். நலிவுற்ற மக்களின் நாடிகளைப் பிடித்துப் பார்த்து நகைக்கின்றோம். இப்படி நாச மோச வேலைகளுக்கு துணை போகும் நாங்கள் மனதில் குற்றமின்றி பழிபாவங்களுக்கு அஞ்சி உம் வழியில் நடக்க யோசிக்கின்றோம்.

எங்களின் அறியாமை அவலங்களை நினைந்து இந்நேரம் அழுகின்றோம். எம்மை மன்னியும். அடுத்தவரின் துயர் கண்டு வருந்தும் மனமும், துன்பம் துடைக்கும் விவேகமும் தந்து எம்மை நெறிப்படுத்தும். **ஆமென்!**

**முதல்வர்** : எங்கள் பேரில்.....

**அனைவரும்** : எங்கள் பேரில்.....

**முதல்வர்** : மரித்த விசுவாசிகளின்......

## ஆறாம் நிலை
## இயேசுவின் திருமுகத்தை வெரோணிக்கா துடைக்கிறாள்

**முதல்வர்** : திவ்விய இயேசுவே!......

**அனைவரும்** : அதெனென்றால்......

**செயல்பட**

“பேரன்பும் உண்மையும் ஒன்றையொன்று சந்திக்கும். நீதியும் நிறைவாழ்வும் ஒன்றையொன்று அரவணைக்கும். மண்ணினின்று உண்மை முளைத்தெழும்” **(திருப்பாடல்கள் 85:10)**

**சிந்திப்போம்**

தூயவர் உம் திருமுகம் துடைக்க துகில் மட்டும் கொண்டு வரவில்லை, துணிவுடனும் விரைந்திட்டாள் வெரோணிக்கா. ஆண்டவரே, பெண்ணினத்தின் மென்மைக்கும், தாய்மையின் மேன்மைக்கும் தடுப்புச் சுவர் இல்லை என்பதை உம் பாடுகளின் பயணத்திலும் நீர் எண்பிக்கச் செய்தீர். ஆனால் நாங்களோ பெண்ணினத்தை போதைப்பொருளாக, எம் ஆதிக்க அதிகார மிரட்டல்களுக்கு உட்படுத்தி அடிமைப்படுத்துகின்றோம். புனிதமான திருமண உறவை பணத்தால் கொச்சைப்படுத்தி வரதட்சணை என்னும் சாட்டை கொண்டு வதைக்கிறோம். சீதனம், சீர்வரிசை இல்லையென்றால் சித்திரவதை செய்கின்றோம்.

அக அழகை, அன்பு வாழ்வைப் பார்க்காமல் ஆடம்பர அலங்காரங்களின் அணிவகுப்பில் எடை போடுகிறோம். பெண்களின் தூய்மைக்குப் பேரம் பேசி சமூக அந்தஸ்து தர மறுக்கின்றோம். இப்படிப்பட்ட இதயமற்ற, இரக்கமற்ற செயல் புரிந்த இழிநிலைக்காய் மனம் வருந்துகிறோம். பெண் என்பவள் ஆணின் சரிபாதி என்பதை ஏற்கும் நீதி நிறைந்த உள்ளத்தை எமக்குத் தந்தருளும். – **ஆமென்!**

## ஏழாம் நிலை
## இயேசு இரண்டாம் முறை தரையில் விழுகிறார்

**முதல்வர்** : திவ்விய இயேசுவே!......

**அனைவரும்** : அதெனென்றால்......

**செயல்பட**

"தீயோர் எனக்குக் கண்ணி வைத்தனர்; ஆனால் உம் நியமங்களினின்று நான் பிறழவில்லை. உம் ஒழுங்குமுறைகளை என்றும் உரிமைச் சொத்தாய் கொண்டுள்ளேன். ஆகவே அவை என் இதயத்தை மகிழ்விக்கின்றன" **(திருப்பாடல்கள் 119:110)**

**சிந்திப்போம்**

இறைத்திருவுளம் நிறைவேற்றத் திருவுளம் கொண்டதால் இயேசுவே நீர் இரண்டாம் முறையும் விழுந்து எழுந்து நடந்தீர். ஆண்டவரே, 'என் காலடிக்கு உம் வாக்கு விளக்கு' என்பதை அறிந்தும் உணர்ந்தும் இருளை விரும்பி இறுகத் தழுவிக்கொண்ட நேரங்கள் எத்தனை எத்தனையோ!

பசித்தோரை பார்த்தாலும் பாராத நிலை; வெறுப்பு, கோபம், பழிவாங்கல், பொறாமை என்ற கீழ்ப்பட்ட மனநிலையால் பிறர் உயர்வை விரும்பாமல் திசைக்கு ஒன்றாக, ஒரு தினுசாக, சோதனைகளே இருக்கக்கூடாது, துன்பங்களே வரக்கூடாது, ஏமாற்றங்களையே சந்திக்கக்கூடாது என்று சொல்லி அகந்தை பள்ளத்துள் அமிழ்ந்து கிடக்கின்றோம், எம்மை மன்னியும். இறைநம்பிக்கை என்னும் விசுவாச அருள் ஒளியில் பணிந்து வாழ பக்குவமான மனதைத் தந்தருளும். **ஆமென்!**

**முதல்வர்** : எங்கள் பேரில்.....

**அனைவரும்** : எங்கள் பேரில்.....

**முதல்வர்** : மரித்த விசுவாசிகளின்......

## எட்டாம் நிலை
## இயேசு எருசலேம் பெண்களுக்கு ஆறுதல் சொல்கிறார்

**முதல்வர்** : திவ்விய இயேசுவே!......

**அனைவரும்** : அதெனென்றால்......

**செயல்பட**

"நல்ல பெண்ணின் அழகு வான மண்டலங்களில் ஒளிரும் கதிரவனைப்போல் அவள் வீட்டின் அணிகலனாய் இருக்கும்"

**– (சீராக் 26:16)**

**சிந்திப்போம்**

'தாய்மைக்கு நிகர் தரணியிலே வேறில்லை' என்பதை உணராத பெண்ணினத்தின் அறியாமை அழுகுரலுக்கு அர்த்தங்கள் கற்பித்த கருணை மாகடலே! கணிப்பொறி உலகில் கற்பு என்றால் என்ன என்று கேள்வி கேட்கின்றோம். ஆணாதிக்கச் சமூகம் என ஆவேசப்பட்டாலும், பட்டங்கள் ஆளவும் சட்டங்கள் செய்யவும் படித்திருந்தாலும் பண்பாட்டை மறந்த நிலையில் மடமை குணத்திற்கு மகுடம் சூட்டி கருக்கலைப்புச் செய்கிறோம். 'இறைஞானம்' என்னும் தூய ஆவியின் அக்கினித் தீயை பேராசை என்னும் பொறாமைத் தீயால் பொசுக்கி விடுகிறோம். பெண்மை, தாய்மை இவற்றின் புனிதத்தைச் சிதைத்திருக்கின்றோம். ஆண்டவரே, இத்தனை வன்செயல்களை நினைத்து அழ எமக்குக் கற்றுத்தாரும். இனியாவது எம் கடமைகளை கருத்தொருமித்து செய்யும் பக்குவத்தையும், பயிற்சியையும் ஆற்றலும் அருளையும் எமக்குத் தாரும். **ஆமென்!**

**முதல்வர்** : எங்கள் பேரில்.....

**அனைவரும்** : எங்கள் பேரில்.....

**முதல்வர்** : மரித்த விசுவாசிகளின்......

## ஒன்பதாம் நிலை
## இயேசு மூன்றாம் முறை தரையில் விழுகிறார்

**முதல்வர்** : திவ்விய இயேசுவே!......

**அனைவரும்** : அதெனென்றால்......

**செயல்பட**

"கடவுளுக்கு உகந்த தூய உயிருள்ள பலியாக உங்களைப் படையுங்கள். இதுவே நீங்கள் செய்யும் உள்ளார்ந்த வழிபாடு"

**– (உரோமையர் 12:2)**

**சிந்திப்போம்**

உண்மையான வழிபாடு எது எனவும், இறைத்திருவுளம் அறியும் திறனையும் எப்போது நாங்கள் பெற முடியும் என்பதை முகங்குப்புற மூன்றாம் முறையும் விழுந்து எழுந்த நிலையில் எமக்கு விளங்க வைக்கும் ஆண்டவரே! உயிருள்ள பலியாக ஒப்புக்கொடுக்கப்பட வேண்டிய எம் மனங்கள் எம் சுயநலச் செயல்களால் உம்மை கீழே விழத்தாட்டுகின்றன.

பொருளாசைகளுக்கு மயங்கி நற்கருணை, திருப்பலி, திருவருட்சாதனங்களை அலட்சியப்படுத்தச் செய்கிறது. பாவசங்கீர்த்தனம் என்னும் அருள் நிலையின் மகத்துவம், மேன்மை உணராமல் உம் அன்பை புறக்கணிக்கத் துணிகிறது. குருத்துவம் என்னும் புனிதத்துவத்திற்கு உரியவர்களைப் பற்றி அஞ்சாமல் அவதூறு பேசச் செய்கிறது. இதுபோன்ற எங்களின் பல்வேறு இழிச்செய்கைகளால் வழிபாட்டையும், வணக்கத்துரியவர்களையும் புனித இடங்களையும் மதிக்காமல் உமக்கு அவமானம் வருவித்திருக்கின்றோம். இப்படி அடிக்கடி புறக்கணிப்பின் பள்ளத்தில் விழுந்த நேரங்களுக்காய் மனம் வருந்துகிறோம், எம்மை மன்னியும். பாவநிலை உணர்ந்து திருந்தி வாழக் கற்றுத் தாரும். **ஆமென்!**

**முதல்வர்** : எங்கள் பேரில்.....

**அனைவரும்** : எங்கள் பேரில்.....

**முதல்வர்** : மரித்த விசுவாசிகளின்......

## பத்தாம் நிலை
## இயேசுவின் ஆடையைக் களைகிறார்கள்

**முதல்வர்** : திவ்விய இயேசுவே!......

**அனைவரும்** : அதெனென்றால்......

**செயல்பட**

"உங்கள் உடல் நீங்கள் கடவுளிடமிருந்து பெற்றுக்கொண்ட தூய ஆவி தங்கும் கோவில். நீங்கள் உங்களுக்கு உரியவரல்ல. கடவுள் உங்களை விலை கொடுத்து மீட்டுள்ளார். உங்கள் உடலால் கடவுளுக்குப் பெருமை சேருங்கள்"

**– (உரோமையர் 6:19)**

**சிந்திப்போம்**

பரிசுத்த தெய்வமே! படைப்பின் மூலமாக விளங்கும் உம்மைப் புரிந்து கொள்ளும் ஞானம் இல்லாமல் உரித்துப் பார்க்கின்றோம். தூய்மை தூசுபோல் தட்டி விடப்படுகின்ற காலத்தில் பேச்சுப்போட்டிக்கோ, கருத்தரங்கிற்கோ தலைப்புக் கொடுக்கப்பட்டதைப்போல் கற்பு, கற்பு என்று பேசி களங்கப்படுத்துகின்றோம்.

ஆணுக்கும் பெண்ணுக்கும் பொதுவான கற்பு என்னும் புனித உணர்வைக் கொச்சைப்படுத்தி நாகரீகம் என்ற போர்வையில் எம் நடை, உடை, பாவனைகளால் தூய்மையைத் துகிலுரிக்கின்றோம். 'எல்லாம் இயேசு மயம்' என்பது மாறி, தீமை, வன்முறை, கொலை, கொள்ளை, கள், காமம் என வஞ்சகச் செயல்களை வாழ வைத்துக் கொண்டிருக்கின்றோம். இழுத்து உரியப்பட்ட உம் உடலினின்று ஓடி வரும் தூய இரத்தத்தால் எம் பாவங்களைக் கழுவும். எம்மை மன்னியும். பாவத்தினின்று விலகி வாழக் கற்றுத் தாரும். **ஆமென்!**

**முதல்வர்** : எங்கள் பேரில்.....

**அனைவரும்** : எங்கள் பேரில்.....

**முதல்வர்** : மரித்த விசுவாசிகளின்......

## பதினோராம் நிலை
## இயேசுவை சிலுவையில் அறைகிறார்கள்

**முதல்வர்** : திவ்விய இயேசுவே!......

**அனைவரும்** : அதெனென்றால்......

**செயல்பட**

"விழிப்பாயிருங்கள்; நம்பிக்கையில் நிலைத்திருங்கள்; துணிவுடன் நடந்து கொள்ளுங்கள்; வலிமையுடன் செயல்படுங்கள்; அனைத்தையும் அன்போடு செய்யுங்கள்"

**– (1 கொரிந்தியர் 16:13)**

**சிந்திப்போம்**

அனைத்தையும் அன்போடு செய்ய எமக்குக் கற்பித்து, அதனை செயல்வடிவமாக்க கைகளையும் கால்களையும் ஆணிகள் கொண்டு அறைய உம்மை ஒப்புவித்தவரே இறைவா, என் தீய நினைவுகளால் உமக்கு முள்முடியும், என் கரடுமுரடான வாழ்வால் கல்வாரிப் பாதையும், கொடுத்து மகிழக் கொடுத்த கரங்களைக் கையூட்டு வாங்கி கொலை பாதகம் செய்ததால் உமது கரங்களில் ஆணியும், உம்மை மறுதலிக்கும் விதமாக வேற்றுத் தெய்வங்களை நாடி, ஜோதிட மந்திர தந்திரங்களுக்கு முன்னுரிமை கொடுத்ததால் கால்களில் ஆணியும், உடலின், நாவின் இச்சைகளுக்கு உட்பட்டதால் உமது விலாவையும் ஈட்டி கொண்டு துளைத்திருக்கின்றோம்.

இத்தனை அகோரத்திற்கும் எம் தலையான பாவங்களே காரணமாய் இருக்கின்றது. இதை இந்நேரம் நாங்கள் ஏற்றுக் கொள்கின்றோம். தந்தையே எம்மை மன்னியும், திருந்தி வாழக் கற்றுத் தாரும்.– **ஆமென்!**

**முதல்வர்** : எங்கள் பேரில்.....

**அனைவரும்** : எங்கள் பேரில்.....

**முதல்வர்** : மரித்த விசுவாசிகளின்......

## பன்னிரெண்டாம் நிலை
## இயேசு சிலுவையில் உயிர் விடுகிறார்

**முதல்வர்** : திவ்விய இயேசுவே!......

**அனைவரும்** : அதெனென்றால்......

**செயல்பட**

"இரட்டை நாக்கு உடையவர்களாகவும், குடிவெறிக்கு அடிமைப்பட்டவர்களாகவும், இழிவான ஊதியத்தின் மேல் ஆசை உள்ளவர்களாகவும், இருத்தல் ஆகாது. எச்சரிக்கை! தூய மனச்சான்று உடையவர்களாய் விசுவாசத்தின் மறைபொருளைக் காத்து வர வேண்டும்" (1திமொத்தேயு 3 :8-9)

**சிந்திப்போம்**

எனக்காகப் பாடுகள் ஏற்ற அன்பரே! 'நானும் உன்னைத் தீர்ப்பிடேன்; இனிமேல் பாவம் செய்யாதே' என்று விபச்சாரத்தில் பிடிபட்ட பெண்ணுக்கு உரிமை வாழ்வு வழங்கியவரே, வலப்பக்க கள்வனுக்கும் கருணை காட்டி வான்வீடு வழங்கியவரே! விலாவை ஊடுருவக் குத்தியவனுக்கும் அருள் பார்வை வழங்கிய அருளாளரே!

"உங்களில் பாவம் இல்லாதவன் மட்டும் என் சிலுவை அடியில் நின்றால் போதும்" என்று நீர் சொல்லுவீரானால், நாங்கள் எங்கே போவோம்? ஆண்டவரே! பாவமே அறியாத நீர் ஆணிகளால் வதைப்பட்டு விண்ணுக்கும் மண்ணுக்கும் இடையில் தொங்கி இரத்தமும் நீரும் சிந்தி உயிரைக் கொடுத்துள்ளீர். நன்றி இயேசுவே நன்றி!

என்ன நேர்ந்தாலும் நன்றி சொல்ல நீர் கற்பித்து இருந்தும், நன்றி மறந்தவர்களாகவே நடந்து கொள்கிறோம். நன்மைகளை மட்டுமே அனுபவிக்க நினைக்கும் நாங்கள் நன்றி சொல்ல மறந்த தருணங்களுக்காக வருந்துகிறோம். எம்மை மன்னியும், நன்றி சொல்லி வாழும் நல்மனம் தாரும். ஆமென்!

**முதல்வர்** : எங்கள் பேரில்.....

**அனைவரும்** : எங்கள் பேரில்.....

**முதல்வர்** : மரித்த விசுவாசிகளின்......

## பதின்மூன்றாம் நிலை
## இயேசுவின் உயிரற்ற உடல் அவர் தாயின் மடியில்

**முதல்வர்** : திவ்விய இயேசுவே!……

**அனைவரும்** : அதெனென்றால்……

**செயல்பட**

கிறிஸ்து இயேசுவுடன் இணைந்து இறைப்பற்றுடன் வாழ விரும்புவோர் அனைவரும் இன்னலுறுவர் (2 திமொத்தேயு 3:12)

**சிந்திப்போம்**

உம் அன்புத் தாயை எமக்குத் தாயாகத் தந்து சென்ற ஆண்டவரே! உம் உயிரற்ற உடலை மடிமீது சுமந்த வேளையில், ஆறாத் துயரம் அடைந்தாள் அன்னை மரியா. அத்துயரம் அன்றோடு முடிந்ததா, இல்லையே.

அன்பு, அரவணைப்பு, பாதுகாப்பு, பராமரிப்பு, மதிப்புப் பெற வேண்டிய பெற்றோர்கள், முதியவர்கள், விதவைகள், நோயாளிகள் நிராகரிக்கப்படும் பொழுதும், பெற்றோர் சொல்லைப் புறக்கணிக்கும் பிள்ளைகளின் போக்கைக் கண்டும் இன்றும் அன்னை மரியா துயரம் அடைகிறாள். ‘ஆகட்டும்’ என்பது அன்னை மரி உணர்ந்து செபித்த வார்த்தை. நாங்களோ உள்ளத்தால் உணராமல் உதடுகளால் மட்டும் உச்சரிக்கின்றோம். எங்களுடைய மனமாற்றங்களும் தற்காலிகமாகவே இருக்கிறது. நீர்க்குமிழி போல மறைந்தும் விடுகிறது. இப்படிப்பட்ட மேம்போக்கான மனமாற்றத்தைத் தவிர்த்து வானகத்தில் மகிழ்ச்சி உண்டாக்கும் மனமாற்றத்தைப் பெற்றுக்கொள்ள எங்களை ஆசீர்வதியும், அப்போது உம் தாயும் ஆறுதல் அடைவாள். **ஆமென்!**

**முதல்வர்** : எங்கள் பேரில்…..

**அனைவரும்** : எங்கள் பேரில்…..

**முதல்வர்** : மரித்த விசுவாசிகளின்……

## பதினான்காம் நிலை
## இயேசுவின் உடல் கல்லறையில் அடக்கம் செய்யப்படுகிறது

**முதல்வர்** : திவ்விய இயேசுவே!......

**அனைவரும்** : அதெனென்றால்......

**செயல்பட**

"நம் பாவங்களை நாம் ஒப்புக்கொள்வோமென்றால் கடவுள் பாவங்களை மன்னித்து குற்றம் அனைத்திலுமிருந்தும் நம்மைத் தூய்மைப்படுத்துவார். ஏனெனில் அவர் நம்பிக்கைக்கு உரியவர்" **(யோவான் 1:9)**

**சிந்திப்போம்**

கிறிஸ்தவ வாழ்வினுடைய ஆழம்நிறை தோற்றம்தான் நித்திய வாழ்வு. ஆண்டவர் தந்தருளிய ஆன்மாவை திரும்பவும் ஆண்டவரிடமே கொடுக்க வேண்டிய நிகழ்வுதான் மரணம். இவ்வுலக வாழ்வில் ஒருபோதும் முகம் முகமாய் காண முடியாத ஆண்டவரைக் கண்டடையும் மகிழ்வின் வாசல்தான் மரணம். அது முடிவல்ல; நித்திய வாழ்வின் தொடக்கம். நம் இயேசுவின் அடக்கமும் அப்படித்தான்.

நாம் அவரோடு இறந்தால் அவரோடு வாழ்வோம் என்பதே நம் விசுவாசம். பள்ளத்தில் விழுந்த ஆடு தன் ஆயனை நோக்கிக் கதறுவதைப்போல் பரிசுத்த பாக்கியமான வாழ்வை நாம் ஒவ்வொருவரும் பெற்றுக்கொள்ள நாமும் ஆண்டவரை நோக்கிக் குரல் எழுப்புவோம். ஆமென்!

**முதல்வர்** : எங்கள் பேரில்.....

**அனைவரும்** : எங்கள் பேரில்.....

**முதல்வர்** : மரித்த விசுவாசிகளின்......

# சிலுவைப்பாதை – G

## அவரோடு அவராக



அருட்பணி. ஆச்சரியம் அ.ப.ச

## அவரோடு அவராக

**முன்னுரை**

சிலுவைப் பயணம் என்பது நடைப்பயணம் அல்ல சுமைகளின் பயணம், சிலுவை என்பது சின்னம் அல்ல, சிகரத்தின் உச்சம். சிலுவைப் பயணம் என்பது விசுவாசப் பயணம், மரியாதைக்காக நடை பயிலும் கைகட்டிய பயணம் அல்ல, நம் மனதை உருகச்செய்யும் பயணம், வெயிலுக்காக நிழல் ஒதுங்கும் பயணமல்ல, சிந்தையை உருகச் செய்யும் பயணம், உச்சி பிளக்கும் வெயிலில் நம் உணர்வைத் தூண்டுகின்ற பயணமிது. எனக்காக என் இறைவன் இடர்பட வந்தார் என்பதை நினைவுறுத்தி என் இடரை சிலுவையாய் தூக்கி, என் குடும்ப இடரை, நான் பிறருக்குச் செய்த இடரை, பிறர் வாழ்க்கையில் இடறலாய் இருந்த தருணத்தை நினைத்து இத்தகைய இடரை என் சிலுவையாக, என் சுமையாக, தன் சுமைகளை தங்கள் தோள்களில் சுமந்தவர்களாக அவரோடு அவரில் இணைந்தவராக ஒன்றிணைந்து பயணிக்கும் பயணமிது. வாருங்கள், பயணிப்போம், பயன் பெறுவோம்.

## முதல் நிலை
## இயேசுவுக்கு தீர்ப்பு அளிக்கின்றார்கள்

**முதல்வர்** : திவ்விய இயேசுவே!......

**அனைவரும்** : அதெனென்றால்......

2000 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னதாக இயேசுவை தீர்ப்பளித்தார்கள்; அவருக்கு அன்று அளித்த தீர்ப்பு இன்றுவரை தொடர்ந்து கொண்டுதான் இருக்கின்றது. அன்று இயேசு கிறிஸ்துவை தீர்ப்பிட்டார்கள், இன்று நாம் கிறிஸ்தவர்களை தீர்ப்பிடுகின்றோம், கிறிஸ்தவர்களாய் இருந்து கொண்டு கிறிஸ்தவர்களை நாம் நம் வாய் வார்த்தையாலும் செயல் பாடுகளாலும் தீர்ப்பிட்டு நாமும் தீர்ப்புக்குள்ளாகின்றோம் என்பதை மறந்து பிறர் வாழ்க்கைக்கு தீர்ப்பு வழங்கும் அதிகாரத்தைக் கையில் எடுத்து கிறிஸ்தவர்களை தீர்ப்பிடும்போது நாம் சிந்திக்க வேண்டும், பிறரைப் பற்றி இல்லாதவை பொல்லாதவை பேசும்போது, அவதூறாகப் பேசி பிறரின் வாழ்க்கையை,

பெயரை களங்கப்படுத்தி சின்னா பின்னமாக்கும்போது, அதே இயேசுவை நான் தீர்ப்பளிக்கின்றேன் என்பதை மறந்து தீர்ப்பளிக்கின்றோம். யோவா 8: 15 “நீங்கள் உலகப்போக்கின்படி தீர்ப்பு அளிக்கின்றீர்கள், நான் யாருக்கும் தீர்ப்பு அளிப்பதில்லை.” (லூக் 6: 37) “பிறர் குற்றவாளி எனத் தீர்ப்பளிக்காதீர்கள்”.

**செபம்**

இயேசுவே! எங்கள் வாய் வார்த்தைகளினால் பிறர் குற்றவாளி எனத் தீர்ப்பளிக்காமலிருக்க வரம் தாரும்!

**முதல்வர்** : எங்கள் பேரில்.....

**அனைவரும்** : எங்கள் பேரில்.....

**முதல்வர்** : மரித்த விசுவாசிகளின்......

## இரண்டாம் நிலை
## இயேசுவின் தோள் மீது சிலுவை சுமத்துகின்றார்கள்

**முதல்வர்** : திவ்விய இயேசுவே!......

**அனைவரும்** : அதெனென்றால்......

சுமை சுமந்து சோர்ந்திருப்போரே! வாருங்கள் நம் ஆண்டவர் அழைக்கின்றார்! இளைப்பாற்றி தருகின்றார்! இருகரம் விரித்தவராய் இதயத்தை திறந்தவராய் இறைவன் அழைக்கின்றார் இனியும் தாமதமேன்.. தலைச் சுமையும் தோள்சுமையும் பெரிய சுமையல்ல ஆனால் மனச்சுமையும் பாவச் சுமையும் மனிதனையும் மனதினையும் வாட்டி வதைக்கும் கொடூரமான சுமையாகும். நம்மை யாரேனும் திட்டி விட்டால் அவர்களின் வார்த்தை சுமைக்காக பல வாரங்கள், பல மாதங்கள், பல வருடங்கள் நாம் பேசாமல் இருந்து விடுகின்றோம். ஓர் அற்ப மனித வார்த்தைக்கே இவ்வளவு சுமை தரும் சக்தி இருக்கிறது என்றால், நம் எல்லோருடைய பாவச் சுமை இயேசுவின் தோள்களை மட்டும் பதப்படுத்தவில்லை மாறாக அவரை சாகும் அளவுக்கு பதப்படுத்தும் சுமையாக நாம் ஏற்றுகின்றோம், அவரை ஒரு சுமைதாங்கிக் கல்லாக நினைத்து நம் சுமைகளை இறக்க நமக்கு அழைப்பு விடுத்தாலும், நம் வாழ்வில் நமக்கென்று மனச்சான்று இல்லையெனில்

நாம் வாழ்வதும் பிறருக்கு சுமையாக மாறிவிடும். இயேசுவைப்போல் சுமைதாங்கிகளாக மாறி வாழ வரம் கேட்போமா? (மத்: 11:28) "பெரும் சுமை சுமந்து சோர்ந்திருப்போரே எல்லோரும் என்னிடம் வாருங்கள் நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன்" என்கிறார் ஆண்டவர்.

**செபம்**

இயேசுவே எங்கள் வாழ்வில் நாங்கள் சுமைகளை சுகங்களாக மாற்றி வாழ வரம் தாரும்.

**முதல்வர்** : எங்கள் பேரில்.....

**அனைவரும்** : எங்கள் பேரில்.....

**முதல்வர்** : மரித்த விசுவாசிகளின்......

## மூன்றாம் நிலை
## இயேசு முதன் முறை தரையில் குப்புற வீழ்கின்றார்

வீழ்தலும் எழுதலும் எல்லோருடைய வாழ்விலும் இயற்கை, ஆனால் வீழ்ந்தே கிடப்பது நம் வாழ்வில் கோழைத்தனம். வீழ்ந்த இயேசு வீழ்ந்தே கிடக்கவில்லை, எழுகின்றார். விதைக்கப்பட்ட விதை மண்ணிலே வீழ்ந்துவிட்டோமே என்று நினைத்தால் முளைத்தெழுவது இயலாது, மாறாக முளைப்பதற்காக புதைக்கப்பட்டு இருக்கின்றேன் என்பதை நினைத்து எழுச்சி கொண்டால் மட்டுமே மண்ணை முட்டி விண்ணை நோக்கி வளரலாம் என்பதை அறிந்த இயேசு வீழ்வதும் எழுவதற்கே என்பதை தன் சிந்தையில் இருத்தியவராய் கீழ் உலகில் வீழ்ந்து புதைக்கப்பட்டோரை சந்திக்கின்றார். நம்முடைய வாழ்வில் வீழ்கின்ற போது சில சந்திப்புகள் சிறந்த பாடமாக அமையும் என்பதை நினைவூட்டும். இந்நிலையில் வீழ்வதும் நம் வாழ்வில் நல்லதே என்பதை அறிய வரம் வேண்டி ஜெபிப்போம். (சீராக் 20:18) "நாவினில் தடுமாறுவதை விட நடைபாதையில் தடுமாறி விழுவதுமேல்!"

**செபம்**

இயேசுவே எங்கள் வாழ்வில் வீழும் வரம் தந்து காத்திட வரம் தாரும்.

**முதல்வர்** : எங்கள் பேரில்.....

**அனைவரும்** : எங்கள் பேரில்.....

**முதல்வர்** : மரித்த விசுவாசிகளின்......

## நான்காம் நிலை
## தாய் மரியா தன் மகனை சந்திக்கின்றார்

**முதல்வர்** : திவ்விய இயேசுவே!......

**அனைவரும்** : அதெனென்றால்......

"சோதனை மேல் சோதனை போதுமடா சாமி வேதனைதான் வாழ்க்கை என்றால் தாங்காது பூமி" என்ற பாடல் வரிகளுக்கு ஏற்ப தன் மகனின் பாடுகளை சிந்தித்துச் சொல்ல முடியாத் துயரை சந்திக்கின்றார் இயேசுவின் தாய். நம் குழந்தைகளை, சிறு கல், கையையோ காலையோ காயப்படுத்தினால் கதறுகின்ற தாய் மனம் நம் முகம் சுளிக்க வைக்கின்றது. தீயினால் ஏற்படும் காயம் தழும்பை ஏற்படுத்துகின்றது. இவைகளுக்கே இவ்வளவு வேதனை இருக்கின்றது என்றால் தாயின் மனம் பிள்ளையை பார்த்து கதறும் அவலத்தைத்தான் நாம் நினைவு கூர்கின்றோம். வாய் வலியும் வயிற்று வலியும் அவரவருக்கு வந்தால்தான் தெரியும் என்பது போல் அன்னை பெற்ற வலியை யாரும் விவரிக்க இயலாது, அத்தகைய வலியிலும் வேதனையிலும் தன் மகனைப் பார்க்கத் துடிதுடித்து அடி எடுத்து வருகின்றார். பெண்களை அனுமதியாத தருணத்திலும் தம் காலடிகளை கணக்கிடாமல் நடக்கின்றார் அன்னை. நம்முடைய வாழ்விலும் அன்னையைப்போல் துன்ப துயரங்களை சந்தித்தாலும் துவண்டு விடாமல் துணிந்து நடக்க வரம் கேட்போம். (எசாயா 48:10) "நான் உன்னை புடமிடுவேன் வெள்ளியைப் போல் அல்ல, துன்பம் எனும் உலை வழியாய் உன்னை தேர்ந்தெடுத்தேன்."

**செபம்**

இயேசுவே துன்பங்களால் துளையிடப்படும்போது துணிந்து நடந்திட வரம்தாரும்.

**முதல்வர்** : எங்கள் பேரில்.....

**அனைவரும்** : எங்கள் பேரில்.....

**முதல்வர்** : மரித்த விசுவாசிகளின்......

## ஐந்தாம் நிலை
## சீமோன் உதவி செய்கின்றார்

**முதல்வர்** : திவ்விய இயேசுவே!......

**அனைவரும்** : அதெனென்றால்......

"நன்மை செய்ய ஒருவருக்கு தெரிந்திருந்தும் அவர் அதைச் செய்யாவிட்டால் அது பாவம்" (யாக் 4:17) நன்மை எது என்பதை நன்கு அறிந்த சீரேன் ஊரை சார்ந்த சீமோன் இயேசுவின் சுமைகளை பகிர்ந்து நன்மை செய்து பாவத்தை அகற்றக் கற்றுக் கொள்கின்றார். பிறரின் துன்பத்தை சுமைகளை வலிகளை வேதனைகளைப் பார்த்து வெஞ்சினத்தாலும் பொறாமையினாலும் அதைச் செய்யாது விட்டு விடுகின்றோம், போட்டி, பொறாமை, கடின உள்ளம் ஒருவருடைய உள்ளத்தை இருளாக்கும்போது நன்மை ஒரு நகைப்புப் பொருளாக மாறிவிடுகிறது. நன்மை செய்யத் தெரிந்தும், வாய்ப்புக் கிடைத்தும், வசதிகள் இருந்தும் நம்முடைய மெத்தனத்தன்மையால் நன்மையை மட்டப்படுத்தும்போது, முடக்கி விடும்போது மனிதத்தன்மையை மறந்து மிருகமாக்கப்படுகின்றோம். சீமோனைப் போல துணிச்சலோடு நன்மை செய்ய கற்றுக்கொள்வோம். (சீராக் 3:31) "நன்மை செய்தோருக்கே நன்மை செய்வோர் தங்களது எதிர்காலத்தை எண்ணி செயல்படுகின்றனர்."

**செபம்**

இயேசுவே எங்களது எதிர்காலத்தை எண்ணி செயல்படாது நன்மை செய்ய வரம் தாரும்.

**முதல்வர்** : எங்கள் பேரில்.....

**அனைவரும்** : எங்கள் பேரில்.....

**முதல்வர்** : மரித்த விசுவாசிகளின்......

## ஆறாம் நிலை
## வெரோணிக்கா இயேசுவின் முகத்தை துடைக்கின்றாள்

**முதல்வர்** : திவ்விய இயேசுவே!......

**அனைவரும்** : அதெனென்றால்......

அகத்தின் அழகு முகத்தில் தெரியும் என்பர். ஆனால் முகத்தின் அழகை கைத்துணியில் கோலமிட்டவள் என்ற பெயர் நம் வெரோணிக்காவை மட்டுமே சாரும். சீனாய் மலையில் மோசே ஆண்டவரோடு பேசிய பின்பு அவரது முகத்தை யாரும் கண்டுகொள்ள முடியவில்லை ஆனால் வெரோணிக்கா இயேசுவோடு பேசிய போது அவள் இயேசுவை யார் என அடையாளம் கண்டுகொள்ள முடிந்தது, அதனால்தான் இயேசுவின் களையிழந்த, வியர்வை சிந்திய முகத்தை துடைத்தபோது இயேசுவின் முகத்தை அச்சுப் பதிவாக துணியில் எடுத்துக்கொண்டாள். உயிரற்ற துணிக்கே கிறிஸ்து இயேசுவை வெளிப்படுத்திக் காட்டக்கூடிய இவ்வளவு பெரிய சக்தி இருக்கிறது என்றால், கிறிஸ்தவன் கிறிஸ்தவள் என்ற பெயரைத் தாங்கிக்கொண்டு கிறிஸ்து இயேசுவை நம்முடைய பேச்சிலும் செயலிலும் அச்சுப் பதிவாக அடையாளப்படுத்திக் காட்ட முடியவில்லை என்றால் நாம் உயிரற்ற துணியிலும் கேவலமானவர்கள் என்பதை சுட்டிக் காட்டுகின்றது. எனவே வெரோணிக்கா கண்டு கொண்ட இயேசுவின் முகத்தையும் துணியில் காணப்பட்ட இயேசுவின் முகத்தையும் நம் வாழ்வில் அச்சுப் பதிவாக ஏற்று பிறர் வாழ்விற்கு நம்முடைய வாழ்வாலும் வார்த்தையாலும் இயேசுவின் முகத்தை அடையாளப்படுத்தக் கற்றுக் கொள்வோம். (1சாமு 16:7) "மனிதனோ முகத்தை பார்க்கின்றார், ஆண்டவரோ அகத்தை பார்க்கின்றார்!"

**செபம்**

இயேசுவே எங்கள் அக அழகில் உம் முக அழகை வெளிப்படுத்த வரம் தாரும்.

**முதல்வர்** : எங்கள் பேரில்.....

**அனைவரும்** : எங்கள் பேரில்.....

**முதல்வர்** : மரித்த விசுவாசிகளின்......

## ஏழாம் நிலை
## இரண்டாம் முறை கீழே விழுகின்றார்

**முதல்வர்** : திவ்விய இயேசுவே!......

**அனைவரும்** : அதெனென்றால்......

உங்களுடைய வாழ்வில் யாரையேனும் வெட்டிக் குழிதோண்டி புதைத்திட வேண்டும் என்று நினைத்தால் அதை எனக்கே செய்யுங்கள் என்றதாம் விதை. உங்கள் வாழ்க்கையில் யாரையேனும் வெட்டிச் சாய்க்க வேண்டும் என்றால் அதை எனக்கே செய்யுங்கள் என்றதாம் வாழை மரம். உங்களுடைய வாழ்வில் யாரையேனும் கை காலை முறித்து ஒடித்துப் புதைக்கவேண்டும் என்றால் அதை எனக்கே செய்யுங்கள் என்றதாம் முருங்கை மரம். நம்முடைய வாழ்விலும் எப்போதெல்லாம் வீழ்ச்சியை சந்திக்கின்றோமோ இத்தகைய எண்ணங்கள் தோன்றி மறையலாம். ஆனாலும் இரண்டாம் முறை இயேசு வீழ்ச்சியை சந்தித்தாலும் துவண்டு விடாமல் துணிந்து எழுகின்றார். விதையைப்போல் முளைத்து எழுகின்றார். வாழைபோல் தழைத்து எழுகின்றார். முருங்கைபோல் முயற்சி கொண்டு எழுகின்றார். எத்தனை முறை வெட்டினாலும் வாழை மீண்டும் தளிர்விடுவது போல் நம் வாழ்விலும் இயேசுவைப் போல் எழுந்து வீறு நடை போட அருள் வேண்டி பயணிப்போம். (லூக்2:34) “இக்குழந்தை பலரின் வீழ்ச்சிக்கும் எழுச்சிக்கும் காரணமாய் இருக்கும்!”

**செபம்**

இயேசுவே நாங்கள் வீழ்ச்சிக்கு உள்ளாக்கப்படும் போது எழுச்சி கொண்டு எழுந்திட வரம் தாரும்.

**முதல்வர்** : எங்கள் பேரில்.....

**அனைவரும்** : எங்கள் பேரில்.....

**முதல்வர்** : மரித்த விசுவாசிகளின்......

## எட்டாம் நிலை
## எருசலேம் பெண்களுக்கு ஆறுதல்

**முதல்வர்** : திவ்விய இயேசுவே!......

**அனைவரும்** : அதெனென்றால்......

இயேசு துவண்ட நிலையில் இருந்தாலும் சோர்ந்து போய் இருந்தாலும் சிலுவை பாரத்தின் பளு ஒருபுறம் இழுத்தாலும் தன்னுடைய வார்த்தையால் தெம்பூட்டுகின்றார். நம்பிக்கையை உறுதிப்படுத்த வார்த்தையால் உரமூட்டுகின்றார். "எனக்காக அழாதீர்கள், உங்களுக்காகவும் உங்கள் சந்ததியினருக்காகவும் அழுங்கள்" என்று உற்சாகமூட்டுகின்ற நிலை உன்னத நிலை என்பதை சிந்திக்க அழைக்கின்றார். தாயின் காலில் முள்குத்தியிருக்கும் வேளையில் தன் பிள்ளை நெருப்பைத் தொடுவதைக் கண்டு எந்தத் தாயும் வெறுமனே நின்று விடுவதில்லை. வலியைப் பொருட்படுத்தாமல் தன் பிள்ளையைக் காப்பாற்றும் தாகம் தன் வலியை மறக்கச் செய்துவிடும்; அதேபோன்று இயேசு சுயத்தை மறந்து பிறர் சுகம் காணச் செய்கின்றார். தன் வலியை மறந்து வார்த்தையால் வாழ்வு கொடுக்கின்றார். மெழுகு தன்னையே கரைத்து பிறருக்கு ஒளியூட்டுவதுபோல இயேசு தன்நிலை மறந்து பிறர் வாழ்விற்கு ஒளியேற்றுகின்றார். நாமும் நம் காயங்களை மறந்து பிறர் காயங்களுக்கு மருந்திடும்போதுதான் அத்தகைய உன்னத நிலை அடைய முடியும். (நீதிமொழி:31:26) "ஞானத்தோடு பேசுபவர் அன்போடு அறிவுரை கூறுவார்!"

**செபம்**

இயேசுவே ! பிறருக்கு ஆறுதல் கூறும்போது நாங்கள் அடையும் இன்னல்களையும் இடையூறுகளையும் தாங்க வரம் தாரும்.

**முதல்வர்** : எங்கள் பேரில்.....

**அனைவரும்** : எங்கள் பேரில்.....

**முதல்வர்** : மரித்த விசுவாசிகளின்......

## ஒன்பதாம் நிலை
## மூன்றாம் முறை கீழே விழுகின்றார்

**முதல்வர்** : திவ்விய இயேசுவே!......

**அனைவரும்** : அதெனென்றால்......

நம்முடைய சமுதாயத்தாலும், பங்காலும், நட்புகளாலும், உறவுகளாலும் புறம் தள்ளப்பட்டு கீழே விழும்போது. நாம் நமது நம்பிக்கை இழந்து வீழ்கின்றோம். நாம் நம்முடைய வாழ்வில் குறிப்பிட்ட பழக்கத்திற்கு அடிமையாகி வீழ்ந்து கிடக்கின்ற சுழல்களில், இறைவனை மறந்து வீழ்ந்து விடுகின்றோம். மனித வார்த்தைகளை முன்னிறுத்தி இறைவார்த்தையை பின்னிறுத்துகின்றபோது மனிதத்திலே வீழ்ந்து விடுகின்றோம். நம் வாழ்வில் ஆண் பெண்ணையோ, பெண் ஆணையோ முன்னிறுத்துகின்ற போது அவர்களின் அன்பில் வீழ்ந்து விடுகின்றோம். குடிக்கு வாழ்வில் முன்னுரிமை கொடுக்கும்போது குடிப் பழக்கத்திற்குள் வீழ்ந்து விடுகின்றோம். ஆன்மிகவாதிகள் தன் நிலை மறந்து அரசியல்நிலையில் வீழ்வதாலும், அரசியல்வாதிகள் ஆன்மிகத்தில் வீழ்வதாலும் தான் நம் இந்தியா வீழ்ச்சி நிலையை சந்திக்கின்றது. இப்படி பல வீழ்ச்சியை நாம் சந்தித்தாலும், மீண்டும் எழுந்து நடைபயில கற்றுத் தருவதுதான் ஒவ்வொரு ஆண்டும் வரக்கூடிய தவக்காலம். இக்காலங்களை முறையாகப் பயன்படுத்தும் போது நம்மில் இருக்கின்ற வீழ்ச்சிகளைக் களைந்து விண்ணக வாழ்வை நோக்கி வீறு நடை போட்டு எழுந்து வாழ அழைக்கின்றார் நம் இயேசு. (ஏசா 8:15) “அவர்களில் பலர் தடுமாற்றம் அடைவார், இடறி வீழ்வார்; எழு ஒளி வீசு (எசா 60:1).”

**செபம்**

இயேசுவே! எங்கள் வாழ்வில் பல்வேறு வீழ்ச்சிகளை நாங்கள் சந்திக்கின்றபோது மீண்டும் எழுந்து உம்மீது கொண்டுள்ள விசுவாசத்தில் நடை பயில எங்களுக்கு அருள்தாரும்.

**முதல்வர்** : எங்கள் பேரில்.....

**அனைவரும்** : எங்கள் பேரில்.....

**முதல்வர்** : மரித்த விசுவாசிகளின்......

# பத்தாம் நிலை
# ஆடைகளை களைகின்றார்கள்

**முதல்வர்** : திவ்விய இயேசுவே!......

**அனைவரும்** : அதெனென்றால்......

ஆடை என்பது மானத்தை மறைப்பதற்காகவே கொண்டுவரப்பட்ட அவசியப் பழக்கம், நாம் சில நேரங்களில் அழகுக்காக, ஆடம்பரத்துக்காக, ஆடைகளை அணிகின்றோம், நம் மானத்தை விளம்பரப் பொருளாக வீதியில் விலைபோட்டுக் காட்டுகின்றோம். சிந்திப்போம், மானத்தை மறைப்பதற்காக ஆடை அணிகின்றோமா? அல்லது மற்றவர் பார்க்க வேண்டும் என்று ஆடை உடுத்துகின்றோமா? இப்படிப்பட்ட செயல்களை செய்கின்ற பொழுதெல்லாம் அவர் மானத்தை இணைந்தே உரித்தெடுக்கின்றோம். ஆனால் அத்தகைய செயல்பாடுகளாகிய ஆடையையும் உடலில் இருந்து உரித்து எடுக்கின்ற அவலத்தை சந்திக்கின்றார் நம் இயேசு. வியர்வையினாலும் இரத்தத்தினாலும் சாட்டை அடிகளாலும் உடலோடு பின்னிப் பிணைந்து இருக்கின்ற அவரது ஆடையைக் களைகின்ற நிகழ்வை நாம் சிந்திப்போம். நமது காயங்களில் உள்ள காயத் துணிகளை மருத்துவர்கள் நீக்குகின்றபோது வரும் வலியை நம்மால் தாங்கிகொள்ள முடியாமல் முகம் சுளிக்கின்றோம், கதறுகின்றோம், கண்ணீர் விடுகின்றோம். ஆனால் உடல் முழுவதும் சாட்டை காயங்களால் இயேசுவின் உடலில் ஒட்டிய ஆடைகளை உரிக்கின்ற போது எப்படிப்பட்ட அனுபவத்தை, சித்திரவதையை அவர் அனுபவித்திருப்பார் என்பதை நாம் அறியலாம். நம்முடைய பாவங்களுக்காய், நம்முடைய காயங்களுக்காய் அவர் இரத்தம் சிந்தி மீட்பைப் பரிசாக பெற்றுத் தருகின்றார். (தி.வெளி:3:17) “எனக்கு செல்வம் உண்டு, வளமை உண்டு, ஒரு குறையும் இல்லை என நீ சொல்லிக்கொள்ளுகின்றாய், ஆனால் இழிந்த, இரங்கத்தக்க, வறிய பார்வையற்ற, ஆடையற்ற நிலையில் நீ இருக்கின்றாய் என்பது உனக்கு தெரியவில்லை.”

**செபம்**

இயேசுவே! எங்களுடைய தீய வார்த்தைகளாலும் பழக்கத்தாலும் பிறர் மானத்தை கெடுத்துவிடாமல் வாழ வரம் தாரும்.

**முதல்வர்** : எங்கள் பேரில்.....

**அனைவரும்** : எங்கள் பேரில்.....

**முதல்வர்** : மரித்த விசுவாசிகளின்......

## பதினொன்றாம் நிலை
## சிலுவையில் அறைகின்றார்கள்

**முதல்வர்** : திவ்விய இயேசுவே!......

**அனைவரும்** : அதெனென்றால்......

சிலுவை என்பது யூதர்களின் கலாச்சாரப் பார்வையில் ஓர் அவமானத்தின் சின்னம் அசிங்கத்தின் அடையாளம், சிலுவைச் சாவு என்பது ஒரு கேவலமான சாவு. ஆனால் எப்போது இயேசு அவற்றைத் தொட்டாரோ அப்போது புனிதத்தின் பொக்கிஷமாக, புனிதத்தின் அடையாளமாக, புனிதத்தின் அங்கமாக மாற்றப்பட்டது. நம்முடைய வாழ்விலும் நம் பாவங்களை கிறிஸ்துவின் சிலுவையில் எப்போது கிறிஸ்துவோடு இணைந்து அறைகின்றோமோ அன்றே நம் மனங்கள் புனிதமாக்கப்படுகின்றன. அதனால்தான் ஒவ்வொரு ஆண்டும் தாயாம் திரு அவை புனித வெள்ளியை கொடையாகக் கொடுக்கின்றது. சிலுவையில் அறையப்பட்டு மண்ணிலே புதைக்கப்பட்டு மூன்றாம் நாள் உயிர்த்த இயேசு கிறிஸ்து போல் புதுமனிதர்களாக பாவம் அற்றவர்களாக இயேசு கிறிஸ்துவோடு நாமும் உயிர்த்தெழ வேண்டும் என்று சிந்திக்க அழைப்புவிடுக்கிறது. பாவ இயல்பை, பாவ நாட்டத்தை, தீய பழக்கத்தை தீய சிந்தனைகளை, ஜாதியத்தை, உயர்ந்தவன், தாழ்ந்தவன் என்ற பாகுபாட்டை, பிரிவினைகளை, பிரச்சனைகளை, இன்றோடு சிலுவையில் அறைந்து மீட்கப்பட வேண்டும் என்பதற்காக நம்மையும் நம்குடும்பத்தையும் சிலுவையில் கிறிஸ்துவோடு இணைந்து அறைவோம். உயிர்ப்பை நோக்கி பயணிப்போம். (எபி 6:6) "இவர்களே இறைமகனை சிலுவையில் அறைந்து வெளிப்படையாக இழிவுபடுத்துகின்றவர்கள் ஆவார்."

**செபம்**

இயேசுவே! எங்களின் பாவ இயல்பை நாட்டத்தை இன்றோடு சிலுவையில் அறைந்திட அருள் தாரும்

**முதல்வர்** : எங்கள் பேரில்.....

**அனைவரும்** : எங்கள் பேரில்.....

**முதல்வர்** : மரித்த விசுவாசிகளின்......

## பன்னிரெண்டாம் நிலை
## உயிர் விடுகின்றார்

**முதல்வர்** : திவ்விய இயேசுவே!......

**அனைவரும்** : அதெனென்றால்......

இறப்பு என்பது ஒரு குறிப்பிட்ட வயதைக் கடந்து வரும்போது அதனை நாம் கொஞ்சம் ஏற்றுக் கொள்ளும் மனப்பக்குவம் அடைகின்றோம். அதே இறப்பு இளம் பருவத்திலும், நடு வயதிலும் வந்தால் சற்று ஆழ்ந்த இழப்பை ஏற்படுத்துகிறது. அதிலும் மக்கள் மத்தியில் பெயர் வாங்கியவர்களாக இருக்கின்றார்கள் என்றால் மக்கள் கூட்டம் அதிகம் இருக்கும். ஒரு மனித இறப்பிற்கே இப்படி இருக்கின்றது என்றால் இறைமகன் இயேசுவின் இறப்பு என்பது இன்றும் என்றும் ஒரு தாக்கத்தை எல்லோருடைய இதயத்திலும் ஏற்படுத்துகிறது உண்மைதான். அதனால்தான் தலைமுறை தலைமுறையாக நினைவுகூரும் அளவுக்கு ஓர் அதிர்வலையை ஏற்படுத்திக் கொண்டே இருக்கிறது. இன்று நீங்களும் நானும் மறையாத தழும்பாய் தடம் பதித்திருக்கின்றது நம் இயேசுவின் இறப்பு. அவரின் இறப்பு தாக்கத்தை தடத்தை பதித்தது போல் நம் பாவத்தால் அவரைக் கொன்று கொண்டே இருக்கின்றோம்! சிந்தித்து நம் பாவத்தை அவரோடு புதைத்திடுவோம். நம்மை அவர் கரங்களில் ஒப்புக்கொடுப்போம். (தி.பா 31.5) “தந்தையே உமது கையில் என் ஆவியை ஒப்படைக்கின்றேன்!”

**செபம்**

இயேசுவே! நீர் உம் தந்தையின் கையில் ஆவியை ஒப்படைத்தது போல் எங்களை ஒவ்வொருநாளும் உம் கையில் ஒப்படைக்க கற்றுத் தாரும்.

**முதல்வர்** : எங்கள் பேரில்.....

**அனைவரும்** : எங்கள் பேரில்.....

**முதல்வர்** : மரித்த விசுவாசிகளின்......

## பதிமூன்றாம் நிலை
## தாய் மடி

**முதல்வர்** : திவ்விய இயேசுவே!......

**அனைவரும்** : அதெனென்றால்......

பிள்ளைகள் தான் தாயை அடக்கம் செய்யும் நிலை போய் தாயே பிள்ளையைப் புதைக்கும் நிலையில் இருப்பவள் தான் நம் அன்னை மரியா. இந்த நிலை நம் இல்லத்திலும் நம் அக்கம் பக்கத்து வீடுகளிலும் நடந்திருப்பதை நாம் அறிந்திருப்போம். அவர்களின் நிலைமையை சற்று சிந்திப்போம். இது போன்ற வலிகளைத் தாங்குகின்ற நபர்களை அன்னை மரியாவின் வேதனைகளோடு ஒப்பிட்டுப் பார்ப்போம். தன் துன்பத்தால், வேதனையால், அசிங்கத்தால் தாம் ஒரு வலியில் இருந்தாலும், மேலும் மேலும் மற்றவர் அல்லது வீட்டில் உள்ளவர்கள், உறவினர்கள், பங்கு உறுப்பினர்கள், அதிகாரத்தில் உள்ளோர் வேதனை தரும் போது தாங்கிக் கொள்ள வரம் வேண்டி, அன்னை மரியா தன் மகனைத் தாங்கியதுபோல் நாமும் நம் துன்பங்களைத் தாங்கி நம் பாவங்களுக்காய் அழுது பார்க்கும் போது அன்னையின் வலியை அனுபவிக்க முடியும். (தி.பா. 131:2) "என் நெஞ்சம் நிறைவும் அமைதியும் கொண்டுள்ளது, தாய் மடி தவழும் குழந்தையென என் நெஞ்சம் என்னகத்தே அமைதியாயுள்ளது."

**செபம்**

இயேசுவே! உம் தாயை எங்கள் அனைவருக்கும் தாயாகக் கொடுத்து நிறைவையும் அமைதியையும் கொடுத்தருளும்

**முதல்வர்** : எங்கள் பேரில்.....

**அனைவரும்** : எங்கள் பேரில்.....

**முதல்வர்** : மரித்த விசுவாசிகளின்......

## பதிநான்காம் நிலை
## அடக்கம்!

**முதல்வர்** : திவ்விய இயேசுவே!......

**அனைவரும்** : அதெனென்றால்......

அடக்கம் என்பது அத்தோடு அடங்கி போய் விடுவதற்காக அல்ல, முடங்கிப் போவதற்கு அல்ல. விதைகள் மண்ணோடு மண்ணாகப் புதைக்கப்படுவதில்லை என்றால் முளைத்தெழுவது கிடையாது. நம் ஆண்டவர் புதைக்கப்படுவது விதையைப் போல் முளைத்தெழுவற்காகவே. இயேசுவோடு நம் பாவங்களை பாவ இயல்பை, பாவ நாட்டத்தை, புதைத்து விட்டு அவரோடு உயிர்ப்பைப் பரிசாக்கிக் கொள்ள நாம் அழைக்கப்படுகின்றோம். இந்த இறுதி நிலையை முடித்துவிட்டு வெறுமனே வீடு சென்றால் இன்னும் வீதியில் வீடுகளில்தான் வாழ வேண்டியிருக்கும். நம் பாவத்தை பாவச் செயலை இன்றோடு இந்த நிமிடத்தில் குழி தோண்டிப் புதைத்து விட்டுச் செல்லும்போதுதான் விண்ணகத்திற்கு இடம் தயார் செய்ய முடியும். (1கொரி:15:4) "மறை நூலில் எழுதியுள்ளவாறு அடக்கம் செய்யப்பட்டார்."

**செபம்**

இயேசுவே! எங்களின் பாவ இயல்பை நாட்டத்தை மண்ணிலே புதைத்துவிட்டு புதுமனிதனாக உயிர்த்தெழ வரம் தாரும்.

**முதல்வர்** : எங்கள் பேரில்.....

**அனைவரும்** : எங்கள் பேரில்.....

**முதல்வர்** : மரித்த விசுவாசிகளின்......

# அன்பின் பணியாளர்கள் சபை
## (குவனெல்லியன்ஸ்)

### உங்களை அன்போடு அழைக்கிறது.

**எனக்கென்று யாருமே இல்லையே என்று**
ஏங்கும் மனவளர்ச்சி குன்றியோர், உடல் ஊனமுற்றோர்,
**கைவிடப்பட்ட குழந்தைகள் மற்றும் முதியவர்களை**
அரவணைத்து நாங்கள் இருக்கிறோம் என்று சொல்லி
**பராமரித்து வருகிறார்கள்.**
**அன்பின் பணியாளர்கள் சபை தந்தையர்கள்**
மற்றும் இறைபராமரிப்பு மரியன்னை அருட்சகோதரிகள்.

**இப்படிப்பட்ட அர்ப்பணிப்புடன்**
**அன்புப்பணிசெய்ய,**
இறையன்பின் அன்பை
உன் கரங்களால் **வாரி வழங்கிட**
**உனக்கு விருப்பமா?**
இறையன்பின் அன்பை
**உன் கரங்களால் பகிர**
**விருப்பமா?**

**தொடர்புக்கு**

இறையழைத்தல் இயக்குநர்

தொன் குவனெல்லா உயர் குருமடம்,
23, பழைய காவல் நிலையம் ரோடு,
கரையான்சாவடி, பூவிருந்தவல்லி,
சென்னை 600 056
தொலைபேசி : 044 26274795
செல் : 91769 79488

இறையழைத்தல் இயக்குநர்

புனித வளனார் குருமடம், அன்பின் பணியாளர்கள் சபை,
சாமிப்பிள்ளை நகர், கடலூர் 607 001.
(குவனெல்லியன்ஸ்) தொலைபேசி : 04142 296766,
இயேசுவனம், நடேசபுரம், புளியடிதம்மம் அஞ்சல் செல் : 95661 35192
சருகனி வழி, சிவகங்கை மாவட்டம் 630 411 அலைபேசி : 89403 27908



குவனெல்லிய கலைத்தொடர்பகம் வெளியீடு

**விலை – 100**